# VANAJAKSHI

A SOCIAL TAMIL DRAMA

MADURA
SRI BALA SHUNMUGANANDA
SABHA,
T. K. Sankaran, Manager.

BY
VARAKAVI-THIRU
A. SUBRAMANIA BARATHIAR
Author of "Jadavallabar & Bhanumathi"

THIRD EDITION
REVISED AND ENLARGED

S. G. AIYER & Co
BOOKSELLERS & PUBLISHERS
TRIPLICANE, MADRAS

1921

Copyright]

[Price As. 10.

# வனஜாக்ஷி

ஒரு ஜனசார தமிழ் நாடகம்

மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

இது

திரிசிரபுரம்

பிரஹ்மஶ்ரீ-திரு. அ. சிவானந்தசாகர யோகீசுவரர்

மருகரும், மாணாக்கருமாகிய

அலகரை

வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்

எழுதியது.

மூன்றவது பதிப்பு

சென்னை, திருவல்லிக்கேணி,

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனியாரால்

பிரசுரிக்கப்பட்டது.

1921

All Rights Reserved.] [விலை அணா 10

PRINTED AT
THE TATA PRINTING WORKS,
5, THAMBU CHETTY ST., MADRAS.

Copyright of this Book belongs to the Publishers
S. G. AIYER & CO.

உ

செந்திலாண்டவன் திருவடிதுணை.

# முகவுரை

தற்கால ஜனுசாரத்தை அநுசரித்த நாடகமொன்று எழுதியனுப்புவார்க்குத் தக்க பரிசளிக்கப்படும் என சென்னை சுகுண விலாச சபையார் சுதேசமித்திரனில் சென்ற சில மாதங்கட்கு முன்னர் ஒரு விளம்பரம் செய்திருந்தனர். அது கண்ட எமது நண்பரில் ஒருவர் அப்பொழுதே அம்மாதிரி ஒரு நாடகம் எழுதித்தரும்படி கேட்டனர். நாம் அப்பொழுது ஒப்புக்கொண்டு செய்துவந்த சில அவசரவேலையினிமித்தம் எமது நண்பரின் வேண்டுகோளுக் கிணங்க முடியாமற் போயிற்று. பிறகு அதை நாம் மறந்தும் போனோம்.

அதைப்பற்றி இப்பொழுது எமது நண்பர் மீண்டும் நினைப்பூட்டி விரைவில் முடித்துத் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். ஆகவே இச்சிறுபுத்தகம் எழுதத் தொடங்கி வாரம் ஒன்றில் முடித்துக் கொடுத்தோம்.

இது கட்டுக்கதையல்ல. உண்மையில் நடந்தது. இந் நாடக அங்கத்தினரில் இரண்டொருவர் தவிர ஏனையோர் யாவரும் ஜீவித்திருக்கின்றனர். இவ்விஷயம் நடந்தது இவ்வருஷம் இம்மாதம் இத்தேதியென்று குறிப்பிடமுடியுமாயினும், சில காரணங்கருதி குறிப்பிடாது விடுத்தனம். சுமார் இருபத்தைந்து வருஷமிருக்கலாம். நாடகப்போக்கை யநுசரித்தோ கதையின் இனிமையைக் கருதியோ நாம் எதையும் சேர்த்துக்கொள்ளவில்லை. நடந்ததை நடந்தபடியே வரைந்துள்ளோம். ஆதிற் சில விஷயங்கள் இப்படியும் நடந்திருக்குமாவெனச் சந்தேகிக்கக்கூடியனவா யிருக்கும். அவையாவன:—

1. கதாநாயகி வனஜாக்ஷி என்னும் பெண்மணி தனித்திருக்கையில் ஜானகிராமனென்னும் அவளுடைய அத்தான் தன்னை

விவாகஞ்செய்துகொள்ளும்படி கேட்கின்றனர். அம்மாது அவரை மறுத்துப் பேசுகின்றனள்.

2. அந்தப் பெண்மணி மாஜிஸ்டிரேட்டினிடம் துணிகரமாய்ப் பேசி மறுக்கின்றனள்.

3. கடைசியில் தான் நாயகனுகக்கொண்ட ஒரு வக்கீலிடம் தன் உள்ளக் கருத்தைக் கூசாமல் வெளியிட்டுச் சம்மதம் தெரிவிக்கின்றனள்.

வாசகர்களே! கதாநாயகியாகிய வனஜாக்ஷியினுடைய இப்படிப் பட்ட துணிகரமான செய்கைகளைக் கண்டே இப்புஸ்தக மெழுதப் புகுந்தோம். ஆகவே இதில் எதுவும் கற்பனை கிடையாது. சில விடங்களில் இனிமை கருதிச் சில பாடல்களை யாமே யியற்றியும் ஆன்ருேருடையதை மேற்காட்டியும் வரைந்திருக்கிருேம்.

இதன் முக்கிய அங்கத்தினராகிய ஜானகிராமனும், கோகர்ண தீக்ஷிதனும் இணைபிரியா நண்பர்கள். ஆகவே அவர்களிருவரும் பெரும்பாலும் ஓரிடத்திற் காணப்படுவார்கள். முன்னவர் சோதிடர், பின்னவர் விகடகவி. இவர்களிருவரும் இதில் அமைந்தது பெரும் விசேஷமாகும்.

இம்மாதிரியான நாடகம் நாம் இதுவரையில் எழுதியதில்லை யென்பது நாம் முற்கூறியுள்ள பீடிகைகொண்டே யறியலாம். இதில் ஏதேனும் குற்றங் குறைகள் காணப்படினும் அவைகளைத் தயைகூர்ந்து எமக்கறிவித்துத் திருத்தவேண்டுகின்ருேம். இப்பதிப்பில் இனி முடியாதெனினும், மறுபதிப்பிலேனும் அக்குற்றங்களின்றிப் பிரசுரிக்கக்கூடுமல்லவா?

திருவல்லிக்கேணி,
14—9—11.

இங்ஙனம்,
வரகவி-திரு. அ. சுப்பிரமண்ய பாரதி.

# வனஜாக்ஷி

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஜானகிராமய்யர் | ... | வனஜாட்சியின் அத்தான். |
| கோகர்ணதீக்ஷிதர் | ... | ஜானகிராமையருடைய நண்பர். |
| சாம்பசிவையர் | ... | வனஜாக்ஷியின் தந்தை. |
| சுப்பராயய்யர் | ... | வனஜாக்ஷியின் அக்காள் புருஷன். |
| சிங்கமையங்கார் | ... | வாதி வக்கீல். |
| கிருபாசங்கரையர் | ... | பிரதிவாதி வக்கீல். |
| ராமு | ... | ஜானகிராமையர் தம்பி. |
| மாசிலாமணி நாயுடு | ... | மாஜிஸ்டிரேட். |
| நாசிங்கராவ் | ... | இன்டர்பிரிட்டர். |
| காதர்ஹுஸேன் | ... | திருச்சியில் ஒரு பிரபல வியாபாரி. |
| பாபுரெட்டியார் | ... | ஜானகிராமையர் நண்பர். |
| வனஜாக்ஷி | ... | கதாநாயகி. |
| சிவப்பிரியை. | ... | வனஜாட்சியின் தாயார். |
| அம்பிகை | ... | வனஜாட்சியின் தோழி. |
| பாலாம்பாள் | ... | வனஜாக்ஷியின் அத்தை. |

பக்கீர்மகமது, ரத்னம், சோமு, வரதையங்கார், குடுகுடுப்பைக்காரன், குப்பு, அர்த்தநாரி, புரோகிதர், மதுராம்பாள், சேவகன், தாயம்மாள் (ஜானகிராமன் தாயார்), பார்வதிக்கிழவி, சீதாபதிஐயர், சந்தணப்பத்தன், ராமாமிருதமையர் முதலியவர்கள்.

நாடகம் நிகழிடம்:—திருச்சி, தருக்கம், மங்கலம், புத்தூர், ராயபுரம், குழித்தண்டலை முதலியன.

# இனிய தமிழ் நாவல்கள்

**வரதசுந்தரம்** 2 0 0

அல்லது துப்பறியும் இரண்டு நக்ஷத்திரங்கள்

இது ஒரு துப்பறியும் இனிய தமிழ் நாவல். இவ்வரிய நாவல் ஆரணி குப்புசாமி முதலியாரால் இயற்றப்பட்டது. இதில் ஒருவனைக் கொலைசெய்து ஒளிந்துகொண்டிருக்கும் கொலையாளிகளைக் கொலை நடந்த 20 வருஷம் கழித்துத் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் கண்டு பிடிப்பது மிக்க அற்புதமாயிருக்கும். கொலையாளிகளைக் கண்டுபிடிக்கத் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் செய்யும் வீரச்செயல்கள் படிக்கப் படிக்க வியப்பை யுண்டாக்கும்.

**பெண்மணி** 0 12 0

அல்லது இப்பெண்மணியே என் கண்மணி

ஓர் புதிய துப்பறியும் இனிய தமிழ் நாவல்

இதில் ஒரு ஸ்திரீயின் ஏராளமான சொத்துக்களை அதன் உண்மையான வார்சுதாரரான சிலோன் தலவாக்கொல்லை எஸ்டேட்தார் பொன்னம்பலம்பிள்ளைக்குக் கிடைக்கவொட்டாமற் றடுத்துத் தாமே அடையவிரும்பும் பேராசைக்காரர்களான அவர் குமாஸ்தா துன்மதி, அதுவரையில் அச்சொத்தை மேல்பார்த்து வந்த லாயர் மகானுபாவர், பல்வைத்தியர் பூஷணம்பிள்ளை, சர்ஜன் சோலைமலைப்பிள்ளை இவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரை ஏமாற்றத் தனித்தனியே செய்யுஞ் சூட்சிகளும் மோசங்களும், அதனால் அவர்கள் பொருளையடைந்தும் அனுபவிக்க முடியாதவாறு அவரவர்கள் மோசத்துக்குத் தக்க தண்டனையாக அவர்கள் துர்மரணமடைவதும், அச்சொத்தை மீட்கச் செல்லும் துப்பறிபவர் வெகு சாமர்த்தியமாய்க் கண்டுபிடித்துப் பெறுவதும், ஆனால் உடனே அவரே மோசம்போய் அடைந்தபொருளை இழப்பதும், ஆயினும் அவர் விடாமுயற்சியால் மறுபடியும் அடைந்து பொன்னம்பலம் பிள்ளையிடஞ் சேர்ப்பதும், அதற்கு வெகுமானமாக அவர் செல்வக் கண்மணியையே பெறுவதாகிய விஷயங்கள் இன்பம் பயக்கும் எளிய நடையில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

**லீலாவதி** 0 12 0

இது ஓர் இனிய செந்தமிழ் நாவல். இது மாயவரம் எஸ். ஏ. ராமஸ்வாமி ஐயரால் இயற்றப்பட்டது. இதில் கல்வியின் மாட்சி, பொறுமையால் வரும் பேறு, துஷ்ட மனைவிகளா லெய்தும் கஷ்டம், நல்லோர் தீயோர்களின் நடக்கைகள், தற்கால முற்கால வழக்கங்கள் முதலியவைகள் தெளிவாய் விவரிக்கப்பட்டுள்ளன.

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம்
திருப்பரங்குன்றம்

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

# வனஜாக்ஷி

## முதல் அங்கம்

### முதற் காட்சி.

இடம்:—திரிசிரபுரத்துள்ள காதர்ஹுசேன் வீட்டு மேல்மெத்தை.

காலம்.—பகல்.

காதர்ஹுஸேன், ஜானகிராமையர், கோகர்ணதீக்ஷிதர் மூவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

கா. ஐயா! சோதிடரே! தாம் இந்த ஊருக்கு வந்து எத்தனை நாளாயிற்று?

ஜா. வாரம் ஒன்றாகிறது மகராஜ்!

கா. வாரமொன்றாயும் இங்குவர இன்றுதானொழிந்ததோ? என் பேரில் அவ்வளவு ஞாபகம்—

கோ. அவருக்கு இப்போது வியாபகம் அதிகமாய்ப் போய் விட்டது; ஞாபகம் எங்கிருந்துண்டாகப் போகின்றது?

ஜா. என்னை உமக்குத் தெரியுமாங் காணும்!

கோ. (சிரித்து) தெரியும்.

[சாயபுவும் புன்முறுவல் செய்கின்றார்.]

ஜா. எப்பொழுது பார்த்திருக்கின்றீர்? ஓர் அடையாளம் சொல்லும்.

கோ. நீர்தான் சோதிடராயிற்றே; சோதிடம் பார்த்துக் கொள்ளுமே.

[மூக்கைத்தொட்டுக்கொள்கிறார்.]

ஜா. (சிரித்து) என்னங்காணும் மூக்கைத் தொட்டுக்கொள் கிறீர்!

கோ. அந்த அடையாளத்தைக் கொண்டு நான் யாரென்று தெரிந்துகொள்ளுமே.

ஜா. ஓகோ! தொடுகுறி சாஸ்திரமா பார்க்கச் சொல்கின் றீர்! வெகு நன்று!!

[சாயபு நகைக்கின்றார்.]

கோ. ஆமா! ஆமா! என்ன ஐயா உமது ஜோஸியம்! இது தெரியாதா ஒரு ஜோஸியனுக்கு?

ஜா. (யோசிப்பவன்போல் அபிநயித்து) உம்மைத் தெரிந்து கொண்டேன். தெரிந்துகொண்டேன்.

[தலையை அசைக்கிறார்.]

முந்தி உழக்கு மாதிரி யிருந்தீர்; இப்போது ஆழாக் காய் விட்டீர்!

கோ. (நகைத்து) வெகு விந்தை! (தலையை யசைத்து) வெகு விந்தை!! உழக்கு ஆழாக்காகும்போது ஆழாக்கு—

[சாயபுவும் சோதிடரும் நகைக் கிறார்கள்.]

ஜா. என்னங்காணும் புதிர்ப்போடுகின்றீர்? ஆழாக்கு மரக் கால்தான்! கேட்கவேண்டுமா இதை!

[நகைக்கின்றார் சாயபு.]

கோ. என்ன ஐயா காணும்! காணும்!! என்கிறீர். பதக்குப் போட்டால் முக்கலங் காணும்! தெரிந்துகொண்டீரா?

இனிக் காணும்! காணும்!! என்னும் வார்த்தை யொன்று போட்டுக்கொண்டு பேசாதேயும் !—இருக் கட்டும். அதனுல் தான் உம்மை நான் கண்டதும் கண்டு கொள்ளவில்லை.

கா. (சிரித்து) சோதிடரும் விகடகவியும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா ? சும்மா பேசுவீர்கள். பொழுது போவதுகூடத் தெரியாது. நீங்கள் ஒருவரையொரு வர் இன்னுரென்று தெரிந்துகொண்டு விட்டீர்களே ! இன்னுமேன் ?

கோ. என்ன மகாராஜ்! நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இனியென்ன பேச்சென்ருல்—ஒருவரை யொருவர் அறிந்த பிற்பாடுதானே பேசவேண்டியதும் அதிகமாயிருக்கும். அப்படி யிருக்க, இனி யென்ன பேச்சென்ருல்—இனிப் பேசக்கூடாதா ? அதெப்படி முடியும் ? நாங்க ளிருவரும் சந்தித்து மாமாங்கம் ஒன் றல்லவா ஆகிறது.

ஜா. ஆமாமா ! மாமாங்கம் ஒன்ருகிறது.

[சோதிடன், சாயபு இருவரும் நகைக்கிருர்கள்.]

கோ. இப்பொழுது தான் கண்டு கொண்டீர் போலும்! மாமாங்கம் ஒன்ருயிற் றென்று சொன்ன பிற்பாடு ஜோஸியம் சொல்வது ஒரு ஜோஸியமா ? என்னைச் சந் தித்தது உமக்கு ஞாபகமில்லை. ஜோஸியத்திலும் கண்டு கொள்ள முடியவில்லை.

கா. (நகைத்து) மாமாங்கம் என்ருல் என்ன ?

கோ. தெரியாதா ? தெரியாவிட்டால் என்ன செய்யவேண்டும்?

ஜோவியரை யல்லவா கேட்கவேண்டும்! என்னை யேன்?

[சாயப்பு நகைத்துச் சோதிடனைப் பார்க்கிறார்.]

ஜா. (நகைத்து) தெரியாதா! கும்பகோணத்தில் நடக்கிறதே!

கா. கும்பகோணத்தில் மாமாங்கம் நடந்தால் அதைப்பற்றி யென்ன இப்போது?

ஜா. அது பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருமுறை வருமல்லவா? நாங்களிருவரும் சந்தித்துப் பன்னிரண்டு வருஷமாகிறது. அதை யப்படிக்காட்டினார் விகடகவி!

கா. (சிறித்து) நன்று! நன்று!! கன்னீ! கன்னீ!!

[கூப்பிடுகிறார் சேவகனை.]

சேவகன் பிரவேசிக்கிறான்.

சே. சலாம்.

[சலாம் செய்கிறான்.]

கா. நேற்று நம் வீட்டுக்கு மாமா வந்திருந்தாங்களே; அவுங்க நம்ப தங்கச்சி வூட்டே யிருக்காங்கோ! உடனே போய் அழைச்சிக்கிட்டு வா!

சே. கீளே வந்திருக்காங்க.

கா. கூப்பிடு.

[சேவகன் போகிறான்.]

சேவகன் பக்கீர் மகம்மதுடன் பிரவேசிக்கிறான்.

கா. (எழுந்து தன் காலைத்தொட்டு நிமிர்ந்து நெற்றில் கை வைத்து) சலாம் மாலேக் சலாம்!

[காதர் சாயபு சலாம் செய்கிறார்.]

கன்னி! நாற்காலி கொண்டுவா!

[சேவகன் நாற்காலி போடுகிறான். பக்கீர் மகம்மது உட்காருகிறார்.]

ஜா. இவர்கள் யார் தெரியவில்லையே!

கா. என்னுடைய தாய் மாமன்; நேற்றுத்தான் ஐதராபாத்திலிருந்து வந்தார். இவருக்குத் தமிழ் செவ்வையாகத் தெரியாது. ஒரு பெரிய வியாபாரி. நான்கு இலட்சம் ரூபாய்க்குச் சொத்துண்டு.

ஜா. ஆகா! அப்படியா! (பக்கீரைப் பார்த்து) வரவேண்டும்; இன்று நான் வந்த சமயம் நல்லது தான்.

கோ. நான் வந்த வேளையோ!

ஜா. எப்படியோ! யார் கண்டது?

கோ. சோதிடம் பார்த்துச் சொல்லுமே.

[பக்கீரும், காதரும் நகைக்கிறார்கள்.]

ஜா. (தனக்குள்) நாம் சோதிடன் என்பதை இவருக்குச் சாதுரியமாய்த் தெரிவித்து விட்டானே (வெளிப்படையாய்) நீர் விகடகவியா யிருந்தால் அதற்குச் சமயமில்லையா? எப்போது பார்த்தாலும் விகடந்தானா?

கோ. (தனக்குள்) நாம் விகடகவி யென்பதையும் நன்றாய்த் தெரிவித்தானிவன். (வெளிப்படையாய்) என் விகடம் என்னை விட்டுப் போகுமா? அது எப்போதுந் தானிருக்கும்!

கா. மாமா! இவர் சோதிடர். இவர் விகடம் செய்பவர்.

[துலுக்கில் தெரிவிக்கிறார்.]

பக். நமக்கிச் சந்தோஷமாச்சு பார்க்க; நமக்கிச் சொல்வான் ஜோஸியம்.

கா. சொல்வார். மெத்தச் சமர்த்தர். இப்பொழுது ஒரு பரீக்ஷை பாருங்கள். அடே கன்னி! ஒரு கை மொச்சைக் கொட்டை வாரிக்கொண்டு வா.

[கன்னி ஒரு கைநிறைய மொச்சக் கொட்டை வாரிக்கொண்டு வருகிறான்.]

கா. ஐயா! சோதிடரே! இதில் எத்தனை மொச்சைக் கொட்டை யிருக்கிறது? சொல்லும் பார்ப்போம்!

கோ. சொன்னால்—

ஜா. அப்படிக்கேளும்! அதுதான் உற்ற நண்பனுக் கழகு.

கோ. பின் சும்மாவா?

கா. சொல்லுங்காணும் பார்ப்போம், மாமா வந்திருக்கிறார்.

கோ. யார் வந்திருந்தாலென்ன? அப்பொழுதே நான் பதக்குப் போட்டால் கலம் காணும் என்றேனே ஜோஸியருக்கு. உமக்கு வேறே சொல்லவேண்டுமா?

கா. நீரும்—சும்மா!

கோ. நான் என்ன இப்போது ஆடுகிறேனா? பாடுகிறேனா? ஓடுகிறேனா?

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

கா. (சோதிடனை நோக்கி) சொல்லும் பார்ப்போம்.

கோ. சொல்லிய பிறகு எதைப் பார்க்கப் போகிறீர் மேலுங் கீழும்!

கா. (சிரித்து) சட், நீர் என்னங்காணும் குண்டு மணிக்குக் கறுப்பு குறுக்கே பாய்ந்ததுபோல்—!

கோ. (ஒருபக்கம் திரும்பிக்கொண்டு மெதுவாய்) காணுமா—

[சிரிக்கிறார்.]

ஜா. அவரிருக்கட்டும். (மீசையை முறுக்குகிறான்) என்ன பந்தயம்? சீக்கிரம்.

கா. உமது சாமர்த்தியம் நானறியேனா? மாமா வந்திருப்பதனால் கேட்டேன்.

கோ. பார்த்தீரா! பந்தயங் வெந்தயங் தான்.

[எல்லோரும் சிரிக்கிறார்கள்.]

ஜா. மாமா தான் பந்தயம் என்ன கட்டுவார்?

கா. உமக்குப் பந்தயம் என்ன வேண்டும்?

ஜா. உமது வண்டியும், மாடும்.

கா. சரி அப்படியே.

ஜா. கோகர்ண தீட்சிதரே! ஒரு பூ சொல்லும்.

கோ. (திரும்பிக் கொண்டு) சாயப்பூ!

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

ஜா. என்னங்காணும் விளையாட்டு, ஒரு பூ சொல்லு மென்றால்—

கோ. உப்பூ!

[நகைக்கிறார்கள் எல்லாரும்.]

ஜா. ஒரு பூ சொல்லுமென்றால் என்னமோ பிரமாதப்படுத்துகிறீரே. ஒரு பூ சொல்வதற்கு இவ்வளவா—சொல்லும்.

கோ. எனக்கென்ன வந்து விட்டது. ஒரு பூவுக்கு நாலு பூவாகச் சொல்லுகிறேன். இதிலென்ன வந்துவிட்டது. காசா பணமா—ஏப்பூ! இல்லாப்பூ!! எங்கமன்னிக்குத் தாழம் பூ!!! ஊரார்மன்னிக்கு ஊமத்தம் பூ!!!!

[கோகர்ண தீக்ஷிதர் சிரிக்கிறார். எல்லோரும் நகைக்கிறார்கள்.]

ஜா. உம்மோடு என்னங் காணும்! ஒரு வாரமாயினும் சொல்லும்.

கோ. காணுமா—(சிரிக்கிறார்) வாரமா—அஸ்திவாரம்!

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

ஜா. (பார்த்து) ஓய்! ஒரு நக்ஷத்திரமேனும்!

கோ. மேலே ஒக்காளித்து விடாதேயும்! நக்ஷத்திரம்-சுப நக்ஷத்திரம்!!

காதர் ஹுசேனின் மகன் பிரவேசிக்கிறான்.

ஜா. குழந்தாய் வா! (கோகர்ணனைப் பார்த்து) நீர் சும்மா இரும் கொஞ்ச நேரம். குழந்தாய் இங்கு வா! உட்காரு.

[குழந்தை சோதிடன் அருகே வந்து எதிர் முகமாக உட்காருகிறான்.]

உன் தேகத்தில் ஒரு பாகத்தைத் தொடு.

[குழந்தை தன்தோளைத் தொடுகிறான். சோதிடர் சோதிடம் கூறுகிறார்.]

விருத்தம்.

பையனே! தோளைநீ தொட்ட தற்குப்
பகர்ந்திடுவேன் பக்ஷிநிலை பார்த்துத் தானே
கையிலுள்ள மொச்சையிலா யிரத்து மூன்று
கண்டிடுவாய் முழுமொச்சை நூற்று மூன்று
செய்யசெம் பாதியிரு பத்து நான்கு
செப்பினேன் முக்கால்காண் பத்தே முக்கால்
ஐயகா லாகுமிதை யறிந்து பாரே
அரனாணை தப்பாது தப்பா தையா!

பக். மெய்! மெய்! என்னு! என்னு!!

[நால்வரும் சேர்ந்து எண்ணுகிறார்கள். கணக்குச் சரியாயிருக்கக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.]

கா. (பக்கீரைப் பார்த்து) நான் சொல்லவில்லையா?

கோ. நீரா கணக்கிட்டுச் சொன்னீர்? ஜோஸியரல்லவா சொன்னது!

கா. இதிலும் விகடத்தைப் பாருங்கள்.

பக். (நகைத்து) நமக்கி நீங்கள் பேரில் சந்தோஷம், இந்தா நீக்கு.

[பக்கீர் தன் சட்டைப்பையில் கை போட்டு நூறு ரூபாய் நோட்டொன்று கொடுக்கிறார். சோதிடர் பெற்றுக்கொள்கிறார்.]

கா. சந்தோஷம்! வண்டியையும் மாட்டையும் உங்களுக்கே கொடுத்துவிட்டேன். ஊருக்குப் போகையில் ஓட்டிக்கொண்டு போங்கள்.

ஜா. தங்கள் தயவு—சந்தோஷம்!

கோ. (சோதிடனைப் பார்த்து) நான் தங்களுக்கு என்ன கொடுக்கப் போகிறேன்! எனக்கேதேனும் சோதிடம் கூறினால்—

ஜா. சரி; ஒரு லெக்கம் சொல்லும்.

கோ. லெல்விலெக்கம்!

[நகைக்கிறார்கள் எல்லாரும்.]

ஜா. இப்பொழுது உம்மை யார் விகடம்பேசச் சொன்னது? உமது விஷயத்தைப்பற்றிப் பேசும்போதும் விகடந்தானா? கேட்டால் உடனே சொல்லும். ஒரு பக்ஷி சொல்லும் பார்ப்போம்.

கோ. வெளவால்—

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

ஜா. ஓய்! உமக்குச் சோதிடஞ்சொல்ல இப்போது முடியாது. பக்ஷி சரியாய் வாராது.

கோ. இல்லை. சொல்கிறேன். என் விகடம் என்னை விட்டுப் போகமாட்டேனென்கிறது. இனி நானுங்களை எங்கே காணப்போகிறேன். தயை செய்யவேண்டும்!

ஜா. நான் கேட்ட கேள்விக்குப் பதிற் கூறவேண்டும். தயங்கி ஞல் சோதிடங் கூறேன்.

கோ. ஆகா !

ஜா. தேகத்தில் ஓரிடம் தொடும்.

கோ. இதோ !

[சோதிடனுடைய மூக்கை எட்டித் தொடுகிருர். எல்லாரும் நகைக்கிருர்கள்.]

ஜா. சை ! நீ ரென்ன ஓய் ! சுத்த—

[கோபக்குறி காட்டுகிருர்.]

கோ. மேலே ஒக்காளிக்க வேண்டாம். மன்னிக்க வேண்டும். அப்படிக் கோபிக்கக் கூடாது. இந்தத் தடவை என் பேரில் பிழை கிடையாது. தேகத்தில் நீர் தொடச் சொன்னபடி தொட்டேன். உத்தாவாகிற படியே செய்கிறேன்.

ஜா. (விழித்துப்பார்த்து) இப்பொழுது—உமது தேகத்தில் ஓர் அங்கத்தைத் தொட்டுக்கொள்ளும்.

கோ. அங்கத்தையா—

[சிரிக்கிருர் சோதிடர். மற்றவர்களும் சிரிக்கிருர்கள்.]

ஜா. உடனுக்குடன் பதிற்சொல்ல வேண்டுமென் றல்லவா தெரிவித்தேன். தயங்குகிறீரே ! சரி போகட்டும் இப் போது—

கோ. தயங்காமற் பதிற் சொல்லுகிறேன்.

[நகைக்கிருர்கள் யாவரும்.]

ஜா. (தனக்குள்) என்ன வேடிக்கை செய்கிருணையா ! (வெளிப் படையாய்) உமது தேகத்தில் ஓரிடத்தைத் தொடும்.

கோ. இதோ! இதோ!!

[தன் மூக்கைத் தலைச்சுற்றிப் பிடித்துக்கொள்கிறார். எல்லாரும் நகைக்கிறார்கள்.]

### விருத்தம்.

ஜா. தலைசுற்றி நாசியை நீ தொட்ட தாலே
சடுதியிலே காரியங்கை கூடா தப்பா
நிலைபெற்ற பொருளொன்றைப் பற்றி யன்றோ
நீகேட்ட கேள்வியதை நிரூபித் திட்டால்
சலமற்ற தாமரைபோல் வாடு வாய்நீ
சம்மதிநீ தருவாயேல் மொழிவேன் யானும்
கலையுற்ற சடைமுடிய னாணை சொன்னேன்
கடுகளவும் பிசகாதென் வாக்குத் தானே.

கோ. வேண்டாமய்யா ஜோஸியம். நீர் எதையாவதுசொல்லி மனதுக்குக் கவலையைக் கொண்டுவந்து வைத்து விடாதேயும்.

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

ஜா. எங்கே! ரிவார்ட்.

கோ. என்னிடத்திலுமா?

பக். (நகைத்து) நல்லா விகடஞ்செய்கிறார். நமக்கிச் சந்தோஷமாச்சு.

[சட்டைப்பையில் கைபோட்டு 50 ரூபாய் நோட்டொன்று கொடுக்கிறார். கோகர்ணன் பெற்றுக் கொள்ளுகிறான்.]

கா. (கண்ஜாடைசெய்து) நடத்தும்—

[கோகர்ண தீக்ஷிதர் இன்னும் சில விகடம் செய்கின்றார். எல்லாரும் சந்தோஷமடைகிறார்கள்.]

ஜா. சலாம்! நான் போய்வருகிறேன்.

கா. மறுபடி எப்பொழுது?

ஜா. நாளைக் காலையில்.

கா. (கோகர்ண தீக்ஷிதரை நோக்கி) என்ன நீர்?

கோ. தண்ணீர்! [எல்லாரும் சிரிக்கிறார்கள்.]

கா. எப்பொழுது மறுபடியும் பார்க்கலாம்?

கோ. கண்ணிருப்பதால் இப்பொழுது பார்க்க வேண்டுமென்பதில்லை. எப்போதும் பார்க்கலாம்.

[நகைக்கிறார்கள்.]

கா. நேரமாயிற்று. தங்களை இங்கு மறுபடியும் எப்பொழுது பார்க்கலாம்?

கோ. நாளைக்குப் பார்க்கலாம்.

[எல்லோரும் எழுந்திருக்கிறார்கள். ஒருவருக் கொருவர் சலாம் செய்துகொண்டு பிரிகிறார்கள்.]

திரை மறைகிறது.

திருச்சித் தெரு

ஜா. தீக்ஷிதரே! இன்று நல்ல போடு போட்டீர். எப்பொழுதும் விகடம் என்று ஒன்று தனியாய் நடத்திக் காட்டுவீர். இந்தத்தடவை பேச்சோடு பேச்சாகவே உமது விகடத்தையும் நடத்திவிட்டீரே!

கோ. ஆமாம். பின்னெப்படி? எனது விகடமாத்திரமா? உமது ஜோஸியமும் பலித்தது. இல்லாவிட்டால் காசு எப்படியறும்?

ஜா. நாளைக்கு அந்த ஐதராபாத்து நவாப்புக்கு ஜோஸியம் கூறவேண்டும்......வாரும் இந்தக் காபி ஹோட்டலிற் போய் காபி சாப்பிடுவோம்.

கோ. ஆகா! [போகிறார்கள்.]

## இரண்டாம் காட்சி

இடம்:—திருக்கம் என்னும் கிராமத்தில் சாம்பசிவையர் வீடு.

காலம்:—பகல் மூன்றுமணி.

சாம்பசிவையர் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறார். அவர்மனைவி சிவப்பிரியை பக்கத்திலுட்கார்ந்துகொண்டிருக்கிறாள்.

சாம். ஈசா! நான் பிழைத்த பிழைப்பு இப்படியாய் விட்டதே. கையில் காசிருக்கிறவரையில் உறவினரல்லாதாரும் உறவாடி வீட்டைச் சுற்றிக்கொண்டு இருந்தார்கள். இப்பொழுது இவன் செத்தானா பிழைத்தானா என்று கூடக் கவனிக்கமாட்டேனென்கிறார்கள். ஆ! இந்த ஆபத்து வேளையிலுமல்லவா கைவிட்டுவிட்டார்கள். என்னால் அடைந்த உதவியை இவர்களுக்கு மறக்கவும் மனந் துணிந்துவிட்டதே.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்றபடி இவர்கள் எக்கதி சேர்வார்களோ தெரியவில்லையே. சை! மனித ஜன்மமெடுத்தும் இப்படியாயிருக்க வேண்டும்! இனி இவர்களொருவருடைய துணையையும் நான் விரும்பவில்லை. உனது பாதாரவிந்தமே துணையென நம்பிவிட்டேன். நம்பினோரைக் கைவிடா தாண்டருளும் ஏ ஈசா!

" மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாசன் மட்டே
யினமான் சுற்ற மயானம் மட்டே வழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவாகி னுமுன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே "

என்னும் பட்டிணத்தடிகள் அமுதவாக்கின் உண்மை யை யறிந்தேன். பரம கருணாநிதியே!

விருத்தம்

பாதார விந்தமொரு போதேனு மெண்ணிநான்
பாடாத பாவியானேன்
பத்தியுட ஞெருநாளு முன்கோயில் வலம்வந்து
பணிகிலேன் பந்தமாற்றும்
வேதாந்த வுண்மைதனை யோர்கிலே னின்பூசை
மேவியொரு நாளுமறியேன்
விரைமலர்க் கூந்தன்மட மாதர்க்கு நெஞ்சுருகி
வெம்பவத் தாழ்ந்து நொந்தேன்
வாதாடு சூரனுடல் கூறுபடி வென்றுஜய
மாலையணி வேலாயுதா!
வானவர்க்கிறைவனே மகாவல்லி மோகனே
மயிலேறு கம்பீரனே!
ஆதார மற்றவென் றீதேக வந்தருள்செய்
ஐயனே செந்திநகர்வாழ்
அருணகிண் கிணிநாத தருணபங் கஜபாத
அதுலசின் மயபோதனே. ..

[கண்களில் நீர் ததும்புகிறது.]

சிவ. நாதா! சென்றதைப் பற்றிச் சிந்தித்து வருந்துவதாற் பயனென்ன? இது உலகத்துக்கு வழக்கந்தான்.

“கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்.”

என்றபடி காசிருந்தால் உற்றார், பெற்றார், மற்றோர் யாவரும் சுற்றி யலைவார்கள். அஃதில்லையாயின் எல்லா மில்லை. தங்களுக்கு அக்காலத்தில் நானெடுத்துரைத்த

தெதுவும் மனதிற் படவில்லை. "வளவ னாயினும் அள வறிந் தழித்துண்" என்பதை அடிக்கடி நினைப்பூட்டு வேனே! வரும் வரும்படியில் காற்பங்கேனும் மீத்து வைக்கவேண்டும் என்பேனே! எதையாவது கவனித் தீர்களா? ஐயோ! "ஆபத்தை யுத்தேசித்துப் பொரு ளைக் காக்கவேண்டும்; அந்தப் பொருளால் மனைவியை இரக்ஷிக்க வேண்டும். தாரத்தாலும் பொருளாலும் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்" என்பார்களே! அதை யேனும் கவனித்தீர்களா? ஒருரவிக்கை வாங்க உத்தேசித்து ஒரு ரூபாய் வேண்டுமெனக் கேட்டாலும் கோபிப்பீர்களே! நான் உங்களை யறியாமல் ஒரு ரூபாய் மீத்துவைத்தால் அதை யறிந்தபோது அதையும் கொடு என்று வாங்கிக்கொள்வீர்களே! என்ன செய்யலாம். அப்பொழுது காசு உங்களுக்கு ஓட்டாஞ்சில்லாக இருந் தது. 'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி' என்றெண்ணி எல்லாரும் உங்கள் தலையைத் தடவினூர் கள். இப்போது அவர்கள் காசும் பணமுமாகக் கொழிக் கிறூர்கள். இப்படி வருமென்பதை நான் முன்னமே அறிவேன். என்ன செய்யலாம். விதி யாரைவிட்டது. விசனப்படுவது வீண். ஈசனைத் தியானியுங்கள். அத னல் உங்களுக்கும் நல்ல கதி கிடைக்கும். இருக்கிறவர் களுக்கும் சுகம் உண்டாகும்.

**சாம்.** (ஈனசுரத்துடன்) நீ சொல்லியபடி விதி யாரை விட்டது?

"முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்?"

நீ சொல்வது யாவும் உண்மையே. அச்சமயம் எனக்குக் காசு பெரிதாகத் தோன்றவில்லை. மனிதர் தான் பெரிதாகத் தோன்றினார்கள். இப்போது ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. அப்பொழுது மாதம் இருநூறு ரூபாய் வரும்படியை ஈசன் கொடுத்தான். அதற்குத் தகுந்த செலவையும் வைத்தான். நினைத்துப் பார்க்கப் போனால் நான் அன்னியருக்கு ஒன்றும் செய்யவில்லை. நான் சுகமா யிருந்த காலத்தில் எனது சகோதரர்களையும், தமக்கை குழந்தைகளையுங் காப்பாற்றி அவர்களுக்கு விவாகாதிகளைச் செய்தேன். நமது ஆறு பெண்குழந்தைகளுக்கும் விவாகம் நடத்தினேன். சம்பாத்திய மில்லாத இந்த வயோதிகப் பருவத்தில் கையில் மிகுந்திருந்ததைக்கொண்டு அவர்களுக்குச் செய்ய வேண்டிய மற்ற சௌகரியங்களைச் செய்தேன். அன்னியருக்கு வீணாக ஒன்றும் செய்யவில்லை. தன் பொருட்டும் தன் சுற்றத்தாரின் பொருட்டும் செய்தது வீண் செலவாகுமா? ஆகாதெனினும் நான் வியாதியால் வருந்தும் இக்காலத்தில் என்னிடம் உதவிபெற்றவர்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்யலாம். காசில்லா விட்டாலும் சரீரப் பிரயாசமேனும் எடுத்துக்கொள்ளலாம். அதுவுமல்லவா இல்லை. போகிறார்கள். நான் இப்போது ஒன்றுக்கும் விசனப் படவில்லை. நமது ஏக புத்திரனாகிய ரத்தினத்தைப் படிப்பிக்க முடியாமற் போய்விட்டதே யென்பதைப் பற்றியும், குழந்தை வனஜாக்ஷிக்கு வயது பனிரண்டாயும் விவாகம் முடிக்காமலிருப்பதைப் பற்றியுமே கவலை அதிகமா யிருக்கிறது. முந்தியதிலும் பிந்தியதுதான்

என்னை மிகவும் வருத்துகிறது. அதுவும் உயிருக்கு வந்த எமனாய் நிற்கிறது. தம்பி சுந்தரனோ ஜானகி ராமனுக்குக் குழந்தையைக் கொடுத்துவிடும்படிக் கட்டாயப்படுத்துகிறான். எங்கும் போய் அலையவேண்டாமென்கிறான். நானெப்படி அவனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கட்டும். ஈசா !—

சிவ. அவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதிலும் பெண்ணைப் பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டுப் பெற்றதை மறப்பது உத்தமம். வயதென்ன யோசித்தீர்களா ?

சாம். வயது நாற்பத்து மூன்றிருக்கும். (மௌனம்)

[பெருமூச்செறிகிறார்.]

என்ன செய்யலாம். வரனைக் காணோமே. எங்கே போனாலும் வரதக்ஷிணை ஆயிரம் இரண்டாயிரம் கேட்கிறார்கள். சுந்தரம் ஜானகிராமனைப் பற்றிப் புகழாத நாளில்லை. இப்பொழுது ஜோஷியத்தில் மாதமொன்றுக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கின்றானாம்.

சிவ. அவன் சம்பாதிப்பதை நீங்களும், உங்கள் தம்பியுந்தான் மெச்சிக்கொள்ளவேண்டும். குணம்—இவ்வளவு நாள் வரையில் உங்கள் தம்பி பேச்சை நம்பினது போதாதா ? இன்னும் நம்புகிறீர்களே ! உங்கள் தம்பி யேன் தமது பெண்ணை அவனுக்குக்கொடுத்திருக்கப்படாது? ஜானகி ராமனுடைய தம்பிக்கேன் கொடுக்கவேண்டும் ?

சாம். ஐயோ ! இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறாய். எனக்கோ பிராணன் தொண்டைக் குழியில் துடித்துக்கொண்டிருக்கிறது. கல்யாணமோ பண்ணித்

தீரவேண்டும். நான் எங்கே போய் வரானுக்கலையட்டும். அவள் தலையெழுத்து அவ்வளவுதானுக்கும் ?

[கண் கலங்குகிருர்.]

சிவ. நீங்கள் சொல்வது நன்ருயிருக்கிறது! உங்களுக்குப் பிராணன் துடித்துக்கொண்டிருந்தால் ஆயிரம் காலம் வாழுங் குழந்தையைக் குழியில் தள்ளிவிட்டு அந்தப் பாவத்தையுங் கூடக் கொண்டு போகவேண்டுமா ? அவளுக்கென்று ஒருவன் பிறந்திருப்பான். நீங்கள் விசாரப்பட வேண்டாம்.

பாலாம்பாள் பிரவேசிக்கிருள்.

பா. அடி மன்னி! என்னடி துள்ளறவ ? நானும் ஒரு நாழியாய் பார்க்கிறேன். அண்ணுதான் சாகக் கடக்கிருன் ; வாயில் வந்ததெல்லாம் பேசருன். நீயும் என்னமோ உன் சமத்தை யெல்லாங் காட்டறயே. ஜானகிராமனுக்கு எந்த இடத்தில் கோணல் ? சொல்லேண்டி பார்ப்போம் ?

சிவ. நீங்கள் வராதேயுங்கள். உங்கள் வார்த்தைக்கு வந்தது யார் ? ஜானகிராமனுக்குத் தேகத்தில் கோணல் வேறு வேண்டுமா ? புத்தி கோணலாயிருப்பது போதாதா ? தலைவிதியை நினைந்து நாங்கள் வருந்துகின்ருேம். உங்களுக் கென்ன ?

பா. அடி மன்னி! என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள். ஜானகிராமனுக்குத் தான் பெண் கொடுக்க வேண்டும். வனஜாக்ஷிக்கும், ஜானகிராமனுக்குந் தான் ஏர்வை. நான் என்னத்திற்காக இப்போ வந்திருக்கேன். இதை முடித்துக்கொண்டு போகத்தானே. கிரமத்திற்கு ஆறுபேரில் ஒருத்தியைக் கொடுத்திருக்கவேண்டும்.

அதையெல்லாம் கெடுத்தே. அக்காள் மனம் எப்படியிருக்கும் இந்தப் பெண்ணையும் கொடுக்காட்டா? அவன் தான் உன்னிஷ்டப்படி நகையும் கையிற்பணமும் தருவதாக ஒப்புக்கொண்டு போயிருக்கானே. இன்னம் என்ன? நன்னாயிருக்கு.

[தோளில் முகவாய்க்கட்டையை யிடித்து முகத்தைத் திருப்புகிறாள்.]

சிவ. அக்காள் உறவை இப்படியுங் காப்பாற்ற வேண்டுமா? பாலாம்பா! உங்களுக்கு ஒரு பெண்ணிருந்தால் இப்படிப் பாழுங்கிணற்றில் தள்ளச் சம்மதிப்பீர்களா? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமற் சொல்லுங்கள்.

பா. (கண்களில் நீர்ததும்புகிறது) நீ குழந்தைகளைப் பெத்து வாழ்ந்த வாழ்வு என்னைப் பார்த்து இப்படிப் பேசச் சொல்லறது. நானென்ன உன்னைபோல் வாழ்ந்தேனா? உன்னைப் போலே பிள்ளை குட்டிகளைப் பெத்தேனா? எங்கப்பன் என்னைக் கல்யாணம் செஞ்சு கொடுக்கும் போதே நீ அறுத்துப் புடுங்கிவிழு; அண்ணன் வீட்டில் புடுங்குபடு என்னு கொடுத்துட்டான் பாவி! உன் வாழ்வு இப்படிச் சொல்லச் சொல்றது—

கோச்சகம்

பாவிப்பழி காராநீ பழிப்பார்கை பார்த்திந்த
ஆவிசுமந் திடவுமெனை ஆக்கினையே யேதுமிலார்க்
கேவல்புரிந் திடவும்பல இடர்ப்படவும் இதம்பேசி
நாவைவருத் திடவுமெனச் செய்ததென்னோ நவிலுதியே.

[புருஷனை நினைந்து அழுகிறாள்.]

சாம். ஐயோ! (எழுந்து) ஐயோ! ஐயோ!

[தலையி லடித்துக்கொள்கிறார்.]

தலையை வலிக்கிறதே. மானம் போகிறதே. வாயை மூடுங்களேன். போதும்! போதும்!!

[படுக்கிறார்.]

சிவ. ஏதாவது வாயைத் திறந்தால் இப்படித்தான்.

[எழுந்து போகிறாள்.]

பா. (கண்ணைத் துடைத்துக்கொண்டு) நீங்கள் வனஜாக்ஷியைக் கொடுக்கா விட்டால் ஜானகிராமனுக்குக் கல்யாணமே கிடையாது.

ரத்தினம் பிரவேசிக்கிறான்.

ரத். அத்தே! ஏன் இதற்கு விசனப்படுகிறாய்? கல்யாண மாகாவிட்டால் அத்தான் பிள்ளையாராய் விடுகிறார். அப்போது எல்லாரும் கும்பிடுவார்கள்.

[பாலாம்பாள் நகைக்கிறாள். சாம்ப சிவய்யரும் புன்முறுவல் செய் கிறார்.]

சாம். ரத்தினம்! போய் அம்மாளை மருந்து கொண்டுவரச் சொல்.

[ரத்தினம் உள்ளே போகிறான்.]

(பாலாம்பாளைப்பார்த்து) ஆமா! நாமென்ன செய்யலாம்; வழியோடிருந்தால் நான்தானா பெண் கொடுக்கவேண் டும். எல்லாரும் நான் முந்தி நீ முந்தி என்று வந்து விழமாட்டார்களா? எல்லாம் யோக்கியதையி லிருக் கிறது. தெரியாமலா ஒளவை "தக்கோ னெனத்திரி" என்றாள். நானும் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். இவனுக்கு வைப்பாட்டி வேறு. கயவனொருவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதைவிட காட்டில் கண்ணைக்கட் டிப் பெண்ணை விட்டுவிடலாம்? படிப்பில்லாவிட்டால் அப்புறம் ஆயிரமிருந் தென் பயன்? "கண்ணுடைய

ரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்'' என்ருர் ஆன்ருேர். கல்வியில்லாவிட்டால் அவன் குருடனே தவிர கண்ணுடையவ ஞகான். குருடனு க்கு நானெப்படி என் கண்ணுன குழந்தையைக் கொடுப் பேன். ஐயோ எழுத்து வாசனேயே கிடையாதே! இவனைப் பாவியாகிய இவன் தகப்பன் எப்படிக் கடாய்க் கணக்காய் வளர்த்தானே தெரியவில்லையே! குழந்தை களுக்குத் தந்தை தேடிவைக்கும் செல்வம் கல்வியல்லா துண்டோ? இவனுக்கு எப்படி நான் மனமறிந்து பெண் கொடுக்கட்டும்?—நீயே சொல்லடியம்மா!

பா. ஆமாண்ணு! உங்களுக்கொரு பிள்ளையிருந்து இப்படி யிருந்தால் என்ன பண்ணுவேக?

சாம். (கோபங் கொண் டெழுந்து) என்ன பண்ணுவேனு? வெட்டி வீரபலியிட்டுடுவேன் தெரியுமா? இவனென்ன ஆண்பிள்ளை! அணிப்பிள்ளை!

[படுக்கிருர்.]

பா. நீங்க பெண் கொடுத்தா எங்களுக்கோர் ஆதரவு. அதுக்குத்தான் பார்த்தது. பிறகு உங்கிஷ்டம்.

சாம். இஷ்டமென்ன? கஷ்டந்தான். (மௌனம்) எல்லா வற்றிற்கும் அவன் தான் சொல்லிப் போனபடி பண்ம் கொண்டுவரட்டும்; பார்ப்போம்.

பா. வருவான் பாருங்கோ.

சுந்தரமையர் பிரவேசிக்கிருர்.

சுந். அண்ணு! பத்தியம் சாப்பிட்டீர்களா? உடம்பு எப்படி யிருக்கிறது?

சாம். வா உட்காரு; பத்தியமேது? பலகாரமேது? உயி ரிழந்து பிணமானபின்பு காக்கையுங் கழுகுங் கொத்

தித் தின்னும். உயிரிருக்கும்போதே பாழு முண்டைகள் காக்காயுங் கழுவுமாகக் கொத்திப் பிடுங்குகிறார்கள். அப்பா சுந்தரம்! நாம் எதை உயிரென்கிறோமோ அது உயிரல்ல. பணந்தான் உயிர். அதனால் தான் "பணமில்லாதவன் பிணம்" என்கிறார்கள். அல்லாமலும் "பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்றார் மற்றோரும். செல்வத்தின் மகிமை அளவு கடந்ததாகும். நான் செய்த ஊதாரிக் குடித்தனத்தினால் இக்கதிக் காளானேன். என்ன செய்வேன். இந்தக் கை சம்பாதித்த பணம் எவ்வளவு? செலவழித்த தெவ்வளவு? எல்லாம் நினைத்தென்ன வரப்போகிறது? (மௌனம்) ஐயோ! என்னுயிரைக் கொண்டுபோக எமனுக்கு மனம் வரவில்லையே.

[படுக்கையிற் புரண்டு படுக்கிறார்]

சுந். அண்ணா! நீங்கள் இப்படிப்பட்ட சமயத்தில் விசனப்படுவதே தப்பு. நீங்கள் விசனப்படுவதால் என்ன காரியம் ஆய்விடப்போகிறது. விசனத்தை விட்டு விடுங்கள். அவர்களுடைய வீண் வார்த்தைக்குச் செவி கொடுக்க வேண்டாம் இனி. மன்னி!

[சிவப்பிரியையைக் கூப்பிடுகிறார்.]

வனஜாக்ஷி பிரவேசிக்கிறாள்.

சுந். அம்மா எங்கே?

வன. கஞ்சி வைக்கிறாள்.

சுந். இப்போத்தான் வைக்கிறாளோ?

வன. வைத்தாய் விட்டது.

சுந். சீக்கிரம் எடுத்துக்கொண்டு வா. அண்ணா பசியோடிருக்கிறார். [வனஜாக்ஷி உள்ளேபோய் கஞ்சியுடன் திரும்புகிறாள்.]

சுந். அண்ணு! எழுந்திருங்கள்.

[சாம்பசிவையர் எழுந்திருக்கிருர்.]

இந்தக் கஞ்சியைச் சாப்பிடுங்கள்.

[சாம்பசிவையர் சாப்பிடுகிருர்.]

சாம். (சற்று இளைப்பாறிப் பின்) அப்பா! சுந்தரம்! இங்கு வா. வீட்டில் இரண்டு நாளாய் அரிசியில்லை. ஏதோ நகையொன்று கொடுப்பதாகச் சொல்லுகிருள் மன்னி. அதை வாங்கிக்கொண்டு ஏதாவது ஏற்பாடு செய்.

சுந். இதற்குக்கூட என்ன வந்தது. கட்டாயம் செய்கிறேன். இன்று கட்டாயம் ஜானகிராமன் வருவான். வேறு யோசனை வேண்டாம். தங்கள் கண்முன் இங்கேயே முகூர்த்தம் நடத்திவிடுவோம்.

சாம். ஒருவருக்கும் சம்மதமில்லை; குழந்தைக்கும் சம்மதமே யில்லை. என்னமோ! நீ தான்!

[கண்ணீர் விடுகிருர். சற்று மௌனம்.]

சுந். என்ன அண்ணு! அவனுக்கென்ன இப்போது குறைவு; அவன் தான் நன்ரு யிருப்பன். வனஜாக்ஷியாலே தான் அவன் சுகப்படப்போகிருன்.

சாம். என்னுடம்பு திடமாயிருந்தால் குழந்தையை நான் இப்படிக் கொடுக்கவே மாட்டேன். அவள் விதி இப்படி யாக்கும். அதனுல் தான் நான் இந்தக் கதியி லிருக்கிறேன். ஈசா! (மௌனம்) சரி வரட்டும் அவன்.

சுந். இதற்காக விசனமேன்? நானிருக்கின்றேன் பார்த்துக் கொள்கிறேன். அப்படித்தான் செய்யவேண்டும்.

சாம். சரி, நீ சொல்லும்போது—விதியை யாரே விலக்குவார். ஈசா! கடைசிக்காலத்தில் என்மனம் இவ்வாறு

மருக நான் செய்த பாபமென்னமோ தெரியவில்லையே. என்னைவிடப் பாபியுமிருப்பானே? கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்க நிச்சயிக்கின்றேனே! என் பிராணன் இப்போதே போய்விடாதா!

[சுந்தரமையர் போகிறார். பாலாம்பாள் கூடவே செல்லுகிறாள்.]

பா. அண்ணா! இதை எப்படியாவது முடி. உன்னால்தான் ஆகவேணும். மன்னி வாய்க்கொழுப்பை யடக்கவேண்டும். என்ன திமிராகப் பேசுகின்றாள் தெரியுமா! இவர்கள் இருக்கிற லக்ஷணத்திற்கு ஜானகிராமனைவிட வேறு எந்த வரன் தேவலோகத்திலிருந்து வரபோகின்றான்.

ரத்தினம் பிரவேசிக்கின்றான்.

ரத். அத்தே! உன் பேச்சு மெச்சத்தக்கது! வித்தக்காரி நீ! நன்றாய்ச் சொன்னாய்! உன் மன்னி வாய்க் கொழுப்பை யடக்க ஓர் உபாயங் கேள்! தூங்கும்போது கரண்டியைக் காய்த் திழுத்துவிடு.

[சுந்தரமையரும், பாலாம்பாளும் பழிக்கிறார்கள்.]

சுந். (மெள்ள) பயல் உளறுகிறான்; நான் எவ்வளவு தூரம் சொன்னேன் அண்ணாவுக்கு. ஆகட்டும் போ,—

[பாலாம்பாள் திரும்புகிறாள். சுந்தரமையர் போகிறார்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் காட்சி.

இடம்—மங்கலத்தில் ஒரு தெரு. ஜானகிராமன் வீடு.

காலம்—காலை.

ராமு கையில் புதுப்புடவை யெடுத்துக்கொண்டு வருகிறான்.

ராமு. (தனக்குள்) சுமங்கலிப் பிரார்த்தனைக்கு 50-ரூபாய்ப் புடவை யென்னத்திற்கு? 25-ரூபாய்க்குப் போதாதா? கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிற அமக்களம் கண் தலை தெரியாமல் திரிகிறான் மதியிலி. புடவைக் கடைக்கு எத்தனைதடவை தொலைந்துபோய் வருவது. என் காலென்ன இரும்பாலா பண்ணியிருக்கிறது.

[எதிரே சோமு வருகிறான். ராமு அவனைப் பாராமல் புடவையை நோக்கி முணு முணுத்த வண்ணமே போகிறான்.]

சோ. ராமு! என்னடா முணு முணுக்கறே?

ராமு. (பார்த்து) நீயா! பார்க்கவேயில்லை. என்னமோ நினைத்துக் கொண்டே வந்தேன். உன்னைப் பார்க்கவில்லை.

சோ. எது புதுப்புடவை?—எங்கே கொண்டா பார்ப்போம்.

[கொடுக்கிறான். வாங்கிப் பார்க்கிறான்.]

எவ்வளவுக்கு வாங்கினாய்!

ராமு. எவ்வளவு போரும் சொல்லேன்.

சோ. இதென்ன அறுபதடுக்கா! 45 ரூபாய் தானும்.

ராமு. 50 ரூபாய்க்கு வாங்கினேன்.

சோ. சரிதான். இப்போதேது புடவைக்குச் செலவு.

ராமு. தெரியாதா? அண்ணு ஜானகிராமனுக்கு கல்யாணண்டா!

சோ. எப்போ? யாருடைய பெண்? ஏதடா அதிர்ஷ்டம் பொங்கி விட்டது. அடடா! என்ன காலமடா இது! இவனுக்குப் பெண்ணை யார் பெற்றுவைத்திருந்தாள். நேற்றுப் பார்த்தேன் ஜானகிராமனை. அவன் முகம் தெளிவாயிருந்தது. கல்யாணம் என்றால் கிழவன்கூடக் குமரனாய்விடுவான்போ லிருக்கிறது. எனக்கு நான்கு நாள் சாப்பாடுண் டேன்னு சொல்லு! பேஷ்!

ராமு. உனக்கில்லாமல் பின் யாருக்கடா சாப்பாடு. பருப்பில்லாமல் கல்யாணமுண்டா? மாமா சாம்பசிவையர் தம் பெண்ணைக் கொடுக்கிறார்.

சோ. கொடுக்கமாட்டேனென்று சொன்னதாகக் கேள்விப் பட்டேனே.

ராமு. ரூபாய் முந்நூறு கையில் கொடுப்பதாகப் பேசி 25 ரூபாய் கொடுத்தாச்சு. நகை 400 க்குப் போடணு மென்பதாகக் கேட்டார்கள்; ஒத்துக்கொண்டாச்சு. கல்யாணத்தன்னைக்குப் போடுவதாக ஒத்துக்கொண் டிருக்கு. சம்மதித்துவிட்டார். அவருக்கும் வேறு வரன் கிடைக்கவில்லை.

சோ. இந்தப் புடவை கூறைப்புடவையா?

ராமு. (முகஞ் சுளித்து) இல்லை போ—சுமங்கலிப் பிரார்த்தனை இன்னைக்கு; அதுக்காக.

சோ. கல்யாணம் என்னைக்கு?

ராமு. இன்னைக்கு எட்டாம் நாள்.

சோ. யார் போய்த் தீர்மானம் பண்ணிக்கொண்டு வந்தா?

**ராமு.** அண்ணு தான் போயிருந்தான். நேற்றுத்தான் வந்தான்.

**சோ.** சரி போ, உன்பாடு ஷோக்குத்தான்.

**ராமு.** என்ன ஷோக்கு? என்தாவி யறுபடறது—

[ராமு தன் வழியே போகிருன். சோமு தன்வழியே செல்கிருன்.]

திரை மறைகிறது.

**ஜானகிராமன் வீட்டுத் திண்ணை.**

ஜானகிராமன், பாபு ரெட்டி இருவரும் திண்ணையில் பாயின்மீது உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போட்டுக்கொண் டிருக்கிருர்கள்.

வரதையங்கார் திண்ணையை நோக்கி வருகிருர்.

**ஜா.** நமஸ்காரம்! ஐயங்கார்வாள்! வரவேண்டும்.

[கைகூப்பிக்கும்பிடுகிருன் ஜானகிராமன்.]

கோகர்ணதீக்ஷிதர் உள்ளே யிருந்து வருகிருர்.

**கோ.** நமஸ்காரம் ஐயங்கார்க் கத்தி!

[எல்லாரும் நகைக்கிருர்கள்.]

**வர.** நமஸ்காரம் எல்லாருக்கும்.

[வரதையங்காரும், கோகர்ணதீக்ஷிதரும் மற்ருெரு பாயிலுட்காருகிருர்கள்.]

**கோ.** ஐயங்கார் வந்ததுதான் அபூர்வம்.

**வர.** அபூர்வ மென்ன! நீர் வந்ததுதான்—

**கோ.** நான் வந்ததென்ன—உயிரை விட்டு உடம்பு பிரிந்திருக்குமா!

[ஜானகிராமன் சிறிது நகைக்கிருன்.]

வர: கல்யாணம்!

ஜா. பெரியவாளுடைய ஆசீர்வாதம்.

[வரதையங்கார் நகைக்கிறார்.]

வர. ஜானகிராமா! சம்மதிக்கவில்லையென்று கேள்விப்பட்டேனே; எப்படிச் சம்மதித்தார்கள்?

ஜா. (மெதுவாய்) சம்மதிப்பதேது? மாமாவுக்குப் பிராணன் தொண்டைக்குழியில் துடித்துக்கொண் டிருக்கிறது. இந்தச் சமயத்தில் ரூபாய் 300 கையிலும் 400 க்கு நகையும் போடும்படி சின்ன மாமா சொன்னதின் பேரில் பெரிய மாமா சம்மதித்து ஒருவாரத்தில் பணங்கொண்டு வரச் சொன்னார். ஒருவாரத்தில் வருகிறேனென்று சொல்லிவிட்டு ரூபாய் 25 அவர்கள் கையில் கொடுத்து வந்தேன். இன்றைக்குப் பனிரண்டு நாளாய் விட்டன. ரூபாய் பேரவில்லை. சனியன்று திரிச்சிணப்பள்ளிக்குப் போயிருந்தேன். காதர்ஹுஸேன் வீட்டில் ரூபாய் 100 கிடைத்தது. இந்த வண்டியும் மாடும் கிடைத்தன. அப்படியே மதுரை போயிருந்தேன். 70 ரூபாய் கிடைத்தது. நூறு ரூபாய் கோகர்ணனிடம் கடன் வாங்கியிருக்கிறேன்; நாளாய் விட்டது. ஆடி பிறக்க இன்னும் பத்து நாள் தானிருக்கிறது. இருப்பது 31-ந் தேதி முகூர்த்த மொன்றுதான். ஆகையால் இங்கே இந்த ரூபாயைக் கொண்டு எல்லா ஏற்பாடும் பண்ணி வைத்துக்கொண்டு சமயத்தில் பெண்ணை ராவுக்கு ராவே கொண்டுவந்து அந்த முகூர்த்தத்தில் தாலிகட்டிப் போடுவதென்று தீர்மானித்து இன்று சுமங்கலிப் பிரார்த்தனையும் நடக்கிறது. இந்தச் சங்கதி எங்கவீட்டில் ஒருவருக்கும் தெரியாது. என்தம்பி ராமுவுக்குந்

தெரியாது. இதை வெளிவிடவேண்டாம். நீர் என் உற்ற நண்பரானதால் தெரிவித்தேன்.

வர. (நகைத்து) இது எப்படியடா முடியும்! யார் சொன்ன யுக்தி இது! மூடத்தனமாக அல்லவா இருக்கிறது. இது என்ன ஆங்கிலேய துரைத்தனமா! நவாப்துரைத் தனமா!

ஜா. என்னங் காணும் பேசுகிறீர். எங்க சின்ன மாமா சுந்தரமையர் ஏற்பாடாக்கும் இது. அவர் எனக்கெழுதி இப்படிச் செய் என்றதன்மேல் தான் செய்ய ஆரம்பித்தேன். அவர் அண்டத்தையும் புரட்டவல்லவரல்லவா?

வர. என்னமோ எனக்குப் பிடிக்கவில்லை இந்த யோசனை.

கோ. ஜோஸியன் ஏற்பாடு செய்தால் யோசிக்காமலா செய்வான்.

[நகைக்கிறார்கள்.]

ராமு புடவையுடன் பிரவேசிக்கிறான்.

ஜா. ராமு! ஏண்டா இந்நேரம்! இங்கே கொண்டா பார்க்கலாம்.

[புடவையை கொடுக்கிறான். எல்லாரும் பார்த்துக் கொடுக்கிறார்கள்.]

சீக்கிரம் உள்ளே கொண்டுபோய்க் கொடு. காத்துக் கொண் டிருக்கிறார்கள்.

[ராமு உள்ளே போகிறான்.]

குடுகுடுப்பைக்காரன் பிரவேசிக்கிறான்.

கு. குடு குடே, குடு குடே, குடு குடே, ஜல் ஜக்கம்மாதேவி! மாயாக்காளி! ரணபத்ரகாளி! ஓடிவா! ஓடிவா!! குடு குடே, குடு குடே, குடு குடே.

கோ. வா ! வா ! நீ யில்லை யென்கிற குறைதான் இங்கே.

கு. உம் ! குடு குடீ, குடு குடீ, குடு குடீ, ஓடிவாடி காளி, ஓடிவாடி தாயி, நல்ல வாக்குக் கொடு ! நல்ல வாக்குக் கொடடி ! !

கோ. (ஜானகிராமனைக் காட்டி) இந்த ஐயருக்குக் குழந்தை எத்தனை ?

[நகைக்கிறார்கள்.]

கு. குடு குடீ !—குடு குடீ ! குடு குடீ ! ! கம்பளத்தாயி வாடி ! கம்பளத்தாயி வாடி ! !

வர. நீ யென்னடா வந்து தொந்தரவு பண்ணிக்கொண்டு—, தொலேடா ! உனக்கெல்லாம் வேலைசெய்கிறதற்கென்ன கேடு ? நீ நாலாளடிப்பாயே ! உனக்குப் பலம் இல்லையா ? நீயென்ன மொண்டியா முடமா ? குருடா கூனா ? உனக்கென்ன கேடு ?

கு. உம் ! மஞ்சி ஐயவாறு ! ஐயருக்குத் தொந்தி போடுது ? தொந்திபோடுது ! ! குடு குடீ ! குடு குடீ !! குடு.

ஜா. போடா ! போடா ! வயிறு வளர்க்க வேறு தொழி லில்லையா ?

கு. குடு குடீ ! குடு குடீ ! ! ஒருவஸ்திரம் ! ஒரு பளய வஸ்திரம் ! ! ஒரு பளயவஸ்திரம் ! குடு குடீ, குடு குடீ !

கோ. அவருக்குத்தான் தொந்திபோடு மென்று சொன்னே இவருக்கு—

கு. குடு குடு ! குடீ ! குடு குடீ ! ! குடு குடீ ! ! ! ஓடிவாடா குட்டிச்சாத்தான் ! ஓடிவாடா ! குடு குடீ, குடு குடீ ! ! குடு ! ! சேதிவருகுது ! சேதிவருகுது. குடு குடீ ! குடு குடீ ! ! குடு குடு குடீ ! ! ! ஐயேண்ணு வருகிறது !

ஐயோண்ணு வருகுது ! குடு குடு ! குடு குடு ! ! குடு குடு ! ! !

ஜா. அடமூதேவி ! என்னடா அடிச்சிக்கிறெ ! சை ! போ

கு. குடு குடு ! குடு ! ! குடு ! ! குடு குடு ! ! ! ஐயோண்ணு வருகுது ! ஐயோண்ணு வருகுது ! குடு குடு ! குடு குடு ! ! குடு குடு ! ! !

ராமு பிரவேசிக்கிருன்.

ராமு. இவனென்ன இப்படி யடிச்சிக்கிருன். பார்த்துக்கொண் டிருக்கிறீர்களே; வெராட்ரதத்திற் கில்லாமே. சீ ! போடா ! மடையா !

கு. குடு குடு குடு ! குடு குடு ! !

ராமு. என்டா ! நான்சொல்வதென்ன ? பழையபடி ஆட்டறே. சீ போ ! மூதேவி.

[கிட்டப்போகிருன்.]

கு. எங்க சின்னய்யருக்குக் கோபம் வந்திடுச்சு: ஹூ ! குடு குடு ! குடு குடு ! ! குடு குடு ! ! ! ஓடிவாடா ! ஓடிவா ! !

ராமு. சே ! போ ! போ ! !

[பிடித்துத் தள்ளுகிருன்.]

கோ. விட்டுடையா !

ஜா. அவன் கெட்டான் நாய் ! ஒரு பழையவேஷ்டி கொடுத்துப் போகச் சொல்லு.

[ராமு உள்ளே செல்கிருன்.]

கு. குடு குடு ! குடு குடு ! குடு குடு!!! சேதி வந்தூட்டுது ! சேதி வந்தூட்டுது ! ! ஒரு மட்டை சாயுது ! ஐயோண்ணு சாயுது ! ! ஐயோண்ணு சாயுது!!!

ராமு பழைய வேஷ்டியுடன் பிரவேசிக்கிறான்.

ராமு. ஏ மூதேவி! தடியா! தொலே.

[பழைய வேஷ்டியைக் கொடுக்கிறான். குடுகுடுப்பைக்காரன் அதை வாங்கிக்கொள்கிறான்.]

கு. குடு குடு! குடு குடு!! மட்டைசாயுது! சாயுது!

[போகிறான்.]

கோ. என்ன சாயுது, சாயுது என்கிறான்?

வர. அந்தப் பசங்க அப்படித்தானுண!

ஜா. என்னமோ உளருகிறான் சோற்றுக்கு வழியில்லாமே.

ராமு. இந்தப் பசங்களுக்கு இவ்வளவு தூரம் இடம் கொடுக்கப்படாது.

(திரைக்குள்)

அடே! ராமு! அடே ராமு!!

[ராமு உள்ளே போகிறான்.]

ராமு. (உள்ளிருந்து) அண்ணா! அண்ணா!!

ஜா. என்னை உள்ளே கூப்பிடுகிறார்கள்போ விருக்குறதே. ஏன்?

[உள்ளே போகிறான்.]

கோ. இந்தக் குடுகுடுப்பைக்காரன் சொன்னானே அது என்னமோ கெடுதலாகத் தெரிகிறது. அந்தப்பசங்கள் சொல்வது பலிக்கிறதுண்ணா!

ஜா. என்னமோ பலிச்சுட்டுது! எல்லாம் என்னன்ணா!

ராமு வருகிறான்.

ராமு. அண்ணா உங்களை உள்ளே கூப்பிடுகிறார்.

[கோகர்ணனும் ஐயங்காரும் உள்ளே போகிறார்கள்.]

திரை மாறுகிறது.

ஜானகிராமையர் வீட்டுக்கூடம். கூடத்து மத்தியில் பட்டுப்புடவை வைத்து மலர்களால் பூசிக்கப்பட்டிருக்கிறது. அதன் இருமருங்கும் குத்துவிளக்குகள் எரிகின்றன. சுமங்கலிகள் பயபக்தியுடன் சூழ்ந்து நின்றுகொண் டிருக்கிறார்கள்.

குப்பு சுவாமி ஆடுகிறாள்.

**தாய.** (எதிரில் நின்றுகொண்டு) எங்கடியம்மா நீ வந்தே! வந்த காரணத்தைச் சொல். உனக் கென்ன குறை!

[ஜானகிராமையர் பிரமித்து நிற்கிறார்.]

கோகர்ணதீக்ஷிதரும், ஐயங்காரும், ராமுவுடன் பிரவேசிக்கிறார்கள்.

**தாய.** (மறுபடியும்) அம்மா! தாயே! என்னடியம்மா! சோதிக்கிறே.

[குப்பு அடிக்கடி மூச்சுவிடுவதும், இழுப்பதுமாய் இருக்கிறாள். குதிக்கிறாள். தேகத்தை முறிக்கிறாள்.]

**கோ.** (முன் வந்து நின்று) நீ யார்?

[குப்பு பெருமூச்சுடன் தலைசுற்றுகிறாள்.]

**தாய.** நீ யாரம்மா!

**குப்.** நான் யாரா? தெரியாதா?

**தாய.** அடே! நமஸ்காரம் பண்ணுங்கோடா!

[ஜானகிராமையரும், ராமுவும் நமஸ்கரிக்கிறார்கள்.]

**தாய.** யாரம்மா! தெரியவில்லையே?

**குப்.** நான்தான் உன் வீட்டுத் தெய்வம்.

**கோ.** நீ வீட்டுத் தெய்வ மென்பதற்கு அடையாளமென்ன ?

**குப்.** அடே! அடையாளமா வேண்டும்? காட்டுகிறேன். சற்றுப்பொறு! சற்றுப்பொறு !! கடிதமூலமாகக் காட்டு கிறேன். (ஜானகிராமனை நோக்கி) உன் பூஜையை நான் ஏற்றுகொள்ளவில்லை. தீட்டு கலந்துவிட்டது. தீட்டு! தீட்டு!!

**தாய.** என்ன தீட்டு? ஒன்றும் தெரியவில்லையே.

**கோ.** (மெதுவாய்) குடுகுடுப்பைக்காரன்—

**ஜா.** (நெற்றியைச் சுறுக்கி) என்னமோ !—

**கோ.** (ஐயங்காரைப் பார்த்து மெதுவாய்) ஜோஸியம் !—

**வர.** (மெதுவாய்) வாழ்ந்தான் !

**குப்.** சற்றுப்போனால் தெரியுமடா! தெரியுமடா! தெரியு மடா!

[குப்பு ஆடிச் சரேலென்று தரையில் வெட்டினமரம்போல் சாய்கிருள்.]

அர்த்தநாரி கையில் ஒரு கடிதத்துடன் பிரவேசிக்கிருன்.

**ஜா.** அர்த்தநாரி! கையில் என்ன கடிதம்?

[அர்த்தநாரி பிரமித்து நிற்கிருன்.]

**அர்.** என்ன—ஒன்றுமில்லை— பிறகு சொல்கிறேன். இதென்ன? ஏன் குப்பு— ?

**ஜா.** சும்மா சொல்லடா! இங்கே கொண்டா!

[கைக்கடிதத்தைப் பிடுங்குகிருர். கொடாமல் விலகுகிருன் அர்த்தநாரி.]

**அர்.** இப்போது பார்க்கவேண்டாம்.

ஜா. (தனக்குள்) ஏனிப்படிச் சொல்லுகிறுன். (வெளிப்படையாய்) கொண்டா! எதுவாயினும் என்ன?

[அர்த்தநாரி கொடுக்கிறுன் கடிதத்தை. ஜானகிராமையர் வாங்கிப் படிக்கிறுர்.]

கடிதம்.

விரோதி வருஷம் ஆனிமாதம் 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு என் தமையனுர் சாம்பசிவையர் சிவலோகப்ராப்தியடைந்தார். இது சங்கதி யறியவும்.

இப்படிக்கு,
சுந்தரம்.

ஆ! ஆ! மாமா! மாமா! இப்படி மோசம் செய்யலாமா? செய்பலாமா!

[ஜானகிராமையர் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து விசனமுறுகிறுர். ராமு அர்த்தநாரி இருவரும் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு நிற்கிறுர்கள்.]

தாய. அடே! சாம்பசிவா! சாம்பசிவா! மோசம் பண்ணிவிட்டாயே.

[மார்பி லடித்துக்கொண்டு தரையில் படுத்து அழுகிறுள். மற்றவர்களும் துக்கம் பாராட்டுகிறுர்கள்.]

முதல் அங்கம் முற்றிற்று.

# இரண்டாவது அங்கம்.

## முதற் காட்சி

இடம்—மங்கலத்து ஏரிக்கரை.

காலம்:—மாலே.

ஜானகிராமையரும் பாபுரோட்டியும் உலாத்துகிருர்கள்.

ஜா. பாபுரெட்டியாரே! இவ்வருஷம் ஏரியைப் பார்த்தீரா? எப்படி ஜமாச்சுக்கொண்டிருக்கிறது! என்ன அழகு பார்த்தீரா? இளஞ் சூரிய காந்தி படிந்திருப்பதால் ஏராளமான தங்கத்தை யுருக்கித் தேக்கியதுபோலல்லவா தெரிகிறது. ஆகா! வெகு நேர்த்தி! இதைப் பார்த்துக் கொண்டே யிருந்தாற் போதும். எனக்கு அன்னம் தண்ணீர் ஒன்றும் வேண்டாம்.

பாபு. நீர் சூரியகாந்தி படிந்திருப்பதை யப்படி வர்ணித்தீரே. ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறக்கும் பருந்துகளேயும், மீன் கொத்திகளேயும் கவனியுங்கள். என்ன பாய்ச்சல் பாய்கின்றன. எவ்வளவோ கீழேயிருக்கும் மீன்கள் அவைகளுடைய கண்ணுக்கு எப்படித்தான் புலப்படுகின்றனவோ தெரியவில்லே. கடவுளின் சிருஷ்டி விநோதத்தைப் பார்த்தீர்களா?

ஜா. ஆமாம்! வெகு ஆனந்தமாயிருக்கிறது. செட்டியாரே! நீர் சமுத்திரம் பார்த்திருக்கிறீரா?

பாபு. பார்த்ததில்லே. சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஜா. (சிரித்து) போகட்டும். ரயில் பார்த்திருக்கிறீரா?

பாபு. பார்த்திருக்கிறேன்; அதில் புரயாணம் செய்துமிருக்கிறேன்.

ஜா. எவ்வளவு தூரம் பிரயாணம் செய்திருக்கிறீர்?

பாபு. திருச்சி வரையில்.

ஜா. பு! பு! (உதட்டை காட்டி) இவ்வளவுதானு? இருபது மைல் தூரந் தான்! எவ்வளவு தடவை போயிருப்பீர்?

பாபு. மூன்று தடவை.

ஜா. (சிரித்து) உமக்கு வயதென்ன?

பாபு. முப்பத்தைந்துக்கு நாலுமாதங் குறைவு.

ஜா. நல்லது! வேடிக்கைதான். நாலுமாதங் குறைந்தாலென்ன? முப்பத்தைந்து என்று சொல்லிவிடக் கூடாதா?

பாபு. என்னங்காணும் தெரியாமற் பேசுகிறீர். சலோகம் தெரியாதுபோ லிருக்கிற துமக்கு.

பாடுகிறர்.

விருத்தம்.

“குருவுப தேச மாதர் கூடிய வின்பந் தன்பால்
மருவிய நியாயங் கல்வி வயதுதான் செய்த தர்மம்
அரிய மந்திர விசாரம் ஆண்மையிங் கிவைக ளெல்லாம்
ஒருவருந் தெரிய வொண்ணு துரைத்திடில் அழிந்துபோமே”

[பாடிக்கொண்டு கையை யாட்டுகிருர்.]

ஜா. ஓகோ! அப்படியா! இப்படியும் ஒருமனிதன் இருப்பாரு இந்தக்காலத்தில். ஏணையா! சமுத்திரம் பார்த்ததில்லை யென்கிருய்; ரயிலில் திருச்சிவரையில் போயிருக்கிறே னென்கிருய். இதை யாராவது கேட்டால் சிரிக்கவல்லவா செய்வார். இவ்வளவு பணத்தை வைத்

துக்கொண்டு என்ன செய்தீர்? எங்கேயாவது காசி, ராமேசுவரம் போய் வரக்கூடாதா? அப்போது தான் காணும் உலகம் இப்படி யிருக்குமென்பது தெரியும்.

பாபு. மூன்றும் வருஷம் காசிக்குப் போகவேண்டுமென்று புறப்பட்டேன். எங்கய்யா "காசிக்கு நாமேன் போக வேண்டும், பிள்ளையில்லாதவர்களல்லவா காசியும் ராமே சுவரமும் போகவேண்டும் நமக்கேண்டா?" என்றார். நமக்குத் தான் டஜன் கணக்காகக் குழந்தைகளிருக் கின்றனவே! நாமேன் போகவேண்டுமென்று பயணத் தை நிறுத்திவிட்டேன்.

ஜா. (சிரித்து) அட போவாய்! நல்ல காரியம் செய்தீர். நீர் இந்தக்காலத்து மனிதனே அல்ல—அதோ! (பார்த்து) அங்கு யார் வருகிறது பாரும்.

பாபு. புடவைக்காரச் செட்டிமாதிரி யிருக்குதுங்க.

ஜா. அல்லங்காணும்; பாப்பான்மாதிரி யிருக்கிறான்.

பாபு. ஆமா! பஞ்சாங்கக்காரப் பாப்பான்!!

ஜா. ஆமாய்யா நீர் அந்த மரத்தடியில் மறைந்திரும்; நானொரு வேடிக்கை பண்ணுகிறேன் இவனோடு.

[பாபுரெட்டி மறைகிறார்]

பஞ்சாங்கக்காரன் மூட்டையுடன் பிரவேசிக்கிறான்.

ஜா. (சிரித்து) என்ன! சுவாமிகளே! மூட்டை வலுவாயிருக் கிறது. எங்கே கொள்ளே?

ப. ராமப்பிள்ளை அப்பனுக்கு வருஷத் தெவசம்.

ஜா. என்ன கொடுத்தான்?

ப. என்ன கொடுத்தான், மேலே விழுந்து எழவுகொடுத் தான்! அஸ்தமிக்கிறவரைக்கும் பட்டினிபோட்டுக் கொன்றானே அதுதான்! அந்த நாய்களுக்கு என்ன

தெரிகிறது ? பிராமணனாயிற்றே பட்டினி போடுகிறோமே என்னும் எண்ணமே கிடையாது. என்ன சொன்னாலும் எருமை மேலே மழை பெய்தாப்போலிருக்கிறார்கள். அவர்களோடு என்னபண்ணுகிறது. அவர்களைக் கட்டிக்கொண்டுதான் மாரடிக்கவேண்டியதாயிருக்கிறது.

ஜா. பின்னே மூட்டைமட்டும் பெரிதாயிருக்கிறதே!

ப. அயினாபட்டிக் கஞ்சப்பரெட்டி வீட்டிலே சாந்தி. அங்கேயும் போயிருந்தேன்.

ஜா. அங்கே என்ன வந்தது உமக்கு ?

ப. அங்கே எனக்கு என்ன இருக்கிறது. அந்தக் கிராமம் சுப்புவைச் சேர்ந்ததல்லவா? எனக்கு அந்தக் கூட்டத்திலே கதவிடுக்கில் அகப்பட்டுக்கொண்டு பிராணனுக்குத்தான் வந்தது !

ஜா. அங்கேயிருந்துதான் இப்போது வருகிறீரோ ?

ப. அங்கேதான் இவ்வளவு நாழிகையாய்விட்டது. ரெட்டியோ மட்டியோ என்பார்களே அப்படிப்போல்—தெரியாதா? முன்போலெங்கே? முன் புரோகிதன் என்றால் அவன் ஒரு தனிக்காட்டு ராஜா—இப்போ அவையெல்லாம் போச்சு.

ஜா. இரண்டு வீட்டிலும் ஒன்றும் வரவில்லை யென்கிறீர்! மூட்டை மாத்திர பெரிதாயிருக்கிறதே ?

[சிரிக்கிறான்.]

ப. என்னமோ மூட்டை பிரமாதமாக்கும். இது ஒரு பெரியதா? இருக்கட்டும். எவ்வளவோ பிரயத்தனஞ் செய்தும் கல்யாணம் நின்றுவிட்டதே. உமக்குப் பிராப்த

மில்லை; இனி அந்தப்பெண் உமக்குக் கிடைப்பது கஷ்டம்.

ஜா. ஏனையா அப்படிக் கூறுகிறீர்கள்?

ப. உங்கள் மாமா இறந்ததே சகுனத்தடையாய் விட்டதாம். வேறிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்களாம். உங்களுடைய மாமா இறந்துபோய் நாலுமாதமாய் விட்டதல்லவா?

ஜா. உமக்கு யார் சொன்னது ஓய்!

ப. நான் நேற்றுமுந்தாநாள் தான் அங்கிருந்து வந்தேன். செவ்வாயன்று உங்களுடைய சின்னமாமாவைக் கண்டேன். அவர் சொன்னார். உம்மோடு சொல்லி உங்களைப் புறப்பட்டு வரும்படிக்கும் சொல்லச்சொன்னார். உங்களை இங்கு இன்று பார்க்காவிட்டால் நாளைக்காலமே உங்கள் வீட்டுக்கு நான் வந்திருப்பேன்.

ஜா. உம்—அப்படியே; அம்மாமி என்ன சொல்லுகிறாள் தெரியுமா?

ப. அவள்தான் இப்படிச் சொல்வதாம்.

ஜா. அப்படியா சங்கதி! இருக்கட்டும். நான் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்ளாவிட்டால்—ஜோஸியனல்ல.

[மீசையை முறுக்குகிறான்.]

ப. நேற்று முதற்கொண்டு தங்களைப் பார்க்க வரவேண்டுமென்கிற எண்ணம். ஒழியவில்லை. நல்ல வேளையாய்ச் சந்தித்தேன். ஈசன் செயல். பார்ப்போம்; போகிறேன்.

[போகிறான்.]

பாபுரெட்டியார் பிரவேசிக்கிறார்.

ஜா. ரெட்டியாரே! பார்த்தீரா புரோகிதர் பேச்சை! அவர்களுக்கு என்ன கொடுத்தாலும் திருப்தி யிருப்ப

தில்லை—அன்றி அவர்களுக்கு என்ன வந்தாலும் கட்டுவதுமில்லை. பாபவிருத்தியல்லவா?

பாபு. மொத்தத்தில் பாப்பாளே அப்படித்தான். நீங்க ளெப்படி? உங்களுக்கு என்ன வரும்படி வருகிறது? எங்கே எல்லாம்?

ஜா. ரெட்டியாரே! என் மனம் இங்கில்லை. நாளைக்கே நான் துருக்கம் போகவேண்டும். என் மாமா இறந்துவிட்டாரல்லவா? இப்போது பெண் கொடுக்க மறுக்கிறார்களாம். நீர்தான் செலவுக்குத் தரவேண்டும் காலமே வருவேன். போகலாம் வாரும். அஸ்தமித்தும் போய் விட்டது.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் காட்சி

---

இடம்—துருக்கத்தில் ஒரு வீதி. காலம்—காலை.

வனஜாக்ஷியும், அம்பிகையும் கையில் தேங்காய் எடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போகிறார்கள்.

வன. (தன் உடையைப் பார்த்து) அம்பிகே! கோர்க்காவிக்கணக் காய் உயர்ந்த பிற்பாடு இந்தமாதிரி மாம்பழச் சித்தாடைக் கட்டிக்கொண்டு வெளியே வருகிறதென்றால் மிகவும் வெட்கமா யிருக்கிறது. நானென்ன செய்யட்டும்! இதற்காகத்தான் நான் வெளிக் கிளம்புவதே கிடையாது.

அம். ஆமாம்; வயதாய் விட்டது. வயதுமாகி உயரமாயு மிருந்துவிட்டால் மாம்பழப் புடவை கட்டிக்கொள்ள

வெட்கமாய்த்தா னிருக்கும். உன்னுடைய தமக்கைமார்களுக்கெல்லாம் காலத்தில் விவாகமாய்விட்டது போலும். உனக்கு—எல்லாவற்றிற்கும் வேளைவரவேண்டும். உனக்கென்ன வய திப்போது?

வன. நாளைச் சித்திரைக்குப் பதின்மூன்று நிரம்புகிறது. என் தந்தை தம்மாலியன்றவரை பிரயத்தனம் செய்தார். தகுந்த வரன் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் ஆயிரம் இரண்டாயிரம் வரதக்ஷிணைகேட்கிறார்கள். நாங்க ளெங்கேபோவோம் ஆயிரத்துக்கும் இரண்டாயிரத்துக்கும்--பணமிருந்தால் பணத்தைப் பாராமல் எவ்வளவானாலுங் கொடுத்துவிடுவார். காசைப் பெரிதாக நினைப்பவரல்லர். அதுவும் என்பொருட்டுச் செலவழிக்கப் பின்வாங்கார். என்ன செய்யலாம்; என் தந்தைக்கு இதே மனோவியாதியாயிருந்து உயிரை வாங்கிவிட்டது.

அம். உன் தந்தை யிறந்து ஐந்துமாத மாகவில்லையா?

வன. ஆம். என் கல்யாணத்திற்குத் தடையாய் எனக்கு அத்தானொருவனிருக்கிறான் மடையன். அவன் நாம் எங்கே வரன் பேசினாலும் அதை உடனே கலைத்துவிடுகிறான் என்று கேள்வி. இதற்கெல்லாம் வீட்டோடு கிடக்கும் என் தாயாரால் என்ன முடியும்? அண்ணா ரத்தினமோ ஒன்றுந் தெரியாதவன். தந்தை யிறந்ததில் மிகவும் நொந்துபோனான். இப்போத்தான் வேலையிலமர்ந்திருக்கிறான். அவனுக்கு லீவு கிடைப்பது கஷ்டம்.

அம். ரத்தினத்திற்கு என்ன வேலையாயிருக்கிறது?

வன. திருப்பூர் ரயில் ஸ்டேஷனில் டிக்கெட்கலெக்டர் வேலை.

அம். ஆமாம்; கஷ்டந்தான். உன்னுடைய அத்தான் ஜோவியத்தில் நிபுணனுமே?

வன. அம்பிகே! நீ எனக்குயிர்த்தோழி! ஆகையால் எதையும் ஒளியாமற் சொல்லுகிறேன் கேள். என் தாயாரிடமும் இவ்வளவு விட்டுப்பேசேன். உன்னிடம் கூறுகிறேன். கேள்.

அம். ஆமாண்டியம்மா! வனஜா! உலகத்தில் மானிடர்களுக்கு நல்ல தோழமை கிடைப்பின் அதனிலும் சிறந்த துணையொன் றுண்டோ? சுகம் வந்தவிடத்து நம்மோடு சம்பாஷிக்கவும், துக்கம் வந்த விடத்து நமக்கு வந்ததைத் தமக்கு வந்ததாகக்கொண்டு அதை நிவர்த்திக்க வழி தேடுவதும் உற்ற தோழிகளுக்கேற்ற கடமைகளாம். உறவாடிக் கெடுக்கும் துரோகிகள் சிலருண்டு. அவர்களை நம்பலாகாது. உன் மனதிலிருப்பதைக் கூசாமலும் ஒளியாமலும் சொல். அதன்பேரில் எனக்குத் தெரிந்த யுக்தியையும் சொல்லுகிறேன்.

வன.

அகவல்.

ஆருயிர்த் தோழியாம் அம்பிகே! நீகேள்
பாரிடத் தவனிலும் பதிதன் வேறில்லை
மெய்யைத் தள்ளிப் பொய்யைத் தழுவி
வையம் பழிக்க வார்த்தை யாடுவான்
குளிப்பது மில்லை கொடுப்பது மில்லை
களித்துத் திரிவன் கடாவென வுண்டு
தெய்வங் கருதான் சோம்பித் திரிவான்
செய்வன திருந்தச் செய்யவும் நினையான்
எழுத்து வாசனை யெள்ளள வில்லான்

பழித்துப் பிறரைப் பகர்வான் சோதிடம்
இக்ஷிணி யுபாசனை யிவனுக் குண்டு
பக்ஷி பார்த்துப் பகர்வான் சோதிடம்
சென்றன பகர்வான் நின்றன பகரான்
தன்றிறன் பேசித் தருக்கித் திரிவான்
இன்றைக் கோரூர் நாளைக் கோரூர்
சென்று திரிந்து செப்புவன் சோதிடம்
காசு பறிப்பன் வேசிக் கிடுவன்
பேசில் வயதும் நாற்பது பெண்ணே
அந்தோ! இவனை யாரே மணப்பர்
பைந் தொடி நீயே பகர்வாய்!

**அம்.** சி! அப்படியா? ஆள்மாத்திரம் பார்வைக்கு வாட்ட சாட்டமா யிருக்கிறானே. மீசை வேறு கறுப்பண்ண சாமிக்கு இருப்பதுபோல் இருக்கிறதே. இவ்வளவு தானா இவன் பண்டவாளம்! வயதும் நாற்பதா? நாற்ப தான பிற்பாடு கல்யாணம் வேறு வேண்டுமா? காடுவா வென்றழைக்கின்றது; வீடுபோவென்று தள்ளுகின்ற தாக்கும்!

**வன.** ஆமாண்டி அம்பிகே! அப்படித்தான். மதியே கிடை யாது. சிறுபெண்ணை நாம் கல்யாணஞ் செய்துகொண்டு அப்பெண்ணின் வாழ்வைக் கெடுக்கலாமா வென்னும் ஞானமே யில்லாத மடையர்கள் அநேகருண்டு. அவர் களுள் இவனும் ஒருவன். நம்மை விரும்பாதவரை நாம் விரும்பிப் பயனென்ன என்பது இந்தப்பாபிக்குத் தெரியவே இல்லை. இந்த மூடன் என் அக்காளை யெல் லாம் கேட்டுக்கொண்டு வந்தானாம். என் தந்தைக்குச் சம்மதமில்லாமல் வேறு வேறிடங்களில் அவர்களைக்

கொடுத்துவிட்டார். மேலும் என் சிறிய தந்தை சுந்தரமையரும் தன் பெண்ணை இவனுக்குக் கொடுக்க இஷ்டமில்லாமல் இவன் தம்பிக்குக் கொடுத்திருக்கிறார்.

அம். இப்பொழுது உன் சித்தப்பா தானே இவனுக்கு உன்னைக் கொடுக்கவேண்டுமென்று பரிந்து பேசுகிறார். ஏன் ?—

வன. உம்—ஆமாம். என் சிற்றப்பாவும் அவர்களும் ஒன்று. என் தந்தை மாத்திரம் வேறு. எப்போதும் இப்படித் தான். இப்பொழுது அவன் தயவை உத்தேசித்து என் சிற்றப்பா என்னை இப்படிக் கொடுக்க உத்தேசிக்கிறார். என் தந்தை இறக்க ஒருவாரமிருக்க இந்தப் பாவிக்கு என்னைக் கொடுப்பதாகப் பேசி முகூர்த்தமும் குறித்தாய்விட்டது. நல்ல வேளையாய் என் தந்தை இறந்ததுமன்றி அவரிடம் பேசியபடி அவன் நகைட் பணமும் கொண்டுவரவில்லை.

அம். வனஜா! தந்தை அப்போது இறவாதிருந்தால்—

வன. இறவாதிருந்தாலென்று கேட்கின்றாய்? ஒருகாலும் இணங்கேன்.

அம். என்ன செய்வாய்?

வன. (கண்களில் நீர் ததும்புகிறது) (மௌனம்)

அம். விசாரப்படாதே.

வன. அம்பிகே! உன்னோடு இன்று துணிந்து கூறுகிறேன். இந்தக் கல்யாணம் நேர்ந்திருக்குமாயின் புறப்படுவதற்கு முன் கிணற்றில் விழுந்து உயிர்விட எண்ணியிருந்தேன். நல்வேளையாய்—

அம். அம்மா! வனஜா! ஈசன் செயல். அதனால்தான் இது

தட்டிற்று. இல்லாட்டால் முடிந்திருக்கும்—என் தந்தை சொல்வார்—

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்ருகும்
அன்று யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
என்னையாளும் ஈசன் செயல்."

என்று ஈசன்செயலைப் புகழ்வார்—அன்றி இன்னுங் கேள்—

நான் எனக்குப் பத்தாவது வயதில் ஒருவருமில்லாத சமயத்தில் சமயலறைக்குட் சென்று பார்த்து, தெரியாமல் புண்ணுக்குப் பொடியை அள்ளிச் சர்க்கரையென நினைத்து வாயில் போட்டுக்கொண்டு விட்டேன். கசந்ததும் அப்படியே வெளியேவந்து துப்பவந்தேன். அப்போது என் தந்தை வந்து, என்ன அம்மா வென்ருர்—நடந்ததைச் சொன்னேன்—அவர் நகைத்து, நான் வாய் கொப்பளித்தபின் மடியி லுட்கார வைத்துக் கொண்டு தெய்வசித்தம் வேறு என்பதை—

"மானென்ற வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானை வேண்டித்
தேனென்ற மொழிச்சீதை சிறையிருந்தாள்
சீதைதனைத் திருடிச் சென்றே
வானென்று மாசிழந்தா னிராவணனுந்
தண்டலையார் மகிமை யன்றே
தானென்று நினைக்கிலதைத் தெய்வமொன்று
நினைப்பதுவும் சகஜந் தானே"

என்ற இந்த அமுதவாக்கால் விளக்கினர். அதுமுதல் நானதை நினைத்துத் தெய்வசித்தம் வேறு என்பதை யுணர்ந்து மனத்திடங் கொள்வேன்.

வன. அம்பிகே! நன்றாயிருக்கிறது—அடி அம்பிகே! ஸ்திரீகளுக்குப் புருஷன் தானேயடி கதி. அவன் மூடனானல்—உலகத்தில் உயிர் வைத்துக்கொண்டிருக்கவும் வேண்டுமோ ஒருத்தி. எனக்கு விவரந் தெரியாததற்கு முன்னே விவாகம் நடத்தியிருந்தால் இப்படி எண்ணயிடமிராது—நானென்ன செய்வேன்! கண் எனக்கு நன்றாய்த் தெரியும்போது என்மனம் எப்படி என்னைக் குழியில் தள்ளும்?

அம். ஆமாண்டியம்மா! அது உண்மைதான். அரசிலை கட்டத் தெரியாத பெண் குழந்தைகளுக்கும் விவாஹம் செய்துவிடுகிறார்களல்லவா நம்மவர்கள்!—பின் அந்தப் பெண்கள் வருத்தப்படுவதை இப்போது நினைக்கக் கூடாது—சிவ! சிவ!! இருக்கட்டும்—நானொன்று சொல்கிறேன். அப்படி நடந்து வா. உனக்கு நல்ல நாயகன் கிடைப்பான். இந்தச் செவியில் கேட்டு பின் விட்டு விடுவதாயின் கூறேன்

வன. அப்படியும் செய்வேனா?—

அம். நீ வெள்ளி, செவ்வாய் இரண்டு கிழமையும் கௌரி பூஜை செய்யவேண்டும். செய்தால் நல்ல நாயகனை யடைவாய். நான் என் தந்தையின் கட்டளையால் அப்படிச் செய்து வந்தேன்.

வன. கௌரி பூசை புரிவதெப்படி? கௌரி யென்றால் யார்?

அம். பார்வதிதேவி தான் கௌரி. இப்பொழு துனக்கு வீட்டில் பூசை செய்ய முடியாது. இரண்டு கிழமையுங் கோவிலுக்குத் தேங்காய் பழத்துடன் சென்று அம்மனைத் தரிசித்து வா—போதும்.

வன. அம்பிகே! இப்போது நீ சொல்கிறபடி தேங்காய்

பழத்துடன் கோயிலுக்குப் போகமுடியாது. நான் அந்த ஸ்திதியிலிருக்கிறேன்! வேறுபாயம்—

**அம்.** இருக்கட்டும். அப்படி வேண்டாம். சும்மாவேனும் சென்று அம்மனை மெய்யன்புடன் தரிசித்து வா! அதுவே போதும். மெய்யான அன்பு செய்வாருக்கு லோகமாதாவாகிய கௌரி அடிமையாக இருந்து வேண்டுவன புரிவாள். அன்பிற்குக் கட்டுப்படுவள் அந்தத் திரிலோகசுந்தரி. அம்மணியின் அருள் பெற்றவர்க்கு எதுவும் கைகூடும்.

வன. சரி—அப்படியே செய்கிறேன்.

**அம்.** வா போவோம் விரைந்து. கோயிலுக்கு வந்துவிட்டோம். ஈசனை மௌனமாயிருந்து தியானித்தலே நலம். தீபாராதனை சமயம்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாம் காட்சி

இடம்—திருக்கத்தில் சாம்பசிவையர் வீடு.
காலம்—இரவு எட்டுமணி.

வனஜாக்ஷியும், சிவப்பிரியையும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சிவ. வனஜா! நீ இன்று உன் சித்தப்பா வீட்டுக்குப் போயிருந்தாயா?

வன. போகவில்லை.

சிவ. ஏன் கோயிலிலிருந்துவர இந்நேரமென்ன?

வன. இன்று கோயிலில் ஒரு பிரபு அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை முதலியன செய்தார். இன்று

அம்மனிருந்த அழகைப் பார்க்கப் பதினாயிரம் கண்க ளிருந்தாலும் போதா. அன்றியும் அந்தப்பிரபுவின் மனைவி ஒரு பாட்டு அம்மன்மீது பாடினாள். அது வெகு இன்பமாக விருந்தது. அதைக் கேட்டுக் கொண்டே யிருந்தேன். பிறகு அந்த அம்மாளிடம் சிநேகஞ் செய்து அதை யொருமுறை எனக்குச் சொல்லும் படி கேட்டேன். அவ்வம்மை மனமுவந்து மறுபடி யும் பாடினள். அதை நான் தெரிந்து கொண்டேன். பாடட்டுமா ?

சிவ. என்மனம் இப்போது ஒரு நிலையிலில்லை. உன் சித்தப்பா வீட்டுக்கு ஜானகிராமன் வந்திருக்கின்றானாம்.

வன. உம்—

சிவ. இப்போது இங்கு வருவானாம். அவன் வந்தால் என்ன தெரிவிப்பதென்கிற யோசனையும், கவலையும் அதிகமாக விருக்கின்றன.

வன. அம்மா ! இதற்காக ஏன் விசனப்படவேண்டும். பெண் கொடுக்கச் சம்மதமில்லையெனத் தெரிவித்து விடுங்கள்.

சிவ. அம்மா ! நானென்ன செய்வேன் ! உனக்குக் கல்யாண மாகவேண்டு மென்னும் விசனம் என்னை இரவும், பக லும் வருத்துகிறது. கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்குகிறது நெஞ்சம் ! இந்தப் பாவிக்குப் பெண்ணைக் கொடுக்கவும் விதியிருக்கும்போ லிருக்கிறதே என்ப தும் பாதிக்கின்றது. வேறே வரனையுங் காணோம். நாதி யுமில்லை. குழந்தை ரத்தினம் என்ன செய்வான்? இப்பொழுதுதான் தலையெடுக்கிறான். அவனுக்கு ஒன் றுந் தெரியவில்லை. நானெங்கே போகட்டும்—

[கண் கலங்குகிறாள்.]

அம்பிகை பிரவேசிக்கிருள்.

சிவ. அம்பிகே! வா! உட்காரு. ஏது இந்த வேளையிலே வந்தது?

[வனஜாக்ஷி மனை கொண்டுவந்து போடுகிருள்.]

அம். எங்கே உட்காரப்போது, ஏன் விசாரப்படுகிறீர்கள்?

சிவ. என்னமோ நினைத்துக்கொண்டேன்—

அம். சுகம் வரும்போது நம்மைக் கேட்டா வருகிறது? துக்கம் வரும்போதும் அப்படித்தான். சுகப்படுவதும், துக்கப்படுவதும் சமுத்திர அலைபோல் மாறிமாறி ஏற்படுவதாகும். ஒன்றும் மாருமல் நிலைத்திருப்பதில்லை. இப்போது எனக்கொரு பாட்டு ஞாபகம் வருகிறது. கேளுங்கள்.—

பாடுகிறள்.

"இன்பம தடைந்த காலை யினிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம துற்ற போதும் துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமும் துன்பந் தானு மிவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்"

எப்படி யிருக்கிறது பார்த்தீர்களா? அவைகளைப் பாராட்டி நாம் வருந்துவது வீணே.

சிவ. குழந்தைக்குக் கல்யாணமாக வேண்டாமா? வயதாய் விட்டதே; பிராமணர்களுள் இவ்வளவு வயதுவரையில் யார் கல்யாண மில்லாமல் நிறுத்தி யிருக்கிருர்கள் பெண்களை. என் நாத்தனர்பிள்ளை தான் வந்து தொந்தரவு செய்கிருன். வேறொருவரையுங் காணேம்; என்ன செய்யட்டும்—?

அம். கௌரியின் திருவருளால் அவளுக்கு வேறு நல்ல வரன்

கிடைக்கும். இந்த மூடாத்மாவுக்குக் கொடுக்கவேண்டாம். நான் போகவேண்டும். எங்கே இரண்டு இலையிருந்தால் கொடுங்கள். மத்தியானம் வாங்கிவரச் சொல்ல மறந்துவிட்டேன். விசாரப்படாதேயுங்கள். அம்மனைத் தியானம்செய்துகொண்டிருங்கள். காரியம் கைகூடும்.

[வனஜாக்ஷி இலை கொடுக்கிறாள். அம்பிகை வாங்கிக்கொண்டு போகிறாள்.]

**சிவ.** அம்பிகை!

[திரும்புகிறாள்.]

இவனுக்குப் பெண்கொடுக்க வேண்டாமென்பதுதானா உன் கருத்து?

**அம்.** ஆமாமா! வார்த்தைவிட வேண்டாம். நான் போகிறேன்.

[போகிறாள்.]

**சிவ.** எங்கே வனஜா! கோயிலில் யாரோ பாடினதாகக் கூறினாயே; அதைப் பாடு. கேட்டுக் கொண்டாவதிருக்கிறேன்; என்னைப் பிடித்த பீடை தொலையட்டும்.

**வன.** பாடுகிறாள்.

## விருத்தம்.

ககனவெண் மதியெனத் திகழ்வதன வழகும்நின்
  கார்கொண்ட குழலி னழகும்
கருணைமழை பொழியுமிரு கண்களும் கண்கொளாக்
  கவின்செய்குழை யணியி னழகும்
புகலரிய சோபிதச் செம்பவள விதழழகும்
  பூத்தமலர் முல்லை நகைவாய்
புகலுமொழி பயிலவந் துளதிதா மென்னவொரு
  பூங்கிளிகொள் கரத்தி னழகும்

தகதகென வொளி நிலவு மார்பிற் பதக்கமும்
  தங்கவொட்டியாண வழகும்
சலதிநிகர் வினைதொலைத் தலவினல மருளுமிரு
  சரணார விந்த வழகும்
இகபரமெய் யுணராத யேழையே னேதுமறி
  வில்லாத நாயினே னுனல்
இயம்புதற்கியலுமோ யெனையீன்ற அன்னையே
  இரட்சிப்பதுன் பாரமே.

சுந்தரமையரும் ஜானகிராமய்யரும் பிரவேசிக்கிறார்கள்.

ஜா. மாமா! இங்கேயே யிருங்கள்; யார் பாடுகிறது கேட்போம்.

சு. (நின்று) நம்மகுட்டி வனஜாதான்.

ஜா. (மூக்கில் கைவைத்து) வனஜாவா பாடுகிறது? இல்லை! நிச்சயமா? அவளல்ல?

சு. ஆமாப்பா அவள்தான்.

ஜா. இல்லை. நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்.

சு. பார்ப்பானேன்? எனக்குத் தெரியாதா?

[ஜானகிராமையர் மெதுவாய் எட்டிப் பார்க்கிறார்.]

ஜா. (சரேலென்று) ஆமா மாமா! என்ன குரல்! வெகு நன்றாயிருக்கிறதே! இவள் இப்படிப் பாடுவாளென்று நான் எண்ணவே யில்லை! ஆ! ஆ! பேஷ்!

[தலையை யசைக்கிறார்.]

சு. வா போவோம்.

[நகர்கிறார்.]

ஜா. இருங்கோ மாமா! போவோம். போனால் பாடமாட்டாள்.

[நிற்கிறார்கள்.]

சு. பாடுவதுமட்டுமா? தமிழ், தெலுங்கு இரண்டுபாஷை

யிலும் நன்றாய் எழுதப் படிக்கத் தெரியும். இவை யெல்லாம் எங்கள் மன்னியினுடைய சிக்ஷை.

ஜா. ஆமாம்! படிக்கத் தெரியுமென்பது நா னறிவேன். பாடத்தெரியு மென்பது எனக்குத் தெரியவே தெரியாது. எங்கே நம்மோடு கோகர்ணதீக்ஷிதர் வந்தாரே?

சுந். "கடையில் பொடி வாங்கிக்கொண்டு வருகிறேன்; போங்கள்" என்று சொல்லி நின்றார். வரக்காணோம்.

ஜா. மாமா! உம்மைத்தான் நம்பியிருக்கிறேன். எந்த விதமாய் ஏற்பாடுசெய்வீர்களோ எனக்குத் தெரியாது. காரியத்தை முடித்துக்கொடுக்க வேண்டும். நான் இவளைக் கல்யாணம் செய்து கொண்டேனாயின் பாக்கியம் செய்தவனாவேன். இவளுடைய தமக்கைக ளொருவருக்கும் இந்தக் குரலில்லையே. இவளுக்கு மாத்திரம் எப்படி ஏற்பட்டது? (தனக்குள்) என் பொருட்டுத் தான் இப்படி இவளுக்குக் குரலமைந்ததுபோ லிருக்கிறது! (உற்றுப்பார்த்து) அடி! உன்னைக் கல்யாணம் செய்யாமல் விட்டேனா பார்?

[மீசையை முறுக்குகிறான்.]

ஆ! ஆ! என்ன இனிமை! (தனக்குள்) அடி வனஜா! நான்தாண்டி உனக்கு நாயகன். அடி! உன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் என் கலி தீருமே! உன் பக்கத்திருந்தாலும் என் வினை யொழியுமே! (வெளிப்படையாய்) பேஷ்! பேஷ்!

[தலையை யசைக்கிறார்.]

கோகர்ணதீக்ஷிதர் பிரவேசிக்கிறார்.

**கோ.** எனக்காகவா காத்துக்கொண்டு இந்த வழியிலேயே நிற்கிறீர்கள்?

ஜா. (பார்த்து, முகஞ் சுளித்து) வாயை மூடிக்கொண்டு வாரும் காணும். எருமைத் தொண்டை. ஆ! ஆ!!

கோ. (மெதுவாய்) ஓகோ! பாட்டோ! யார் யார்?

ஜா. இருங்காணும்.

சுந். அண்ணு பெண்!

கோ. ஜானகிராமையர் ஆம்படையாளா?

சுந். ஆம்படையா தான். வைத்துக் கொள்ளேன்.

[ஜானகிராமையர் கோகர்ணனைப் பார்த்து நகைக்கின்றார்.]

கோ. என்ன இழுத்தாப்போல் பேசுகிறீர். ஆம்படையா தான்! ஆம்படையா தான்! தடையில்லை. தடையே யில்லை.

ஜா. ஆமாம்—கொஞ்சம் சும்மாவிருமே.

[பல்லைக் கடிக்கிறார்.]

கோ. சும்மா எப்படி யிருப்பேன்? பாட்டு என்னை ஆடச் சொல்கிறது.

ஜா. அட இருங்காணும். சும்மா! மாமா! ஞாபகமிருக்குமா? நல்ல வேலை செய்து காரியத்தை முடிக்கணும். அதற்குத் தக்கபடி—

கோ. மாமாவிடந்தான் வேலை வாங்குகிறதோ? அதுதான் மரியாதையோ?—

ஜா. சும்மா விரு ஓய்! உம்முடைய விளையாட்டுக்குச் சமய மில்லையோ?

கோ. நான் வேலை—

ஜா. செய்யுமே. உமது விகடத்தால் மயக்குமே.

[வனஜாக்ஷி பாடி நிறுத்துகிறாள்.]

சிவ. வனஜா! நன்றாயிருக்கிறது. எப்படி இவ்வளவு சீக்கிரம் வரப் பண்ணிக் கொண்டாய்?

வன. மூன்று தடவைதான் சொன்னாள். வந்து விட்டது.

சிவ. மறந்து விடாதே.

வன. மறக்க மாட்டேன். (திரும்பிப் பார்த்து) யார் வருகிறது?

சிவ. சித்தப்பாவோ என்னமோ!

வன. ஆமா!

முதலில் சுந்தராமையர் பிரவேசிக்கிறார்.

வன. வாருங்கள், சித்தப்பா சாப்பிட்டாயிற்றா? உட்காருங்கள்.

சுந். ஆச்சடியம்மா? ஜானகிராமனும், கோகர்ணதீக்ஷிதரும் வந்திருக்கிறார்கள். அவர்களும் இப்போத்தான் சாப்பிட்டார்கள். இங்கே வந்திருக்கிறார்கள்.

[உட்காருகிறார்.]

சிவ. இங்கேயா?

சுந். ஆமா!

ஜானகிராமையரும் கோகர்ணதீக்ஷிதரும் பிரவேசிக்கிறார்கள்.

ஜா. அம்மாமி! நமஸ்காரம் செய்கிறேன்.

[பனைமரம் வெட்டிச் சாய்ந்தாப் போல் சாய்கிறார். வனஜாக்ஷி எழுந்து ஒரு புறம் பார்த்து நிற்கிறாள்.]

சிவ. அப்பா வா! (கோகர்ணனைப் பார்த்து) வாருங்கள்.—உட்காருங்கள்.

[ஜானகிராமன் எழுந்து உட்காருகிறான். தீக்ஷிதர் உட்காருகிறார்.]

ஜா. (மாமியைப் பார்த்து) மாமா இப்படி மோசஞ் செய்வா ரென்று நான் நினைக்கவேயில்லை. அப்போது வந்தேன் கண் குளிரப் பார்த்தேன்—

[கண் கலங்குகிறார். சிவப்பிரியை குனிந்து விசன முறுகிறாள்.]

கோ. (மெதுவாய்) ஆஹா பாவம்! ஜோஸியருக்குக் கூடத் தெரியாமல் அல்லவா நடந்துவிட்டது.

[வனஜாக்ஷி முகந்திரும்பி புன்முறு வல் செய்கிறாள்.]

சுந். போனது போய்விட்டது. இனியென்ன?

[எல்லோரும் மௌனம்.]

ஜா. அம்மாமி! குழந்தை ரத்தினம் இப்போது எங்கிருக் கிறான்?

சிவ. திருப்பூரில்—

ஜா. என்ன செய்கிறான்?

சுந். அதுதான் சொன்னேனே டிக்கெட் கலெக்டரென்று.

ஜா. குழந்தை அவனுக்குங் கஷ்டந்தான். என்ன செய்ய லாம்! விதியை யார்தான் வெல்ல வல்லார்?

கோ. விதியை வெல்வதரிது! வெல்வதரிது! நாமென்ன மார்க்கண்டனா? இப்பொழுது ஆகவேண்டியதைப் பேசி முடியுங்கள். விதியைக் கொண்டுவந்து நடுவில் விட்டுக் கொள்ளாதேயுங்கள். பிறகு விதிப்படி நடக்கட்டு மென்று பேச வேண்டியதாகும்.

ஜா. (வனஜாக்ஷியைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு) அம் மாமி! நீங்கள் ஊருக்கு வந்துவிடுங்கள்; போகலாம். இங்கிருந்து கஷ்டப்பட வேண்டாம். தை மாசம் முகூர்த்தம் வைத்துக்கொண்டால் சௌகரியம்.

**சிவ.** நாங்கள் இப்போது அங்கு எங்கேயும் வரமுடியாது. முன் முகூர்த்தம் வைத்துதான் இந்தக் கதியாயிற்று. அதுவே பெரிய சகுனத்தடை.

[கோகர்ணதீக்ஷிதர் உதட்டைமடித்துப் புருவத்தை நிமிர்த்துக்கிறார்.]

இனிப் பழையபடியும் அதில் பிரவேசிக்க எனக் கிஷ்டமில்லை. அப்பொழுதே நடந்திருந்தால் நடந்தது தான்—

**கோ.** (மெதுவாய்) அதிர்ஷ்டம்!

**சுந்.** என்ன மன்னி! திருப்பித் திருப்பி அதையே சொல் லிக்கொண்டு; சகுனம் வந்து என்னவோ பண்ணுகிற தாம்.

[வனஜாக்ஷி தலையை அசைக்கிறாள்.]

**சிவ.** இன்னும் என்ன பண்ணணும்? இது போதாதா? என்னை மூலையிலே—

**ஜா.** இது உலகத்திற்கு இயற்கை தான். யாரிருப்பது நிச்சயம்! எப்போது பிறந்தோமோ அப்போதே!—

**கோ.** (தனக்குள்) என்ன பேசுகிறான்! இந்த மிருகத்திற்கு இப்படிப்பட்ட பெண் வேண்டுமாமே! இவன் புத்தியைப் பார்.

**வன.** (தனக்குள் முகத்தைத் திருப்பிக்கொண்டு) வேதாந்தம்! வேதாந்தம்!!—

**சுந்.** அம்மா! நீ சொல்வது காதிற் படுகிறது. எல்லாம் யாருக்கு—

**வன.** (திரும்பிய வண்ணத்தில்) யாருக்கு—

**கோ.** (தனக்குள்) அப்படி! அப்படி!

**சுந்.** உனக்காகத்தான் இவ்வளவு வேதாந்தம் பேசுவதும்.

வன. எனக்காகவா! உமது நெஞ்சைத் தொட்டுப்பாரும்.

[ஜானகிராமையர் விழித்துப் பார்க்கிறார்.]

கோ. குழந்தாய்! என்னம்மா யோசனையின்றிப் பேசுகிறாய்? உனக்கு வித்தியாசம் நினைப்பாரா உங்கள் சித்தப்பா?

சிவ. வனஜா! இன்னமே பேசாதே. அவர் எப்படியிருந்தாலும் சரி; அவர் யார்? உன் சித்தப்பாவல்லவா? எல்லாவற்றிற்கும் கடவுளிருக்கிறார். தீக்ஷிதரே! கடைசியாகக் கூறி விடுகிறேன். இனி இந்தச் சம்பந்தஞ்செய்ய எங்களுக் கிஷ்டமில்லை. இதைத் தவிர வேறு ஏதாவதிருந்தாற் பேசும்.

சுந். எதைப்பற்றி நீ இஷ்டமில்லை யென்கிறாய் மன்னி!

சிவ. எதற்கோ இஷ்டமில்லை; நானே னதைச் சொல்லவேண்டும். இப்போது நான் ஒன்றும் செய்ய முடியாதவளாயிருக்கிறேன். அவளுக்கு விவரந் தெரிந்துபோய் விட்டது. நாம்—

கோ. குழந்தை ஒரு * கோபுரவஸ்துவைக் கல்யாணஞ்செய்து கொள்கிறேனென்றால்—

ஜா. அப்படிக் கோளும்!

சிவ. அப்படி விட்டுவிடுவோமா? அப்படித்தான் அவள் கேட்பாளோ? கண்ணிருகையில் சுவரில் மூடிக்கொள்வாருமுண்டோ?

வன. (மெதுவாய்) கண்ணில்லையா? புத்தியில்லையா?

ஜா. வனஜா! வனஜா!! என்னைக் கல்யாணம்செய்துகொள்ள இஷ்டமில்லையா?

வன. இஷ்டமில்லை.

---

* குரங்கு.

ஜா. இஷ்டமில்லையா ?

சுந். பின் யாரை ?

கோ. அத்தானை—

ஜா. (சிறித்து) அப்படித்தானே.

வன. யாரையோ !

கோ. அத்தானைத்தானையா ?

வன. ஜகதம்பிகை எனக்கென்று பிறப்பித் திருக்கும் புருஷ சிரேஷ்டனை.

[ஜானகிராமையர் பார்க்கிறார். மீசை துடிக்கின்றது.]

கோ. அந்த தீரபுருஷன் யார்? எங்கிருக்கின்றான் ? அவனை நாங்கள் பார்க்கலாமா ?

வன. யாரானு லுங்களுக்கென்ன ? நிரபராதியும், அபலையும், நாதனற்றவளுமான ஒரு கன்னிகையைப் பேய் கையில் ஒப்புவிக்க வந்து தந்திரஞ்செய்யும் வஞ்சகர் கண்ணுக்குத் தென்படான் அவன்.

ஜா. உம்—உம் ! (பெருமூச்சுடன்) அப்படியா ! மாமா ! போவோம். எழுந்திருங்கள். எழுந்திருங்கள்.

சுந். இருடா ! நீ அதற்குள்ளே !

ஜா. மாமா ! என் பேரை மாற்றியழையும் இந்தப்பெண்ணை என்னையன்றி வேறெவரேனும் கலியாணஞ்செய்து கொண்டால்—வாருங்கள் போவோம்.

[எழுந்திருக்கிறான்.]

வன. உங்கள் பெயரைப் பிறகு மாற்றியழைப்பதேன். இப்பொழுது தான் ஜோஸியர் என்கின்றார் சிலர். பக்ஷி பிடிப்போன் என்கிறார் சிலர். சவடால்ராயன் என்கிறார்

சிலர். சர்வக்ஞன் என்கிறார் சிலர். தந்திரக்காரன் என்கிறார் சிலர். மந்திரக்காரன் என்கிறார் சிலர்.

**கோ.** பெரிய பெரிய பேரெடுத்திருக்கிறாய் நீ! இவ்வனந்தம் பேருனக்கிருக்கென்பதை நானறியேனே இதுவரையில். பேரெடுத்தவனுக்கு எதுதான் பெரிய காரியமாகும்! பார்க்கின்றேன் உன் சபதத்தை!

[எழுந்திருக்கிறார். இருவரும் போகிறார்கள்.]

**ஜா.** (மீசையை முறுக்கி வனஜாக்ஷியைப் பார்த்துக்கொண்டு) (தனக்குள்)—நன்று நன்று உன்பேச்சு!

**கோ.** குட்டி வெகு கெட்டிக்காரி. தேங்காய் உடைத்தாப் போல் பதில்கொடுக்கிறாள். ஜானகிராமா! உனக்கேத்த குட்டிதான்.

**ஜா.** மாமா பெண்களே இப்படித்தானிருக்கும்! எல்லாம் வாட்டசாட்டமாக வளர்ந்து மனத்தை உருக்கும் வனப்போடு விளங்கும். அதனால் தான் போராடுகிறது மனம்.

**சுந்.** மன்னி! என்ன இந்தக் குட்டி விவரமில்லாமல் பேசுகிறது. அவன் கொடுக்கிறதென்று ஆரம்பித்துவிட்டால் யார் கல்யாணம் செய்துகொள்ள வந்தாலும் கெடுத்து விடுவான். அந்தப் பயலுக்கு சூன்ய மந்திரம் வேறு தெரியும்.

**சிவ.** நானென்ன செய்யட்டும்; அப்படியும் நேரிட்டால் அனுபவிக்க வேண்டியதுதான். எல்லா மீசன்செயல். வருவதை யாரே விலக்க வல்லார்?

**வன.** (மீண்டும் வெளியேவந்து) அவன்தான் ஆண்பிள்ளையா? நீங்கள்—

**சுந்.** குட்டி! நீ என்னோடு பேசாதே. உனக்கென்ன தெரியும்?

வன. தெரிந்தவர்களெல்லாம்—

சுந். எக்கேடு கெட்டுப்போங்கள்; சீப்படுங்கள். நான் இனிக் காதில் போட்டுக் கொள்வதில்லை இந்தச் சனியனை!

[எழுந்துபோகிறார்.]

வன. அம்மா! இவனைச் சும்மா விடப்படாது. இவனால் வர கலகந்தான். எப்படிப் பதிலுக்குப் பதில் கொடுத்தேன் பார்—

சிவ. சரிதான்—அவ்வளவுதூரந் தான் ஏன் பேசவேண்டும்? வாயைக் கொட்டக்கூடாது.

வன. என்ன பேசிவிட்டேன். அவர்கள் கள்ள எண்ணத்தைக் கண்டு அதற்குத் தக்கப்படி பதிற் சொன்னேன். இல்லாவிட்டால் இந்தப்பயல்கள் நம்மை மேய்த்துவிட மாட்டார்களா?

சிவ. என்னவோ அம்மா! எப்போது ஈசன் கிருபை செய்வாரோ உனக்கு! கடலைத் தாண்டிவிட்டேன். கண்ணி வாய்க்காலிற் கஷ்டப்படுகிறேன்.

வன. ஏனம்மா விசாரப்படுகிறாய்! ஔவைப் பிராட்டியார்க்குக் கலியாணமே கிடையாதாம். அப்படி யிருந்துவிட்டால்—எல்லாவற்றிற்கும் மனந்தானே காரணம்.

சிவ. அப்படி முடியுமா?

வன. சொன்னேனே யம்மா? மனதல்லவா எல்லாத்துக்கும்!

சிவ. மனத்தை நாம் வழிக்குக்கொண்டுவருவதென்றால் அது சாதாரணத்தி லாகக்கூடியதா?

காட்சி முடிகிறது.

———

## நான்காம் காட்சி

இடம்—ராஜபாவி. காலம்—பகல்.

வனஜாக்ஷி ராஜபாவியில் குளித்து நீரெடுத்துக்கொண்டு வீடு திரும்ப யத்தனிக்கிருள்.

ஜானகிராமையர் பிரவேசிக்கிருர்.

ஜா. (தனக்குள்) என்னடா இது! நாம் யதேச்சையாய் வந்தோம். இவள் இங்கிருக்கிருளே! என்ன ஆச்சரியமிது?—தரித்திரன் எதிர்ப்பட்ட தனக்குவியல்போலல்லவா இன்று எனக்குப் பேராநந்த மளிக்க இங்கு வந்து எதிர்ப்பட்டிருக்கிருள். ஒருவரையுங் காணும்; தனியாகவல்லவா இருக்கிருள். இப்பொழுது எதிரே போகவேண்டாம். மறைந்திருப்போம். சற்றுப்பொறுத்துச் செல்வோம்.

[ஓரிடத்தில் மறைந்து நிற்கிருன்.]

அழகோ வழகினுக் கணிகல மோபர மானந்தத்தே
எழுகோ கனகத் தேந்திழை யோசொல்லு மேழுலகம்
தொழுதேத் துமொரு தேவதை யோதிகழ் ஜோதிமின்னே
பழுதே யிலாதபொற் பாவைகொ லோவிந்தப் பைந்தொடியே!

ஆ! ஆ!! இவளை எவ்வளவு முறை நான் பார்த்திருக்கிறேன். இத்தோடு நூறு தடவை யிருக்குமே! ஒரு தரம் பார்த்தாப்போல் ஒருதரமில்லையே இவள். இது என்னுடைய கண்ணின் குற்றமா அல்லது இவள் மேனிதான் நாளுக்கு நாள் மாறுகின்றதோ தெரியவில்லையே. இப்பொழுது இவள் தலைமயிரைச் சொருக்கிட்டுப் புட

வையை இழுத்துக் கட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் அசல் மலையாளச்சியைப்போலல்லவா இருக்கின்ருள். முன் பார்க்கும்போதெல்லாம் என் மனம் இவளைப் பற்றி இவ்வளவு சிந்தித்ததில்லையே. நேற்று முந்நாள் கூடப் பார்த்தேனே. இன்றென்ன இப்படி மயங்குகிறது என் புத்தி. எல்லாம் மதனன் செய்யும் வேலை போலும். உருவிலியாயிருந்தும் என்ன வேலை செய்கிருன். ஆ! ஆ!! இந்த நாற்பது வயதைப் பாழுக்காக்கினேனே! இப்படிப்பட்ட மாதை மணந்து இல்லறம் நடத்தினேனு? வேறு மாதை மணந்திருந்தால் இவளை எங்கே நான் மணப்பது? அதற்காகத்தான் என்னை விவாகமில்லாமலிருக்கச் செய்தான் போலும் ஈசன். என் னதிர்ஷ்டமே யதிர்ஷ்டம்!

[கோகர்ண தீக்ஷிதர் ஒரு பக்கமிருந்து, தலையில் வேஷ்டியைச் சுற்றிக் கொண்டு பூணூலை மாலையாகப் போட்டுக்கொண்டு வருகிருர்.]

**ஜா.** (பார்த்து மெதுவாய்) போவோய் அப்படி.

[கைஜாடை காட்டுகிருர். கோகர்ணதீக்ஷிதர் மெதுவாய் ஒதுங்கி ஜானகிராமையரிடம் வருகிருர்.]

**கோ.** (மெதுவாய்) வீட்டுக்குப் போகப் போகிருள்போலிருக்கிறது.

**ஜா.** பேசாமலிரும். ஒரு வேடிக்கை பண்ணுகிறேன்.

[வனஜாக்ஷி குடத்தை யெடுத்து இடுப்பில் வைக்கிருள்.]

(தனக்குள்) ஓகோ! போச்சு! போச்சு!! (உதட்டை மடித்து எறவிழித்து, புருவம் நெறித்து) இடையெங்கே, குடமெங்கே, எந்தப் பாவி உன்னை ஜலமெடுத்துவர அனுப்பினது! சை! சிறிதும் இரக்கமில்லாத பாவிகள். பெண்ணென்றால் பேயுமல்லவா இரங்குமென்பார்கள். ஆ! என் கண்ணே!

வெண்பா.

கண்ணேயென் கண்ணிரண்டுங் கண்டுகண் டுமகிழப்
பெண்ணாகப் போந்த பெருந்திருவே!—தண்ணீர்க்
குடமெடுக்க வென்றன்கைக் குள்ளடங்கு முன்றன்
இடை பொறுமோ நில்லா திரு.

[என்று சொல்லிக்கொண்டு பொட்டென எதிர் தோன்றுகிறான்.]

வன. (தன் அத்தானெனக் கண்டு தனக்குள்) இந்த மூடன் எங்கு இங்கு வந்தான். இவனால் நம்மை யென்ன செய்ய முடியும் இந்தப் பட்டப்பகலில். அதுவும் இந்தத் தண்ணீர் துறையில்—(வெளிப்படையாய்) (குனிந்த வண்ணத்தில்) இடை தாங்கும் தாங்காது அதைப்பற்றி நீரேன் கேட்கிறீர்?

ஜா. வனஜா! நீ குடமெடுத்து வைத்ததைப் பார்த்துப் பரிதாபமுற்று ஓடிவந்தேன்.

வன. உம்—என்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டு வீணே இப்படி யெல்லாந் தடுமாறுகிறீர். அந்த எண்ணத்தை யொழித்து நமது பந்தத்துவமேனும் நிலைத்திருப்பதைக் கவனியுங்கள். இப்படித் தனித்த இடத்தில் வந்து வார்த்தையாடுவது தகாததாம். தூரப் போம். நான் போகவேண்டும்.

[போகிறாள்.]

ஜா. நில் வனஜா! கல்யாணம் செய்துகொள்ள வேண்டாம். வாய்வார்த்தை கூடவா கூடாது? பேசலாமோ இல்லையோ?

வன. பேசலாம். ஆயினும் நான் எங்கிருக்கிறேன்; என்ன ஸ்திதியி லிருக்கிறேன்.—யோசித்தீரா?

கோ. (மெதுவாய்) யோசனை யேது!

ஜா. பரவாயில்லை; இரண்டு கேள்வித்தான்.

வன. (தனக்குள்) இவன் கேட்ப தென்ன—பார்ப்போம்.

[குடத்தைக் கீழே வைக்கிருள்.]

(வெளிப்படையாய்) சீக்கிரமாக—

[அருகே போகிருர்.]

தூரமாயிருங்கள்.

கோ. (சிரித்து மெதுவாய்) புருஷர்கள் எப்படித் தூரமாயிருப்பார்கள்? என்ன விகடம் இப்பொழுது?

ஜா. ஆகா அப்படியே! (தூரநின்று) என்னை நீயேன் கல்யாணம் செய்துகொள்ளமாட்டே னென்கிருய்? கல்யாணம் செய்து கொள்ளத்தக்க பாந்தவ்யமில்லையா? நான் என்ன நொண்டியா? முடமா? குருடனு? சம்பாத்தியமில்லாதவனு?

வன. உம்மிடத்தில் எல்லாமுண்டு. ஆயினும் எனக்கு இஷ்டமில்லை.

ஜா. ஏன்?

வன. இதுவும் ஒரு கேள்வியா?

ஜா. அப்படியல்ல. நீ உன் நாயகனிடம் இருக்க விரும்புவதேது?

வன. எதுவாவதிருக்கும். நீரேன் கேட்கவேண்டு மதை.

ஜா. என்னிடமிருந்தால்—

கோ. (மெதுவாய்) இருந்தால் பேச்சேது?

வன. இருந்தால் இஷ்டமில்லை யென்பதேது?

ஜா. இருக்கட்டும். எனக்கு உன்னைத் தவிர வேறெவர் பேரிலும் இஷ்டமில்லையே. இதற்கென்ன செய்கிறது?

வன. கிடைத்தால் தானே இஷ்டமென்பது. இல்லாவிட்டால்—கிட்டாத பழத்திற்குக் கொட்டாவிவிட்டென் செய்வது? உம்மிடம் சிறிதும் விருப்பமில்லாதவளாகிய என்னை மணப்பதிலும் நீர் ஒரு மாத்தை—

ஜா. இருக்கட்டும், நீ இப்போது விரும்பாவிட்டாலும் நான் இனி உனக்கு விருப்பமுண்டாகும்படி நடந்து கொள்ளுகிறேன்.

வன. ஏனோ அவ்வளவு கஷ்டம்!

ஜா. நான் உன் இஷ்டப்படியே நடப்பேன். தடையிராது.

வன. நான்—

ஜா. நேசித்தவர்களை நேசிப்பதற்கு விரும்பாதவர்களுமுண்டோ?

வன. எவ்வளவோ பேர்.

ஜா. ஒருவரைச் சொல்ல முடியுமா?

வன. முடியும்.

ஜா. சொல்லு பார்ப்போம்.

கோ. (தலையை யசைத்து மெதுவாய்) நல்ல கேள்வி—

வன. நான் தான்.

[சிரிக்கிறார் ஜானகிராமையர்.]

ஜா. ஏனப்படி? அதென்ன குணமது?

கோ. (மெதுவாய்) துர்க்குணமோ? நற்குணமோ? இரண்டிலொரு குணம்.

வன. நீர் எப்படி எண்ணுகிறீரோ அந்தக் குணம்.

**கோ.** (மெதுவாய்) ஏது நம்மைவிட விகடகவியாக வல்லவா இருக்கிறாள் இவள்.

**ஜா.** வனஜா!

[அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார். கிட்டவருகிறார்.]

**வன.** தூரவே!

[கையைக் காட்டுகிறாள்.]

**ஜா.** வனஜா! நான் எப்படியிருந்தால் நீ பிரியப்படுவாய். இதை மாத்திரம் தெரிவித்துவிடு.

**வன.** நான் விரும்புகிறபடி இருக்க உம்மால் முடியாது.

**ஜா.** இருப்பேன் தெரிவி.

**வன.** வேண்டாம். முடியாது.

**ஜா.** எவ்விதத்திலும் நடப்பேன்.

ஆனந்தக்களிப்பு.

இராகம்-நாதநாமக்கிரியை.

பல்லவி.

முடியுமோ யீ துமக்கையா—உம்மால்
முடியா தினி வேறு ஜன்மத்திலன்றி (முடி)

சரணங்கள்.

பொடியைத் தொலைத்திடல் வேண்டும்—கெட்ட
பொய்யைக் கனவிலும் சொல்லலாகாது
குடியைத் தவிர்த்திடல் வேண்டும்—நிதம்
குளித்து முழுகுதல் வேண்டும் நான் சொன்னேன்.
வைகறைத் துயிலெழல் வேண்டும்—உன்றன்
வாய்நாற்றம் போகப் பல்விளக்கிடல் வேண்டும்
தெய்வம் நிதந்தொழ வேண்டும்—யாரும்
சீயெனத் திரிந்திடல் தவிர்த்திடல் வேண்டும் (முடி)

இக்ஷணி பார்ப்பது தப்பு—நீரும்
இருபது வயதின ராயிடல் வேண்டும்
பக்ஷி பகர்ந்திட லாகா—தென்றும்
பரத்தையர் வாசல் மிதிக்க லாகாது (முடி)
கருவறுத்துக் கதி காட்டும்—செந்திற்
கந்தப்பிரா னம்பொற் கழலிணை மறவா
வரகவி சுப்பிர மண்யன்—போற்றும்
வண்ணத் தமிழ்பாடிச் சொன்னேன் பகர்வீர் (முடி)

[முகத்தைத் திருப்பிக் கொண்டு குடத்தை எடுத்து இடுப்பில் வைத்து நடக்கிருள்.]

**கோ.** (மெதுவாய்) பேஷ்! பேஷ்!! எது ஒழிந்தாலும் குடி யொழியாதே! யொழியாதே!

**ஜா.** (எதிரில் நின்று) வனஜா! நீ தெரிவித்த பழக்கங்கள் யாவும் என்னிடத் துள்ளவைகளே! அவைகளில் எதுவும் என்ஞல் விலக்கக் கூடியதாயில்லை. நீ யெனக்கு மனைவி யாவ துண்மையாயின், பொடிபோடுதல், பொய்பேசல், குடி, பொதுமாதருறவு இவைகளை படாதபாடு பட்டேனும் ஒழித்துவிடுகிறேன். ஆனல் இப்போதே முடியாது. உணவுக்கு முன் நீராடல், வைகறையெழுந்து பல்விளக்கல், கருவத்தை விட்டுக் கடவுட் பணிதல் இவைகளைச் சுளுவில் செய்து விடுவேன். இக்ஷிணி பார்ப்பதும், பட்சி பகர்வதும் என் தொழில்களல்லவா! இவைகளை யெப்படிவிட முடியும்? இருபது வயது வாலிபஞக வாவென்ருல் இது முடியத்தக்கதா? இது சிறிதும் பொருந்தாத கேள்வி. இன்னும் வேண்டியதைக் கேள். நகை வேண்டுமா? போடுகிறேன். என்

கண்ணை இமைகாப்பதுபோல் உன்னைக் காப்பாற்றுகின்றேன். நீ என்னை வெறுக்காதே. வார்த்தையை நம்பு. இல்லாவிட்டால் வீண் மனஸ்தாபம் வரும்.

வன. வந்தால்—சே! தூர விலகு.

[விலகி விரைந்து செல்கிருள்.]

ஜா. (நின்று தனக்குள்) மயிலே மயிலே இறகொன்று கொடு என்ருல் கொடுக்குமா! கொடாது. சொரூபத்தைக் காட்டவேண்டும். இன்றேல் வழிக்கு வரமாட்டார்கள். தக்க சூழ்ச்சிசெய்கின்றேன். இவளை மணக்காவிட்டால் நான் ஜானகிராமனு?

கோ. யோசிப்பானேன்? காரியத்தை நடத்து. கவலையை விடு. அதுதான் ஆண்மை. இது தான் தாழ்மை.

[போகின்றனர்.]

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

# மூன்ருவது அங்கம்

## முதற் காட்சி

இடம்:—திருக்கம்—சாம்பசிவையர் வீடு. காலம்—பகல்.

சுந்தரமையர் பிரவேசிக்கிருர்.

சுந். மன்னி!

சிவ. வாருங்கோ; எப்போ ஊரிலிருந்துவந்தீர்கள். குழந்தை வந்துவிட்டாளா?

சுந். இப்போத்தான் வந்தோம். கல்யாணம் வெகு நன்ருய்ப் பண்ணினுன் கிருஷ்ணன். அந்தப் பெண்ணுக் கேற்ற புருஷன்.

சிவ. ஒரு பெண்-பணமிருக்கு; குழந்தை வந்துவிட்டாளா?

சுந். அதைத்தான் மன்னி சொல்லவந்தேன்.

சிவ. என்ன! உடம்பு ஒண்ணுமில்லையே?

சுந். ஒண்ணுமில்லை; இரண்டுமில்லை. ஏன் அப்படி பயந்து சாகிறாய்? அப்படி யேதாவதிருந்தால் இருக்கப்பட்டவர்கள் விட்டுவிடுவார்களா? எப்படி யொன்று மில்லை. குழந்தையும், பாலாம்பாளும் மங்கலத்திற்குப்போயிருக்கிறார்கள்.

சிவ. ஏன்? அங்கென்ன இப்போ?

சுந். அர்த்தனாரிக்குத் திரட்சியாம், நாளைக்கு எட்டாம் நாள்; அதற்காக.

சிவ. இதற்காக இவளேன் போகவேண்டும்?— அடி பாவி! நீ யேண்டி போனே.

[முகத்தைத்திருப்பிக்கொண்டு தலையிலிடித்துக்கொள்ளுகிறாள்.]

சுந். இந்த கல்யாணத்திற்குக் குப்பு வந்திருந்தாள். அவள் கட்டாயம்பண்ணி யழைத்துக்கொண்டு போய் விட்டாள்.

சிவ. குப்பு அழைத்துக்கொண்டு போனாள், சுப்பு அழைத்துக்கொண்டு போனாள், இந்த மூதேவி ஏன் போகிறாள்—(மௌனம்) நானேன் அனுப்பினேன் முண்டை! என் தலையிலெழுத்து—நாமிருக்கும் வரிசைக்குக் கல்யாணத்திற்குக் கூடப் போகவேண்டுமா?

[தலையிலடித்துக்கொண்டு முகத்தைச் சுளிக்கிறாள்.]

சிவ! சிவ! பாழும் பெண்ணுக்கு இப்படிப் புத்தி போகவேண்டுமா? வயசு பனிரண்டு ரொம்பிப்போச்சு!

காலமறிந்து நடக்கத் தெரியவில்லை!—அவன் பேரி லென்ன தப்பிதம்! பரமசண்டாளி யானேன்.

**சுந்.** மன்னி! இதற்கேன் விசனப்படுகிறாய்? அங்கே யாரத்திலிருக்கிறாள்?

**சிவ.** நீங்களே இப்படி யிருக்கிறீர்களே! நானென்ன சொல் லட்டும். அண்ணாவிடம் பாராட்டின துவேஷ புத்தியை என்னிடமுமா காட்டவேண்டும். நான்தான் எல்லா மிழந்து தலையையும் மொட்டை யடித்துக்கொண்டு மூலையோடு மூலையாய்க் கிடக்கிறேனே. இது போதா தா? இப்பொழுது அவளை ஒரு இடத்திற்கு அனுப்பச் சமயமா? [துக்கப்பட்டுப் புலம்புகிறாள்.]

**சுந்.** அடி போடி! ஏதாவது நினைத்துக்கொண்டு அழுவது தான் வேலை. நான் போகிறேன். [போகிறார்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—மங்கலத்தில்—ஜானகிராமையர் வீட்டுப்புறக்கடைப்புறம். காலம்—சாயந்திரம்.

வனஜாக்ஷி ஜானகிராமன் வீட்டுப் புறக்கடைப்புறம் நிற்கிறாள். மதுராம்பாள் அடுத்த வீடாகிய அவள் வீட்டுப் புறக்கடைப்புறம் நிற்கிறாள்.

**மது.** வனஜா! உங்கம்மா வல்லையா? நோக்குக் கூட கல்யா ணமா?

**வன.** யார் சொன்னது?

**மது.** உனக்குத்தெரியாதா? உனக்குக் கூடத்தான் கல்யா ணம்—இரகசியமாய் நடக்கப்போகிறது.

வன. கேலி பண்ணுதேயுங்கள். இதென்ன கூத்து! இதென்ன வேடிக்கை? கல்யாணமா?

மது. அடி பயித்தியமே! கேலிபண்ணச் சமயமில்லையா? உனக்குக்கூடத்தான் கல்யாணம்; புடவைகூட வாங்கியாச்சே!

வன. நிச்சயமா?

மது. ஏண்டி! தெரியாதா நோக்கு. என்னடியது! இந்தத் திரட்சி முகூர்த்தத்தோடு உன்னையும் கல்யாணஞ் செய்து கொள்ளத்தான் உன்னைப் புத்தூரிலிருந்து இங்கு அழைத்துவரச் சொல்லி யனுப்பினான் ஜானகிராமன்.

வன. அம்மாமி! அம்மாமி! (அழுதாப்போல்) இது மோசமாகத்தான் காண்கிறது. என்னை எங்கம்மா புத்தூருக்கு அக்காவாத்துக்கு அனுப்பினாள். இந்தப்பாவி அத்தை என்னைக் கூப்பிட்டாள். அதனாலே இங்கு வந்துதொலைந்தேன். இது மோசக்கருத்து என்று நானறியேன். அம்மாமி நான் என்ன செய்வேன். அந்தப்பாவியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள எனக்குக் கொஞ்சம் கூடப் பிரியமில்லை. என்னை உங்களுடைய பெண்ணென்று கொண்டு காப்பாத்துங்கள். இல்லாவிட்டால் இந்தப் பேதைப் பெண் பாவம் உங்களைப் பிடித்துக்கொள்ளும். நீங்கள் தான் கதி; நான் என்ன செய்வேன். ஐயோ! நானேன் பாவி இங்கே வந்தேன்.

[தலையி லடித்துக்கொள்கிறாள்.]

மது. கத்தாதே—ஆராவது வரப்போறா?

வன. அம்மாமி! இன்று இரவு எந்தக் கிணற்றிலாவது விழு

ந்து விடுகிறேன்; இது நிச்சயம். நீங்கள் என் அம்மாவிடம்— [அழுகிருள் மௌனம்.]

மது. வனஜா! அழுகாதே? நான் காப்பாத்தறேன். நான் சொல்லுகிறபடி நீ நடக்கிருயா?

வன. (கண்ணைத் துடைத்துக்கொண்டு) என்ன அம்மாமி சொல்கிறீர்கள்? எதுவாயிருந்தாலும் கேட்கிறேன். "மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்" என்பதை யநுசரித்து அம்மா வார்த்தைப்படி புத்தூரிலிருந்து நேரே ஊர் போகாமல் இங்குவந்து படுவது போதாதா? உங்கள் வார்த்தையையுந் தட்டவேண்டுமா?

[கண்கலங்குகிருள்.]

மது. இன்னைக்கு ராத்திரி சிவ்ராமன் ஆத்திலே பஜனை. உங்காத்திலே உங்கத்தை பாலாம்பாள், குப்பு எல்லாரும் வருவா. நீயும் வா! இப்போதே எங்காத்துக் காரரோடே சொல்லி வைக்கிறேன். உன்னைப் புத்தூரில் கொண்டுபோய் இராத்திரியே சேர்த்துவிடும்படி செய்கிறேன். பிறகு எப்படியாவது ஆகட்டும்.

வன. அம்மாமி! நமஸ்காரம் பண்ணுகிறேன். உங்களுக்குக் கோடி புண்யமுண்டு. என்னைக் காப்பாத்துங்கள் எப்படியாவது—

மது. போ! யாராவது வரப்போரு?

வன. போகிறேன். [போகிருள்.]

(மறுபடியும் வந்து) அம்மாமி! நீங்கள்தான் எனக்குத் தாயார். பாவியை! அழுக்கனை! மூதேவியை! நான் எப்படிக் கல்யாணம் செய்து கொள்வேன்! எனக்குச் சத்துருவாக இவனெங்கே யம்மாமி முளைத்தான்!

மது. போ ஆகட்டும்! போ! [இருவரும் போகிருர்கள்.]

## மூன்றும் காட்சி.

இடம்—திருக்கம்—சாம்பசிவையர் வீட்டுத் தெருப்புறம்.
காலம்—பகல்

சிவப்பிரியை தெருப்பக்கத்து ரேழியில் உட்கார்ந்து விசனமுறுகிருள்.

ஈசா! நானென்ன செய்வேன்! பாவி யிருக்கிற ஊருக்கு என் ஆவியைக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாயே! நானென்ன பாவம் செய்தேன்! என் குழந்தைக்கு ஒரு குறைவும் நேரிடா திருக்கவேண்டுமே! எனக்கு யார் கதி? நீ தானே அப்பா! குழந்தையை ஜாக்கிரதையாய் என்னிடம் கொண்டுவந்து சேர்க்க வேணுமடா? உனக்கு வெள்ளிக்கிழமை அபிஷேகம் செய்விக்கிறேன். குழந்தையை உன் கோவிலுக்குப் பனிரண்டு நாள் விளக்கிடும்படிச் செய்கிறேன். என் அம்மணீ! நீ தாண்டி கதி! என் குழந்தையைக் கொண்டுவந்து சேர். உன் கோவிலே அங்கப்ரதட்சணம் வரச்சொல்கிறேன். என் அம்மா!

[கண் கலங்கி அழுகிருள்.]

அம்பிகை பிரவேசிக்கிருள்.

அம். ஏன் அழுகிறீர்கள்? ஏன்?

சிவ. அம்பிகே! நானென்னத்தையடி சொல்லட்டும். குழந்தையை பாலாம்பாள் மங்கலத்திற்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிருளாம்.

அம். அந்த ஜோஸியர் இருக்கிருரே அங்கேயா? ஏன்?

தந்திச்சேவகன் பிரவேசிக்கிறான்.

**சேவ.** அம்மா! தந்தி வந்திருக்குங்க.

**சிவ.** ஆ! ஆ! (கண்ணைத் துடைத்துக்கொண்டு) தந்தியா! எங்கிருந்தப்பா? [அம்பிகை வாங்குகிறாள்.]

**சேவ.** தெரியவில்லேங்க.

**அம்.** எங்கிருந்து வந்திருக்கும்? [தந்தியை உடைக்கிறாள்.]

**சிவ.** எங்கிருந்தம்மா?

**அம்.** இது இங்கிலீஷிலிருக்கிறது. சாயபு உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?

**சேவ.** தெரியாதுங்க. (தெருபக்கம் பார்த்து) அய்யா! இங்கே வாங்கோ தந்தி வந்திருக்கான். படிச்சுக் காம்பிக்கணும்.

பையனொருவன் பிரவேசிக்கிறான்.

**பை.** எங்கே? [அம்பிகை தந்தியை அவன் கையில் கொடுக்கிறாள். பையன் படிக்கிறான்.]

அம்மா! இது புத்தூரிலிருந்து வந்திருக்கிறது. (சிவப்பிரியைப்பார்த்து) பாட்டீ! உங்களை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறது. வனஜா அங்கிருக்கிறாளாம்.

**அம்.** புத்தூரில் யாரிருக்கிறார்கள்?

**சிவ.** (பையனைப் பார்த்து) அப்பா! உனக்கு பரீக்ஷை பாஸாக வேண்டும். என் வயிற்றில் பால் வார்த்தாயே.

**சே.** எனக்கம்மா!

**சிவ.** இந்தாப்பா! [புடவைத் தலைப்பை யவிழ்த்து ஒரு அணா காசுகொடுக்கிறாள். சேகவன் போகிறான்.]

**அம்.** புத்தூரில் யாரிருக்கிறார்கள்.

**சிவ.** என் பெரிய பெண்.

அம். பின் மங்கலம் போயிருப்பதாக யார் சொன்னது?

சிவ. யார் சொல்லுவா இந்தத் திரிசமம்! என்கொழுந்தனிருக்கானே அவன்தான்.

அம். ஏனப்படி?

சிவ. அதென்ன கேடுகாலமோ? நேற்று வந்து அப்படிச் சொல்லிவிட்டுப் போனன்.

அம். நீங்கள் முதலில் எங்கே அனுப்பினீர்கள் வனஜாவை?

சிவ. சத்தியமங்கலத்திற் கனுப்பினேன்.

அம். அங்கிருக்கிறதார்?

சிவ. என் இரண்டாவது பெண் மீன?

அம். அதற்கும் மங்கலத்திற்கும் எவ்வளவு தூரம்.

சிவ. பத்து மைலிருக்கும்.

அம். இருக்கட்டும், புத்தூருக்கு இவள் யாருடன் போனள்.

சிவ. தெரியவில்லை. யாரேனும் என் பேரன் கல்யாணத்திற்கு வந்து அழைத்துக்கொண்டு போயிருக்கணும். எல்லாத்துக்கும் நான் சாயந்திர ரயிலில் போகிறேன். நீ ஆத்தைப் பார்த்துக்கொள்.

அம். ஆகா! போய்வாருங்கள். இப்பொழுதே புறப்பட வேண்டும்.

சிவ. இதோ புறப்படுகிறேன். வண்டி எத்தனை மணிக்கு?

அம். வண்டி நாலுமணிக்கு இங்கேயிருந்து புறப்படுகிறது.

சிவ. இப்போது மணி இரண்டரை யிருக்கும்போ லிருக்கிறதே.

அம். ஆம்; இருக்கும். புறப்பட்டுப் போங்கள்; போனவுடனே என்னை வேண்டிக் கடிதம் போடுங்கள்.

சிவ. சரி, ஆகட்டும். [இருவரும் போகிருர்கள்.]

மூன்றும் அங்கம் முற்றிற்று.

# நான்காவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம்—ராயபுரம்—ஒரு தெரு. காலம்—காலை.

சிவப்பிரியை, வனஜாக்ஷி, பார்வதிக்கிழவி மூவரும் காவேரியில் ஸ்நானம் செய்து தீர்த்தமெடுத்துக்கொண்டு வீடுநோக்கி வருகிறார்கள்.

பார்—(பார்வதிக்கிழவி பாடிக்கொண்டே வருகிறாள்.)

"ஸ்ரீராமர் என்ன சொன்னார்
சீதையை அழைக்கச்சொன்னார்?
அபிராமர் என்ன சொன்னார்
அனுமந்தா வாவென்றார்."

பையன் பிரவேசிக்கிறான்.

பை:—(பாடுகிறான்.)

ஸ்ரீராமரென்ன சொன்னார்
கன்னத்தி லரைஞ்சு கைச்சொம்பைப்
பிடுங்கச் சொன்னார்.

[அருகே ஓடுகிறான்.]

பார். (பாடுவதை நிறுத்தி) அடகட்டாலே போறவனே, உனக்கு வந்த கேடென்னடா?

சிவ. என்ன உங்கள்மேலே பட்டுவிட்டானா என்ன?

பார். பட்டாப்பலே ஓடாது சனியன்!

வன. பாட்டி பாடினதைப் பழிச்சிப் பாடினான் முதலில். நீ கேட்டாயோ அம்மா!

சிவ. என்ன பழிச்சான் ?

பார். என்னமோ கன்னத்தி லறைஞ்சு இன்னுன்.

வன. இல்லே பாட்டி! நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஸ்ரீராமர் என்ன சொன்னுர்—
கன்னத்தி லறைஞ்சு—
கைச் சொம்பைப் பிடுங்கச் சொன்னுர்.!

என்று பாடிவிட்டு ஓடுகிறுன்.

சிவ. அது ஆராத்துப் புள்ளே!

பார். வேம்பு வாத்துப் புள்ளே! சனியன்.

சிவ. பாட்டி! எங்காம் வந்துவிட்டது. நாங்கள் போகிறேம்.

பார். ஆகா! போங்கோ.

[பிரிந்து வனஜாக்ஷியும், சிவப்பிரியையம்மாளும் திரும்புகிறுர்கள்.]

கோர்ட்டு சேவகன் பிரவேசிக்கிறுன்.

சே. அம்மா! உங்களிருவருக்கும் வாரண்டு வந்திருக்கிறது. நில்லுங்கள்; நீங்கள்தாமே சிவப்பிரியை யம்மாளென்பதும், வனஜாக்ஷி யென்பதும்.

[இருவரும் நிற்கிறுர்கள்.]

வன. ஆமாம்—எங்கிருந்தப்பா வாரண்டு.

சிவ. ஐயோ! இதென்ன சனியன்! நாங்கள் உள்ளே போய்க் குடத்தை வைத்துவிட்டு வருகிறேம்.

சே. போகக் கூடாது.

வன. அதென்னப்பா அப்படி ?

[தெருவில் போகிறவர்கள் கூடுகிறுர்கள்.]

ஒருவர். எங்கிருந்தப்பா வாரண்டு ?

சே. குழித்தண்டலையி லிருந்து.

ஒருவர். யார் எடுத்திருக்கிறார்கள் ?

சே. ஜானகிராமையர் என்பவர்.

ஒரு ஸ்திரீ. (சிவப்பிரியைப் பார்த்து) என்ன இது ?

சிவ. போன செவ்வாய்க்கிழமை சாயந்திரமெல்லாம் புத்தூரில் என் மாப்பிள்ளை வீட்டில் இம்மாதிரி அமக்களம் நடந்தது; அவர் வந்த சேவகனைச் சரிப்படுத்தி யனுப்பிவிட்டு மறுநாளே இங்கே யனுப்பினார். இப்போது இங்கேயும் கூத்து நடக்கிறது. நான் எங்கே போனாலும் என் நிழல் கூடத்தானே வரும்.

ஒரு ஸ்திரீ. ஏன் வாரண்டு ; யாரெடுத்திருக்கிறது ?

சிவ. அந்தப் பாவி என்பெரிய நாத்தி பிள்ளை ஒரு சண்டாள னிருக்கிறான் அவன்.

ஒரு ஸ்திரீ. ஏனம்மா !

சிவ. நானென்னமோ அவனிடத்தில் நானூறு ரூபாய் வாங்கி வாயிற் போட்டுக் கொண்டதாக மோசவழக்கு எடுத்திருக்கிறான்.

ஒரு ஸ்திரீ. நீங்களேன் அவனிடம் வாங்கணும் ?

சிவ. அம்மா ! இந்தப் பெண்ணைக் கேட்டுக்கொண்டிருந்தான். கொடுக்க இஷ்டமில்லை யென்று சொல்லிக் கொண்டே வந்தோம். பிறகு எங்களுக்குத் தெரியாமல் மோசமாக அழைத்துப்போய் தாலி கட்டப் பார்த்தான். அது தெய்வ கிருபையால் முடியாமற் போய்விட்டது. இப்போது, நாங்கள் இந்தப் பெண்ணைக் கொடுப்பதற்குச் சம்மதித்து நானூறு ரூபாய் வாங்கிக் கொண்டதாகவும், அதன்படி பெண் கொடுக்காததால் ரூபாய் வேண்டுமென்றும் முதலில் புத்தூருக்குச் சம்மன் விட்டான். அதற்குத் தப்பி இங்கு

வந்தோம். இங்கு வந்தது தெரிந்து வாரண்டு விட்டிருக்கிறான். ஐயோ நானென்ன செய்வேன் இந்தக் கர்மத்திற்கு! இந்தப் பெண்ணால் படாத பாடு படுகிறேன். என்ன செய்வேன். இவன் உள்ளே கூடப் போகக்கூடாதென்கிறான்.

சீதாபதி ஐயர் பிரவேசிக்கிறார்.

**சீதா.** என்னப்பா!

**சே.** சுவாமி! நமஸ்காரம்.

[வந்தனம் செய்கிறான்.]

**சீதா.** யார் பேரில்—

**சே.** இவர்கள் இரண்டு பேர் மேலேயும்.

**சீதா.** எங்கே—

[வாரண்டை வாங்கிப் பார்க்கிறார்.]

நீங்கள் உள்ளே போங்கள்.

[வனஜாக்ஷியும், சிவப்பிரியையம்மாளும் உள்ளே போகிறார்கள்.]

**சே.** சுவாமி! என்ன நீங்களே இப்படிச் செய்தால்—

**சீதா.** நான் ஜாமீன்; அவர்களை அந்தத் தேதியில் கோர்ட்டில் நான் ஆஜர்ப்படுத்துகிறேன்.

**சே.** சரி—நீங்க சொல்லும்போது எனக்கென்ன? நீங்களே கவர்ன்மெண்ட் ஸர்வண்டாச்சு. ஆஜர்ப்படுத்துவதாக எழுதிக் கொடுங்கள்—

**சீதா.** சரி, ஆகட்டும்.

[எழுதிக் கொடுக்கிறார்.]

**சே.** சுவாமி! தவறவேண்டாம்.

**சீதா.** சரி; போ அப்பா!

[போகிறான்.]

தெருவில் போகிறவர் ஒருவர் பிரவேசிக்கிறார்.

ஒருவர். என்ன மிஸ்டர்?

சீதா. ஒரு வாரண்டு.

ஒருவர். யார் பேரில்.

சீதா. என் மாமியார் பேரிலும், என் மச்சினி பேரிலும். நேற்றுச் சம்மன் பண்ணினான் என்று சொன்னேனே அந்தப் பாவி—

ஒருவர். காலம் பொல்லாததாகப் போய்விட்டது.—நான் அவசரமாகப் போகவேண்டும். மத்தியானம் வருகிறேன்.

[போகிறார். சீதாபதி ஐயர் உள்ளே போகிறார்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி.

இடம்—குழித்தண்டலை கோர்ட்டு வாசல். காலம்—பகல்.

ஜானகிராமையர், கோகர்ணதீக்ஷிதர் முதலாயினோர் ஒரு பக்கம் வீற்றிருக்கிறார்கள்.

வனஜாக்ஷி, சிவப்பிரியை முதலாயினோர் ஒரு பக்கம் உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஜா. (கோகர்ண தீக்ஷிதரைப் பார்த்து) ஓய்! இந்தக் குட்டி (வனஜாக்ஷி) அன்று எப்படியோ தப்பி ஓடிப்போய்விட்டாளே! என்ன துணிவு பார்த்தீரா! அன்று ராத்திரி 9-மணிக்கு பஜனைக்கு எங்காத்துவாளோடு போனாள். பிறகு காணோம். ராத்திரி எப்படித் தப்பி யோடி யிருப்பாள். அவளுக்கு நாம் செய்த யுக்தி யெப்படித் தெரிந்தது?

என்ன விதமாய்த் தப்பிப் புத்தூர் போனாள் என்பது இன்னமும் தெரியவில்லையே!

**கோ.** அந்தக் குட்டி எமகாதகக் குட்டி. குரங்குக் குட்டியிலும் போக்கிரிக்குட்டி! அந்தக் குட்டி குட்டிச்சுவர் குட்டிச்சுவராகத் தாண்டி யோடிருப்பாளென்று எண்ணுகின்றேன். இப்பொழுதே எப்படி யிருக்குப் பாருமே! இன்னுந் திரளக்கூடவில்லை; எமனை விழுங்கி ஏப்பம்விடும் போலல்லவா யிருக்கு. ஒரு ஆள் உயரமிருக்கிறது. அதுக்குப் பலமும், தைரியமு மதிகம்.

**ஜா.** (சுந்தரமையரைப்பார்த்து) எப்படித் தப்பிப் போயிருப்பாள்?

**சுந்.** அந்தக் குட்டி ஒண்டியாய்க் கூட ராத்திரியில் ஓடிப் போயிருக்கும். அதுக்குக் குழந்தையிலே யிருந்து தைரியம் அதிகம். பாரேன் நானென்ன சொல்லியும் சம்மதிக்கமாட்டேனென்கிறது.

**ஜா.** மாமா! இப்போது என்ன செய்ய முடியும்? ஒன்று, ரூபாய் நானூறு கலகலவென்று கொட்டிக் கொடுக்கணும். இல்லாவிட்டால் எனக்குப் பெண்டாட்டியாகணும்; பார்க்கிறேன். மாமா! நீங்க நல்லயுக்தி சொன்னீர்கள். நீங்களில்லாவிட்டால் இந்த யுக்தி எனக்குத் தெரியாது.

**கோ.** நல்ல யுக்திதான்! மெதுவாய்ப் பேசும். இது கோர்ட்டு.

**சிவ.** (கப்பராயரைப் பார்த்து) மாப்பிளே! இதென்ன கிரேசாரம் பார்த்தீர்களா? என்னமாகுமோ தெரியவில்லையே!

**சுப்.** பயப்படாதேயுங்கள். ஒன்றும் வாராது. நமது வக்கீல் எமகாதகன்! பாயின்ட் பிடித்தானானால் பிளந் தெரிந்து விடுவான்.

சிவ. யாரவர்?

சுப். வைத்தினுதையர் பிள்ளை கிருபாசங்கரையர்.

சிவ. ஓகோ! அவர்கள் வக்கீல்?

சுப். கொட்டையூர் சிங்கமையங்கார். மேலும் மாஜிஸ்டிரேட் வெகு நல்லவர். மாசிலாமணி நாயுடு என்று பேர். தங்கக்கம்பின்னு அவருக்குத்தான் செல்லும்.

சிவ. பெண் கொடுக்க வேண்டுமென்று தீர்மானமாய்விட்டால்—

வன. (முகத்தைச் சுளித்துக்கொண்டு) நீ யொன்றும் வேண்டாதே அப்படித் தீர்மானமாகாது. தீர்மானஞ்செய்தால் எனக்கு இவனைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லையென்று கோர்ட்டில் கூசாமல் கூறி மறுத்து விடுகிறேன். ரூபாய் கொடுக்கத் தீர்மானமானுல் கையில் பணமில்லை. சோற்றுக்கே கஷ்டமா யிருக்கிறதென்று முறையிடுகிறேன் பார்ப்போம்.

[தலையை ஆட்டுகிருள்.]

கோ. (ஜானகிராமனைப்பார்த்து) பாரும் தலையை யசைப்பதை!

முன்னுல் ஒரு சேவகன் பெட்டி யெடுத்துவரப் பின்னுல் ஒருவன் குடை பிடித்துவர மாஜிஸ்டிரேட் பிரவேசிக்கிருர்.

எல்லாரும் எழுந்திருக்கிருர்கள். கோர்ட்டு திறக்கப் படுகிறது. திரை மாறுகிறது.

மாஜிஸ்டிரேட் ஆசனத்தமர்கிருர். மற்றவர் அவரவர் ஸ்தானத்தமர்கிருர்கள். கோர்ட்டு கூடுகிறது.

கோர். (உட்கார்ந்து சற்றுப் பொறுத்து) நாசிங்காரய்! இன்று முதல் கேஸ் எது?

நர. மங்கலம் ஜானகிராமையருடையது.

கோர். அது எதைப்பற்றி?

நர. பெண் கொடுப்பதாக வாக்களித்து, ரூபாய் 400 பெற்றுக்கொண்டு இப்பொழுது மறுப்பதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கோர். எங்கே கொண்டுவாரும்.

[நரசிங்கராவ் சார்ஜ் ஷீட்டையெடுத்துக் கொடுக்கிறார். மாஜிஸ்டிரேட் பார்க்கிறார்.]

(சார்ஜ் ஷீட்டை டேபிலில் வைத்து) சரி கூப்பிடும்.

நர. ஜானகிராமையர்!

[பேர் வாசிக்கிறார்.]

சேவ. ஜானகிராமையர்!——

[பலத்துக் கூப்பிடுகிறார்.]

ஜானகிராமையர் கூட்டில் வந்து நிற்கிறார்.

நர. சர்வ வல்லமையுள்ள தெய்வத்துக்கு முன்பாக நான் சொல்வதெல்லாம் சத்தியம் என்று சொல்லும்.

ஜா. சர்வ......சத்தியம்.

[சொல்லுகிறார்.]

கோர். நீர்தானா ஜானகிராமையர்?

ஜா. ஆம்!

கோர். இந்த வழக்குக் கொண்டுவந்தது நீர்தானா?

ஜா. ஆம்!

கோர். நீர் பிராமணர் தானா?

[கோர்ட்டு சிரிக்கிறது, யாவரும் சிரிக்கிறார்கள்.]

ஜா. ஆம்! நான் பிராமணன் தான்.

கோர். நீர் எதைப்பற்றி வழக்குக் கொண்டுவந்திருக்கிறீர்!

ஜா. உம்!

கேள்வி

சிங். நீர் இந்த வழக்குக் கொண்டுவந்தது எதற்காக.

ஜா. நான் பெண்ணுக்காகக் கொடுத்த நானூறு ரூபாயை அடையவேண்டும் அல்லது பெண்ணையடையவேண்டும் என்று கருதி.

சிங். நீர் எப்பொழுது ரூபாய் கொடுத்தீர் ?

ஜா. விரோதிவருஷம் ஐப்பசிமாதம் ஐந்தாந்தேதி.

சிங். அதற்கு இங்கிலீஷ் வருஷம் மாதம் தேதி தெரியுமா ?

ஜா. தெரியாது.

சிங். இருக்கட்டும். நீர் அவர்களிடம் பணங்கொடுத்ததற்குச் சாட்சிகளுண்டா ?

ஜா. உண்டு.

சிங். எவ்வளவு பேர் ?

ஜா. ஆறுபேர்.

சிங். ஆறுபேரும் ஆஜரா ?

ஜா. இருவர் வரவில்லை.

சிங். பிரதிவாதிகளுக்குச் சம்மன் சார்வாகி வந்திருக்கிறார்களா ?

ஜா. உம்.

சிங். நீர் கொண்டுவந்த வழக்கு இதுதானே ?

ஜா. ஆம்.

தறுக்குக் கேள்வி

கிரு. (வாதியைப் பார்த்து) நீர் கொடுத்த பணம் எவ்வளவு? நானூறு ?

ஜா. ஆமாம்.

கிரு. இந்த ரூபாய் எந்த ஊரில் கொடுக்கப்பட்டது ?

ஜா. மங்கலத்தில்.

கிரு. மங்கலமென்பது உங்களூரா?

ஜா. ஆம்!

கிரு. விரோதி வருஷமென்றீரல்லவா; எந்த மாதம்?

ஜா. ஐப்பசிமாதம் ஐந்தாந்தேதி.

கிரு. உம்! யாரிடம் கொடுத்தீர்?

ஜா. என் அம்மாமி சிவப்பிரியை யம்மாளிடம்.

கிரு. அந்தம்மாள் அப்போது உங்களூருக்கு வந்திருந்தாளா?

ஜா. ஆம்!

கிரு. எதற்காக?

ஜா. இந்தப் பணம் வாங்கிக்கொண்டு போவதற்கும், முகூர்த்தம் நிச்சயிப்பதற்குமே—

கிரு. உம்! அந்த அம்மாள் அப்பொழுது சுமங்கலியாக இருந்தாளா?—

ஜா. இல்லை. விதவையாய்விட்டாள்.

கிரு. விதவையானது, எந்த வருஷம் எந்த மாதம் என்பது தெரியுமா?

ஜா. அதே வருஷம் ஆனிமாதக் கடைசி.

கிரு. கோர்ட்டு கவனிக்கவேண்டும்! சரி, நானூறு ரூபாயும் ரொக்கமாகவா கொடுத்தீர்?

ஜா. இருநூற்றைம்பது ரூபாய் ரொக்கம். பாக்கி நகைகள்.

கிரு. நகைகள் புதியனவா பழையனவா?

ஜா. ஐயா! எல்லாம் புதியதாகச் செய்தவைகள். பண்ணின தட்டான்கூட சாட்சிக்கு வந்திருக்கிறான்.

கிரு. ஓப்! என்னென்ன நகைகள்?

ஜா. காரையொன்று நூறு ரூபாயில். தோடு ஐம்பது ரூபாயில்; இவைகளிரண்டுமே.

கிரு. என்ன தோடு?

ஜா. சிவப்புக்கல் தோடு.

கிரு. எத்தனைக் கல் தோடு.

ஜா. ஆறு கல் தோடு.

கிரு. அந்தம்மாள் உம்மிடம் இவைகளை வாங்கிக்கொண்டு முகூர்த்தம் எப்பொழுது நடத்துவதாகப் பேசிப் போனாள்?

ஜா. உம்!

கிரு. எப்பொழுது முகூர்த்த நாள் குறிக்கப்பட்டது?

ஜா. அப்போது மாசமாய்விட்டபடியால் தைமாதம் முதல் பத்துத் தேதிக்குள்ளென்று தீர்மானிக்கப்பட்டது.

கிரு. உம்!

கோர். வேறு—

நர. முதல் சாட்சி காதர்ஹுஸேன் சாகிப்!

சே. காதர்ஹுஸேன் சாகிப்!——

[ஊரத்துக் கூப்பிடுகிறான்.]

காதர்ஹுஸேன் சாகிப் பிரவேசிக்கிறார்.

நர. சர்வ......உண்மை யென்று சொல்லும்.

கா. சர்வ......உண்மை.

கோ. உம் பெயரென்ன?

கா. காதர் ஹுஸேன்.

கோர். உத்தியோகமா உமக்குப் பிழைப்பு?

கா. இல்லை; வியாபாரம்.

கோர். எந்த வூர்?

கா. திருச்சி.

கேள்வி

சிங். இந்த வழக்கில் உமக்கு என்ன தெரியும்?

கா. ஒன்றுந் தெரியாது. நான் இந்த ஜானகிராமையருக்கு

ரூபாய் இருநூறு கொடுத்தேன். அதற்குத் தான் நான் சாட்சி சொல்ல வந்தேன்.

சிங். ரூபாய் எதற்காகக் கொடுத்தீர்?

கா. எனக்குச் சோதிடங் கூறினார்; அதற்காக நூறு ரூபாயும், கடனாக நூறு ரூபாயும் கொடுத்தேன்.

சிங். கடன் வாங்கியதெதற்கு?

கா. கல்யாணத்திற்கென்று சொல்லி வாங்கினார்.

தறுக்குக் கேள்வி

கிரு. எப்பொழுது ரூபாய் கொடுத்தீர்?

கா. விரோதி வருஷம் வைகாசிமாதக் கடைசியில்.

கிரு. தேதி ஞாபகமிருக்கிறதா?

கா. இல்லை—கணக்குப் புத்தகம் பார்க்க வேண்டுங்க.

கிரு. இந்த வழக்கைப்பற்றி உமக்கு இன்னும் என்ன தெரியும்?

கா. ஒன்றுந் தெரியாது.

கோர். உம்—வேறு.

[காதர் ஹுஸேன் சாகிப் போகிறார்.]

நர. 2-வது சாட்சி—பாபு ரெட்டியார்!

சே. பாபுரெட்டியார்!——

[உரத்துக் கூப்பிடுகிறான்.]

பாபுரெட்டியார் பிரவேசிக்கிறார்.

நர. சர்வ..........உண்மையென்று சொல்லும்.

பாபு. சர்வ.......உண்மை.

கேள்வி

சிங். உமது பெயரென்ன?

பாபு. பாபுரெட்டியார்.

சிங். நீர் எந்த ஊர் ?

பாபு. மங்கலந்தானுங்க.

சிங். இந்த வழக்கைப்பற்றி நீர் அறிந்ததென்ன ?

பாபு. உம்—இந்த வழக்கைப் பற்றியா ?

[தேகம் நடுங்குகிறது. ஜானகி ராமையரைத் திரும்பிப் பார்க்கிருர்.]

சிங். ஓய்! கோர்ட்டைப்பார்த்துச் சீக்கிரம் பதிற் கூறும்.

பாபு. உம்!

[எல்லோரும் நகைக்கிருர்கள்.]

ரூபாய் கொடுத்தது உண்மைதானுங்க.

கிரு. யாரிடம் கொடுத்தார் ? எப்போது ? எங்கே ?

பாபு. உம்—ஐயர் வீட்டிலே தானுங்க.

சிங். யாரிடத்தில்—சிவப்பிரியை அம்மாளிடத்தில் தானே ?

பாபு. அஞ்சாறுமொட்டையம்மா யிருந்தாங்க; யாரிடத்தில் கொடுத்தாங்கன்னுட்டு நான் கவனிக்கவில்லை.

கிரு. இங்கே! இங்கே!!

கோர். (நகைத்து) ஆம்!

குறுக்குக் கேள்வி

கிரு. (தமக்குள்) இவன் கோர்ட்டுக்கு வந்தே யறியாதவன் போலிருக்கிறது. பயப்படுகிறுன். கொஞ்ச மிரட்டினுல் உண்மையைக் கூறிவிடுவான். ஒரு மிரட்டுப் போடுகிறேன்—(வெளிப்படையாய்) ஐயா! பாபுரெட்டியாரே! நீர் முதலில் தெய்வத்திற்கு முன்ளுக நான் சொல்வது ஸத்தியம் என்று கூறி ஸத்தியம் செய்திருக்கிறீர். தெரியுமா ?

பாபு. ஆமாம்!

சீரு. ரூபாயாகக் கொடுத்தாரா? பவுனாகக் கொடுத்தாரா?

பாபு. பவுனொன்றும், ரூபாய் ஐம்பதும், நோட்டு நாலும் கொடுத்தார்.

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

கோர் வேறு!

நர. நீர் போம்! [போகிறார்.]

3-வது சாட்சி—கோகர்ண தீக்ஷிதர்!

சே. கோகர்ண தீக்ஷிதர்!

[உரத்துக் கூப்பிடுகிறான்.]

கோகர்ண தீக்ஷிதர் பிரவேசிக்கிறார்.

நர. சர்வ..............சத்தியம் என்று சொல்லும்.

கோ. ஆமாம்! அப்படித்தான்.

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

கேள்வி

சிங். என்ன ஓய்! கோர்ட்டிலும் விகடம்! சொன்னதைச் சொல்லும்.

கோ. என்ன சொல்லவேண்டும்?

நர. சர்வ................சத்தியமென்று சொல்லும்.

கோ. சர்வ..........தெல்லாம்—

[இங்குமென்று விழுங்குகிறார் பேச்சை.]

நர. ஸத்தியமென்று சொல்லும்.

கோ. ஸத்தியம்!

சிங். உமது பெயரென்ன?

கோ. கோகர்ண தீக்ஷிதர்.

சிங். உமக்கு இந்த வழக்கைப்பற்றி ஏதேனும் தெரியுமா?

கோ. எல்லாந் தெரியும்.

சிங். எல்லாந் தெரியு மென்றால்?—

கோ. பின் என்ன சொல்லச் சொன்னீர் அப்படித்தானே.

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

சிங். ரூபாய் கொடுத்தது உண்மைதானே ?

கோ. நான் தான் முதலிலே எல்லாம் உண்மையென்று ஸத்தியஞ் செய்தேனே. பழையபடி—

சிங். சரி! உமக்குத் தெரியுமா ?

கோ. தெரியாவிட்டால் சொல்லவருவேனா.

நா. ஓய்! சரியாய்ப் பதிற் சொல்லும்.

சிங். எத்தனை ரூபாய் கொடுத்தார் ?

கோ. நானூறு ரூபாய் கொடுத்தார்.

கிரு எப்பொழுது கொடுத்தார் ?

கோ. அவர் எப்பொழுது கொடுத்ததாகச் சொன்னாரோ அந்த வருஷந்தான்.

[எல்லாரும் நகைக்கிறார்கள்.]

சிங். சரியான டேட் சொல்லும்!

கோ. டேட் என்றால் ?

சிங். தேதி சொல்லும்.

கோ. தெரிந்தாலல்லவா சொல்வேன்! அதான் அப்படிக் காட்டினேன். நீங்கள் கண்டுகொள்ளவில்லை.

குறுக்குக் கேள்வி

கிரு. உமக்குத் தொழிலென்ன ?

கோ. விகடம் செய்வது.

கிரு. அதுதான் இங்கும் விகடம் பேசுகிறீரோ!

[சிரிக்கிறார்கள் எல்லாரும்.]

ரூபாயை எந்த ஊரிலிருந்து கொடுத்தார் ?

கோ. அவர் ஊராகிய மங்கலத்தில்.

கிரு. ரூபாய் யாரிடம் கொடுத்தார் ?

**கோ.** சிவப்பிரியை யம்மாளிடந்தான்.

**கிரு.** நீர் ஜோஸியர் வீட்டுக்கு அப்பொழுது எதற்காக வந்தீர்?

**கோ.** ஜோஸியம் பார்க்கத்தான்; பின்னெதற்கு?

**கிரு.** நானூறும் ரூபாயாகத் தானா?

**கோ.** இல்லை. இருநூற்றைம்பது ரூபாய் ரொக்கம். பாக்கிக்கு நகை கொடுத்தார்.

**கிரு.** என்னென்ன நகை?

**கோ.** தோடும், காரையும்.

**கிரு.** சிவப்பிரியை யம்மாள் சுமங்கலியாகத்தானே யிருந்தாள் அப்பொழுது?

**கோ.** இல்லை இப்போது இருக்கிற மாதிரி யிருந்தாள்.

[தலையைத் தடவிக் கொள்கிறார். நகைக்கிறார்கள் எல்லோரும்.]

**கோர்.** வேறே—

**நர.** நீர் போம்.

[போகிறார்.]

4 வது சாட்சி சந்தனப்பத்தன்!

**சே.** சந்தனப்பத்தன்!——

[சேவகன் உரத்துக் கூப்பிடுகிறான்.]

சந்தனப்பத்தன் என்னும் ஒருகிழவன் பிரவேசிக்கிறான்.

**கோர்.** ஓய் பெரியவரே! நீ ரெங்கெங்காணும் சாட்சி சொல்ல வந்தீர்?

**சந்.** கூ—கூ—கூ—கூப்பிட்டாருங்க. வந்தேனுங்க.

**கோர்.** உமது பெயரென்ன?

**சந்.** ச—ச—ச—சந்தனப் பத்தனாசாரி—

[நகைக்கிறார்கள்.]

கோ. உமக்கு இந்த வழக்கைப்பற்றி ஏதேனும் தெரியுமா ?

சங். ஒ—ஒ—ஒண்ணுந் தெரியாதுங்க.

கேள்வி

சிங். ஒன்றும் தெரியாதா ?

சங். அ—அ—அதான் தெரியாதுங்கிறனே. சும்மா ! சும்மா கேட்டா !

[நகைக்கிறார்கள்.]

சிங். நீர் ஏதாவது நகை பண்ணிக் கொடுத்தீரா ?

சங். பத்து வருஷத்திற்கு முந்தி யுண்டுங்க.

[நகைக்கிறார்கள்.]

கிரு. பின் நீரேன் வந்தீர் சாட்சி கூற ?

சங். நீ—நீ—நீ சும்மா வந்து நில்லு போது மென்றாருங்க.

நர. நீர் போம்.

[போகிறான்.]

5 வது சாட்சி அகிலாண்டமையர்—ஆஜரில்லை.

6 வதுசாட்சி கிருஷ்ண நாயுடு—ஆஜரில்லை.—

பிரதிவாதி—சிவப்பிரியை யம்மாள் !

சே. சிவப்பிரியை யம்மாள் !

[உரத்துக் கூப்பிடுகிறான்.]

சிவப்பிரியை யம்மாள் பிரவேசிக்கிறாள்.

நர. அம்மா ! நான் சொல்வதைச் சொல்லுங்கள்.
சர்வ................சத்தியம்.

[சிவப்பிரியை யம்மாள் கூறுகிறாள்.]

கோர். தங்களுடைய பேர்தானா சிவப்பிரியை யம்மாள் ?

சிவ. ஆமாம்.

**கோர்.** ஜானகிராமையர் உமக்கு என்ன உறவாக வேண்டும்?

**சிவ.** என் பெரிய நாத்தனார் பிள்ளை.

**கோர்.** இவருக்கு உங்கள் பெண்ணைக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் நடந்த துண்டா?

**சிவ.** உம்—

கேள்வி

**கிரு.** உங்கள் பெண்ணை ஜானகிராமையருக்குக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் நடந்த துண்டா?

**சிவ.** என் புருஷனிருந்த காலத்தில் நடந்த துண்டு.

**கிரு.** அவர் இறந்து எத்தனை வருஷமாகிறது?

**சிவ.** நாளை ஆனிமாதம் முடிந்தால் வருஷம் இரண்டாகப் போகிறது.

**கிரு.** ஜானகிராமையர் உங்களிடம் உங்கள் புருஷ னிறந்த பிறகு ரூபாய் கொடுத்ததாகச் சொல்லுகிறரே! தாங்கள் வாங்கின துண்டா?

**சிவ.** என் புருஷன் இறந்தபிறகு நான் அவனிடம் ரூபாய் வாங்கினதே யில்லை.

**கிரு.** வேறு எக்காரணம் பற்றியாவது வாங்கின துண்டா?

**சிவ.** பெண் கேட்டதற்குக் கொடுக்க இஷ்டமில்லை யென்று சொல்லிவிட்டேன். நான் ஒரு ரூபாய்கூட அவனிடம் வாங்கவில்லை.

குறுக்குக் கேள்வி

**சிங்.** உங்கள் பெண்ணை ஜானகிராமையருக்குக் கொடுப்பதாக பிரஸ்தாபம் நடந்த துண்டா?

**சிவ.** என் புருஷனிருந்த காலத்தில் நடந்த துண்டு.

**சிங்.** அப்பொழுது நீங்கள் ஜானகிராமையரிட மிருந்து ரூபாய் வாங்கின துண்டா?

கிரு. (சிங்கமையங்காரைப் பார்த்து) ஜானகிராமையர் இந்தம்மாள் வைதவ்ய மடைந்த பிறகு கொடுத்ததாகக் கூறுகிறார். நீங்கள் கணவனிருந்தபோது வாங்கினதுண்டாவென்கிறீர்; இதென்ன கேள்வி?

கோர்.(சிங்கமையங்காரைப் பார்த்து) உஸ்!

[முகத்தைச் சுளிக்கிறார்.]

சிங். ஓ! பிறகு வாங்கின துண்டா?

கோர்.நீங்கள் சென்ற வருஷம் ஐப்பசிமாதம் மங்கலம் போயிருந்ததாகவும், அங்கு உங்களிடம் பெண்ணுக்காக ரூபாய் கொடுத்ததாகவும் கூறுகிறாரே ஜானகிராமையர்?

சிவ. (கண்ணீர் விடுகிறாள்) ஐயா! நான் என் புருஷனையிழந்து அப்பொழுது மாதம் மூன்றுகூட ஆகவில்லை. அப்பொழு தேன் நான் இந்தப் பாவி ஊருக்குப் போகிறேன்? அப்படியும் வெளிப்படுவாருண்டா பிராமணஜாதியில்?

சிங். கல்யாண அவசரத்தை முன்னிட்டுப் போயிருந்தால்?

[கோர்ட் நகைக்கிறது. எல்லோரும் நகைக்கிறார்கள்.]

கிரு. கோர்ட் கவனிக்க வேண்டும்.

கோர்.ஆம்! மேலே—

நர. அம்மா! நீங்கள் போங்கள். [போகிறாள்.]

2-வது பிரதிவாதி—வனஜாக்ஷியம்மாள்!

சே. வனஜாக்ஷியம்மாள்! [சேவகன் கூப்பிடுகிறான்.]

வனஜாக்ஷி பிரவேசிக்கிறாள்.

நர. சர்வ..........சத்தியம் என்று சொல்லம்மா.

[வனஜாக்ஷி சத்தியங் கூறுகிறாள்.]

உன் பெயரென்ன? வனஜாக்ஷியா?

வன. ஆம்! வனஜாக்ஷி தான்.

கேள்வி

கிரு. ஜானகிராமையருக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகப் பேசி உன் தாயார் ரூபாய் வாங்கின துண்டா?

வன. இல்லை; அவருக்குப் பெண் கொடுக்க என் தாயார் சம்மதிக்கவில்லை.

கோர். பெண்ணே! ரூபாய் வாங்கவில்லை யென்பது ஒருபக்க மிருக்கட்டும். ஜானகிராமையர் உனக்கு அத்தான் தானே. அவருக்கு ஏன் வாழ்க்கைப்படக்கூடாது?

வன. எனக்கு அவருக்கு வாழ்க்கைப்பட இஷ்டமில்லை?

[நகைக்கிறார்கள் எல்லாரும்.]

கோர். ஏனம்மா இஷ்டமில்லை?

வன. (தலை குனிந்த வண்ணத்தில்) இஷ்டமில்லை யென்றால், ஏன் என்கிறீர்களே!

கோர். அவரென்ன நொண்டியா? கூனா? குருடா? அல்லது கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டிய முறை கிடையாதா?

வன. ஆம்; நொண்டியில்லை. கூன் குருடில்லை. பாத்தியமு முண்டு. இவ்வளவெல்லா மிருந்தும் இங்கு வந்திருக்கிறாரே என் சித்தப்பா இவர் தமது பெண்ணை இவருக்குக் கொடுக்காமல் இவர் தம்பிக்குக் கொடுத்திருக்கிறார். அதில் தான் எனக்குப் பெரிய சந்தேகம். தவிர இவர் பேரில் இஷ்டமில்லை.

[நகைக்கிறார்கள்.]

கோர். உம்! அப்படியே! சரி.

கிரு. (கோர்ட்டைப் பார்த்து) இன்னொரு அதிசயம்! உத்தரவாக வேண்டும்.

கோர். (சிரித்துக் கொண்டே) என்ன?

கிரு. ஜானகிராமையர் என்னும் வாதி இப்பெண்ணைத் திருட்டுத்தனமாய் விவாகஞ் செய்துகொள்ள வெண்ணி வேண்டிய பிரயத்தனங்கள் வேறு செய்திருக்கிறார்.

கோர். ஓகோ! அப்படியா? ஏனம்மா!

வன. (தலைகுனிந்த வண்ணத்தில்) ஆமாம்!

கோர். எப்படி! கொஞ்சம் சொல்.

வன. சென்ற வைகாசிமாதம் நானும் என் அத்தையுமாக புத்தூரிலுள்ள என் அக்காள் வீட்டுக்கு வந்து அப்படியே என் அத்தையுடன் மங்கலத்திற்கு இவருடைய தம்பி சாந்தி முகூர்த்தத்திற்குச் சென்றோம். சாந்தி முகூர்த்தம் நாலுநாளிருக்க அங்கே போனோம். என் அத்தை மோசமாக அழைத்துக்கொண்டு போனாளென்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. அந்த சாந்திமுகூர்த்தத்தோடு விவாகம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதை நா னறியேன். எந்த ஜன்மத்தில் செய்த புண்ணியவசத்தாலோ சாந்தி முகூர்த்தத்திற்கு இரண்டுநாளிருக்கையில் ஒருநாள் சாயந்திரம் அவ்வீட்டுப் புறக்கடைப் புறம் போனேன். அங்கு அடுத்தவீட்டு அம்மாள் என்னைக் கண்டழைத்து இவர்களுடைய வஞ்சகமான ஏற்பாட்டை என்னிடம் சொன்னாள். நான் அதைக் கேட்டதும் சொல்ல முடியாத துக்கமுற்றுத் தப்புவிக்க வேண்டுமென்று அந்தம்மாளை வேண்டினேன். அந்தம்மாள் அன்றிரவு அவ்வூரில் நடந்த பஜனைக்கு இரவு ஒன்பது மணிக்கு எங்கள்

வீட்டாரோடு வந்திருக்கச் சொன்னாள். நான் அப்படியே போனேன். அங்கு அவளுடைய புருஷனை வரச் சொல்லி, அவரைக்கொண்டு என்னை அன்றிரவே புத்தூர் கொண்டுவந்து சேர்க்கச்செய்தனள். அதனால் தப்பினேன்.

[எல்லோரும் மூக்கில் கை வைக்கிறார்கள். சுந்தரமையர் விழிக்கிறார். ஜானகிராமையர் பனைமரமாய் நிற்கிறார். கோகர்ண தீக்ஷிதர் தூரப்போய்க் குலுங்க நகைக்கிறார்.]

**கோர்.** அம்மா! நீ போ! சரி. [போகிறாள்.]

(சுந்தரமையரைப் பார்த்து) ஏங்காணும் நீர் இவருக்கு உமது பெண்ணைக் கொடாமல் இவருடைய தம்பிக்குக் கொடுத்தீர்? இவரும் உமது தமக்கை பிள்ளைதானே.

**சுந்.** இவன் அப்பொழுது எங்கேயோ போய்விட்டான். நாலுவருஷம் வராமலே யிருந்துவிட்டான். அதனால்—

**கோ.** இப்பொழுது உமக்கேனும் உமது பிள்ளைக்கேனும் பெண்ணிருந்தால் இவருக்குக் கொடுக்கச் சம்மதிப்பீரா?

**சுந்.** சம்மதிப்பேன். ஈடுபோதாது.

**கோர்.** இந்தப் பெண்ணுக்கும் இந்தப் பிள்ளைக்கும் ஈடு சரியோ? என்ன சம்மதிப்பேன்! நிறுத்துங் காணும் பேச்சை! யாரேனும் சிரிக்கப் போகிறார்கள்.

[சுந்தரமையர் தலை குனிந்து நிற்கிறார்]

ஓய் ஜானகிராமையர்! உமக்குக் கல்யாணம் முதலிற்

செய்விக்காமல் ஏன் உமது தம்பிக்குச் செய்வித்தார் உமது தந்தை?

ஜா. நான் ஊரிலேயே யிருப்பதில்லை. கொச்சி, மலையாளம், திருவாங்கூர், திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு அடிக்கடி சோதிடம் சொல்லப் போய்விடுவேன். அப்படிப் போயிருக்கும் ஒரு சமயம் அவனுக்கு கல்யாணம் நடந்துவிட்டது.

கோர். உமக்கு வயதென்ன?

ஜா. நாற்பத்துமூன்று நடக்கிறது.

கோர். நீரேன் இதுவரையில் கல்யாணஞ் செய்துகொள்ளவில்லை.

ஜா. அப்பொழுதெல்லாம் கல்யாணத்தில் எனக்கு விசேஷமாகப் பிரியமில்லை.

கோர். உமக்குப் பிரியமில்லை, அதனால் நீர் கல்யாணஞ்செய்துகொள்ள யத்தனிக்கவில்லையல்லவா?

ஜா. ஆம்!

கோர். அப்படித்தானே எல்லாருக்கும்?

ஜா. ஆமா! தடையென்ன இருக்கிறது.

கோர். அந்தப் பெண்ணுக்கு உம்மைக் கல்யாணம் செய்துகொள்ளப் பிரியமில்லையாம். நீரேன் பிரவேசிக்கிறீர்?

ஜா. சரி, ரூபாய்!

கோர். ரூபாய் நீர் கொடுத்தீரா?

ஜா ஆம்.

கோர். வெகு நன்று! உமது சாட்சிகள் நீர் ரூபாய் கொடுத்ததை நன்றாய் ருசுப்படுத்தினார்களே! நிறுத்தும் பேச்சை! வாயைமூடும்! ஓய்! இந்த வழக்கு வீண்

வழக்கென்றும், முழுப் பொய்யென்றும் தோன்றுகின்றமையால் வழக்கைத் தள்ளிவிட்டோம்.

ஜா. சரி, இங்கு நியாயங் கிடைக்காதென்பது எனக்கு முன்பே தெரியும். வேறுகோர்ட்டில் பார்த்துக்கொள்ளுகிறேன். கட்டுகளைக் கொடுக்க உத்தரவாக வேண்டும்.

கோர். எந்தக் கோர்ட்டிலும் உமக்கு நியாயங் கிடைக்காது, போம்.

[எல்லாரும் போகிறார்கள். கோர்ட்டு கலைகிறது.

நான்காவது அங்கம் முற்றிற்று.

# ஐந்தாவது அங்கம்.

## முதற் காட்சி

இடம்—குழித்தண்டலை—காவிரியாற்றங்கரை. காலம்—மாலை.

கிருபாசங்கரையரும் ராமாமிருதமையரும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

கிரு. மாமா! நேற்றுக் கோர்ட்டில் ஒரு வேடிக்கை.

ரா. மங்கலம் ஜானகிராமன் கொண்டுவந்த அந்தக் கேசு தானே? எனக்குத் தெரியும்.

கிரு. தெரியுமா? அந்த வழக்கைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. கோர்ட்டில் நடந்த வேடிக்கையைக் கூற வந்தேன். வனஜாக்ஷி யென்னும் அந்தப்பெண் என்ன தைரியமாய்ப் பேசினாள் தெரியுமா! அவ்வளவு

தைரியசாலியான பெண்ணை நான் இதுவரையிற் பார்த்ததே யில்லை. பாருங்கள்; மாஜிஸ்டிரேட் "பெண்ணே! உன் அத்தான் தானே கல்யாணம் செய்துகொள்வதற்கென்ன?" என்று கேட்டார். அந்தப் பெண் வெகுதைரியமாய் 'எனக்கு இஷ்டமில்லை' என்றனள். பிறகு மாஜிஸ்டிரேட் "ஏன் இஷ்டமில்லை?" என்று கேட்டார். அதற்கு அப்பெண், "இஷ்டமில்லை யென்றால்—ஏனென்று கேட்டால், என்ன சொல்வது?" என்று வெகு தைரியமாய்ப் பதில் சொன்னாள். இதைக் கண்டு மாஜிஸ்டிரேட் பெரிய ஆச்சரியம் கொண்டதன்றியும், வழக்கையும் பொய்வழக்கெனக் கண்டு தள்ளி விட்டார்.

ரா. தள்ளிவிட்டாரா? பேஷ்! என்னமாய் முடியுமோ வென்றிருந்தேன். நல்ல வேளை. அந்த ஜோஸியன் ஒன்றுக்கும் உபயோகமில்லாதவ னல்லவா? அவனுக்குப் பெண்டாட்டி என்று புவியில் பிறந்த எவளாவது வாழ்க்கைப்பட இசைவாளோ? அல்லது பெற்றோர்கள்தான் சம்மதிப்பார்களோ?

கிரு மாமா! அந்தப் பெண் முகத்தில் அழகு கொஞ்சுகிறது. நல்ல உயரம். உயரத்திற்குத் தகுந்த பருமன். வயது பதின்மூன்று என்கிறார்கள். பார்த்தால் 20-வயது பெண்போ லிருக்கிறாள்! மான்விழி போன்றதென்று ஸ்திரீகள் விழியை வர்ணிப்பார்களே! அதை நான் இந்தப் பெண்ணிடத்தில் தான் கண்டேன். அந்தச் சுந்தரி பேசும் பேச்சு எவ்வளவு இனிமை தெரியுமா! பேசும்போது பல் சிறிதும் தெரியாமலல்லவா பேசினள். மாஜிஸ்டிரேட்டே யல்லாமல் எல்லாரும் பிர

மித்துவிட்டார்கள். அங்கு வந்திருந்தவர்களில் வாதி வக்கீல் சிங்கமையங்கார். வாதி—இந்தப் பெண்ணின் சித்தப்பாவாம் ஒருவர். இவர்களுக்கு முகம் முகமாகவேயில்லை. மற்றவர்கள் வெகு சந்தோஷமாக இருந்தார்கள். அந்தப் பெண் கூண்டில் வந்து நின்றுகொண்டிருந்த அழகை நானென்னவென்று சொல்வேன்! தன் பாதப் பெருவிரலை நோக்கிய வண்ணத்தில் நாணத்துடன் நின்றுகொண்டிருந்தாள். மக்களைப் பெற்றவன் அதைப் பார்த்துச் சகியான். என்ன மாமா பாவம்! கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்துவதென்றால்........ இஃதன்றி இன்னும் கேளும். ஜானகிராமய்யன் இந்தப் பெண்ணை மோசமாகக் கல்யாணஞ்செய்ய எத்தனித்ததையும் அதிலகப்படாமல் தான் தப்பினதையும் மாஜிஸ்டிரேட்டினிடம் என்ன தைரியமாகச் சொல்லினள் தெரியுமா? ஆகா! ஒரு கேள்விக்கிட முண்டா! பிரசங்கமரிதான். மாமா! விசாரணையானதும் அப்பெண் கூண்டைவிட்டு இறங்கி நடந்து போயினள். ஆகா! அதுவல்லவா பெண்களின் நடை! பூமியில் கொஞ்சம் ஓசைப்படவேண்டுமே! மெதுவாய்ப் பூவினாலான கால் கொண்டு நடப்பதுபோ லிருந்தது. நகைக ளொன்றுமில்லை!!

ரா. அதுயாருக்கு, இயற்கையில் அழகில்லாதவர்க்கல்லவா? நான் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். நல்ல அழகுதான். அது நன்றாய்ப் படிக்கும். பாட்டும் நன்றாகப் பாடும். பேச்சில் சிறிதும் ஒச்சமிராது. அந்தப் பெண்ணை நீ யாரென்று நினைக்கிறாய். ஈரோடு ஈசுவரனுக்குச் சொந்தம்.

கிரு. அப்படியா? ஆகா! ஆபரணம் இவளிடத்தில் அழகைப் பெறவேண்டும். (மௌனம்) அப்படியா! (நடந்து கொண்டே) இரண்டாந் தாரமாகக் கொடுப்பார்களா?

ரா. கொடுக்காமல் என்ன செய்யப் போகிறார்கள்? பெண்ணுக்கு வயதாய்விட்டது. வரனையோ காணோம். யாருக்கு? உனக்கேவா?

கிரு. ஆமாம்; என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் யோசனையெப்படி?

ரா. செய்யலாம். பாதகமில்லை. நாளைக்கு நான் போய்ப் புத்தூர் சுப்பராய ஐயரைக் கண்டு பேசித் தீர்மானம் செய்து விடுகிறேன். இது ஒன்றும் பிரமாதமில்லை. நான் முடித்து விடுகிறேன்.

கிரு. நீங்கள் முடித்து விடுவீர்களென்பது தெரியும். எனக்கொரு சந்தேகம். அந்தப் பெண்ணின் சம்மதம் முதலில் பெறவேண்டும். ஏனென்றால் அந்தப் பெண் தனக்குச் சம்மதமில்லாவிட்டால் எவனையும் மணந்து கொள்ளாள் என்று நினைக்கிறேன். அதையும் நீர் விசாரித்துத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். என்றைக்குப் புறப்படுகிறீர்?

ரா. நாளென்ன? நாளைய தினமே புறப்படுகிறேன்.

கிரு. சரி, அப்படியே செய்யுங்கள். தங்களுடைய உதவி சமயத்திற்கு வந்து வாய்க்கிறது. அதுவும் உடுக்கை யிழந்தவன் கைபோல். அதுதான் விசேஷம். மாமா அவர்கள் குலகோத்திரமெப்படி?

ரா. நல்ல குலம். கோத்திரங்கூட எனக்குத் தெரியும். ஸ்ரீவத்ஸ கோத்திரம்.

கிரு. சரி, நம்ம கோத்திரமல்ல.

ரா. ஆமாமா, அது நிச்சயம்.

கிரு. சரி, நீங்கள் நாளையே போகவேண்டும். சந்திவேளை தவறிப் போகும்போ லிருக்கிறது. சந்தியாவந்தனம் செய்துவிட்டுப் பிறகு பேசுவோம்.

ரா. ஆகா! [போகிறார்கள் இருவரும்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—கிருபாசங்கரையர் வீடு. காலம்—காலை.

கிருபாசங்கரையரும், ராமாமிருதமையரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கிரு. ஏது போன மறுநாளே திரும்பிவிட்டீர்கள்!

ரா. வேலை முடிந்தால் நமக்கு அங்கென்ன வேலை!

கிரு. இப்பொழுது அவர்கள் வருவார்களோ? நிச்சயந்தானா?

ரா. ஆமாம். பெண்ணும் பெண்ணுக்குத் தமக்கையும் அவள் புருஷன் சுப்பராயரும் வருவார்கள். சுப்பராயருக்கு ஸர்வஸம்மதம் இந்த ஸம்பந்தங் கிடைப்பதில். இருந்தாலும் பெண்ணுக்கும் பெண்ணுடைய தமக்கைக்கும் வீட்டை வந்து பார்த்துப் பிறகு விவாகம் நிச்சயம் செய்யவேண்டு மென்பது கருத்து. அதற்காக வருகிறார்கள்.

கிரு. மற்ற விஷயங்களைப்பற்றி ஏதேனும் பேசினார்களோ?

ரா. எல்லாம் இங்கே வந்துதான். சம்மதிக்காம லென்ன

அவர்களுக்கு. வரனுக்குத்தான் பறக்கிறார்களே! அதுவும் நம்மைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

கிரு. மணி யென்ன இருக்கும்!

ரா. ஒன்பதிருக்கும். அவர்கள் வருகிற சமயம்.

கிரு. ஒன்பது மணிக்குள் வந்து விடலாமா?

ரா. என்ன இங்கிருந்து பத்து மைல் தூரம் தானே.

சுப்பராயர், தம்மனைவி, வன்ஜாக்ஷி இவர்களோடு பிரவேசிக்கிறார்.

கிரு. வரவேண்டும். நமஸ்காரம்.

[கைகுவித்துக் கும்பிடுகிறார்.]

ரா. வரவேண்டும். [ஆசனமளிக்கிறார்.]

[சுப்பராயர் மனைவியும் வனஜாக்ஷியும் ஒரு புறமாகப்போய் நிற்கிறார்கள். கிருபாசங்கரையர் தாயார் அவர்களை உபசரிக்கிறார்கள்.]

கிரு. என்றும் எதிர்பாராத சந்திப்பு இது.

சுப். ஆம், நம் எண்ணப்படி யொன்றும் ஆவதில்லை. எப்படி எப்படி நடக்கவேண்டுமென்பது ஏற்பாடோ அப்படி நடக்கிறது. நான் இன்று இவ்விடத்திற்கு வருவேனென்பதைச் சொப்பனத்திலும் எண்ணினதில்லை.

ரா. அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி வந்து சேரும். அது வழக்கந் தான்.

கிரு. சரி சந்தோஷம். என் மாமா தங்களுக்கெல்லாந் தெரிவித்திருப்பார். தங்கள் சம்மதமெப்படி?

சுப். ஆகா! என்ன அப்படிக் கேட்கிறீர்கள்! அங்கே எப்படி மனதோ அப்படித்தான் இங்கேயும்.

சிரு. சரி, சந்தோஷம்.

ரா. ஆத்திலே யெப்படி யிருக்கிறது ?

சுப். அதான் வந்திருக்கிறார்களே, கேட்டுக்கொள்ளலாம்.

கிரு. சரி! நான் விசாரித்துக்கொள்கிறேன். அம்மா !

[கூப்பிடுகிறார்.]

சுப்பாராயர் மனைவி வருகிறாள்.

கிரு. என்ன யோசனை ?

சு-ம. எங்களுக் கொரு யோசனையுமில்லை. தங்களுக்கென்று தான் அவளுக்கு இத்தனை நாள் கல்யாணமாகா திருந்ததுபோ லிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப் பாவி கையில் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டாளா? இவளை மீட்டது தாங்கள் ஆகையால் அவள் தங்களுக் குரியவளேயல்லது பின் யாருக்கு?

கிரு. நானென்ன சாதித்து விட்டேன்! எப்படி எப்படி நடக்க வேண்டுமோ அப்படித்தானே நடக்கிறது. இருக்கட்டும். அந்தப் பெண்ணைக் கூப்பிடுங்கள். நான் சில கேள்விகள் கேட்கவேண்டியதா யிருக்கிறது. அவள் என்னோடு பேசுவாள். இது முதல் தடவை யல்ல என்னோடு பேச வெட்கப்படுவதற்கு. போன வாரம் கேசு நடக்கும்போது என்னோடு நன்றாய்ப் பேசின பெண்தானே. அந்த வக்கீல் தான் நான். அந்த வனஜாக்ஷிதான் அவள். கூப்பிடுங்கள். விசாரிக்கவேண்டும்.

[கூப்பிடுவதற்குமுன் வனஜாக்ஷி வந்து தூண்மறைவில் நிற்கிறாள்.]

(வனஜாக்ஷியைப் பார்த்து) என்னைக் கல்யாணஞ் செய்து

கொள்ள உனக்குச் சம்மதந்தானா? நான் உன்னுடைய அத்தான் வயதிலும் ஐந்து வருஷமேனும் சின்னவனாகத்தா னிருப்பேன். அவரைப்போல் பிர்ம்மசாரி யல்ல.

[வனஜாக்ஷி நகைக்கிறாள். மற்றவர்களும் நகைக்கிறார்கள்.]

சுப். நல்ல பிர்ம்மசாரி, பெண் கொடுத்தால் கன்னிகாதான பல னுண்டு.

கிரு. உம். முதலில் கல்யாணமாய்த் தாரமிழந்தவன். குழந்தைகளும் இருவரிருக்கிறார்கள். நான் இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளவேண்டிய அவசியம் என் வீடு நிராதரவாக இருப்பது பற்றியே யல்லது வேறல்ல. கல்யாணம் செய்துகொள்ளப் பிரியமானால் சொல். ரூபாய் இரண்டாயிரம் பெறும் நகைகளிருக்கின்றன. அவைகள் தாம் போடமுடியும். என்ன சொல்லுகிறாய்?

வன. என் சிறு வயது முதல் படித்தகுணவானை மணந்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் என் மனதிலுண்டு. நான் அதை ஒருவருக்கும் சொல்லாமல் உலகமாதாவாகிய கௌரியம்மனிடம் கூறி வந்தேன். என் தந்தை யிறந்தபிறகு இந்தப்பாவி கையிலிருந்து நா மெப்படித் தப்புவோமென்ற கவலையால் மெலிந்தேன். சிறுவயது முதல் நான் கொண்டிருந்த தைரியந்தான் என்னைக் காத்தது. கோர்ட்டில் என்னை மறந்து பேசினேனே யொழிய என் நினைவோடு பேசவில்லை. அச்சமயம் எனக்குத் துணைபுரியக் கருதி ஈசுவரியே தாங்களாக வந்ததென நினைத்தேன். ஆனால் தங்க

ளுக்கு மாலையிடவேண்டுமென்று அப்பொழுது நினைத்திலேன். பாம்பின் வாய்ப்பட்ட தேரையைப் போல் வாடிய என்னை அந்தப் பாம்புக்குக் கருடனாக வந்து எப்படிமீருட்டருளத் திருவுள மிரங்கியதோ அவ்வாறே இப்போது நாதனின்றி நிற்கும் இவ்வேழையை ஏற்றுக் கொள்ளத் திருவுளமிரங்கவேண்டும். ஆகையால் வேறு எந்த விஷயமாயும் என்னைக் கேள்வி கேட்கவேண்டாம். தாங்கள் எனக்கு நகை போட்டாலும் போடாமல் நிறுத்தினாலும் சரியே. அதைப்பற்றி நினைப்பது இந்த ஜன்மத்திலில்லை. நான் குணத்தைப் பெரிதாகக் கொண்டவள் என்பதை இன்று தங்களிடம் துணிந்து கூறுகிறேன்.

கிரு. சரி, பரம சந்தோஷம். என்னுடைய இரண்டு குழந்தைகளையுங் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையதாக விருக்கிறதே. இதைப் பற்றியோ ?

வன. எப்பொழுது நான் தங்களுக் குரியவ ளாகிறேனோ அப்பொழுது குழந்தைகளைப் பற்றிக் கேட்பானேன் ? என்னுடைய குழந்தைகளல்லவா அவைகள்.

[எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள்.]

கிரு. சுப்பராயர்வாள்! முகூர்த்தம் இங்கேயே நடத்திவிடலாம். நீங்கள் உங்கள் பந்து ஜனங்களோடு வந்திருந்து நடத்தவேண்டிய சிரமமொன்றை வகித்தால் போதும். மற்றபடி எல்லாச் செலவையும் நான் வகிக்கிறேன்.

சுப். சரி, தங்களிஷ்டம். அவர்களுக்குக் கைச் செலவுக்கு.

கிரு சரி நடத்துகிறேன். ஐந்நூறு ரூபாய் போதுமா?

சுப். போதும்!

கிரு. சரி, எல்லாம் மாமாவிடம் பேசிக்கொண்டு முகூர்த்தம்

ஒரு வாரத்தில் நடக்க ஏற்பாடு செய்யுங்கள். மணி யாகிறது. நான் கச்சேரி போகவேண்டும். [போகிறார்.]

சுப். நீங்கள் போங்கள். இனி தடையிராது.

## மூன்றாம் காட்சி

இடம்—குழித்தண்டலை. கிருபாசங்கரையர் வீடு. கல்யாண மண்டபம்

காலம்—காலை.

கிருபாசங்கரையரும், வனஜாக்ஷியும் மணக்கோலத்தோடிருக்கிறார்கள். மாலை மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

பிரா. தீர்க்காயுஷ்யமான்பவந்து. [அட்சதை போடுகிறார்கள்.]

ஸ்திரீகள்— [மங்களம் பாடுகிறார்கள்.]

### மங்களம்.

போத னாதி தேவர் போற்றும் புங்க வர்க்கு மங்களம்
புவன மெங்கு மாகி நின்ற பூர ணர்க்கு மங்களம்
வேத நான்கும் தேடு மாதி விமல னுக்கு மங்களம்
வேண்டிச் சுப்ர மண்யன் பரவும் வேலனுக்கு மங்களம்.

### வாழ்த்து.

### விருத்தம்.

ஒருபரம் பொருளின் றன்மை யுணருமெய்ப் போத நல்கும்
அருமறை முறைதி றம்பா தவனிவாழ்ந் திடுக வானம்
தரைவளந் தருக வாசான் சரணிணை முடிமேற் கொண்டு
வரகவி சுப்ர மண்யன் வருத்த நூல் வாழ்க மாதோ.

வனஜாக்ஷி

முற்றிற்று.